இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள்: 24

சுடர் 32 | கதிர் 181 | வள்ளுவர் ஆண்டு 2048 | வைகாசி 12 வெள்ளிக்கிழமை 26.05.2017

## ரயிலுடன் மோதுண்டு குடும்பத்தலைவர் சாவு

முறிகண்டியில் நேற்றிரவு பரிதாபம்

கிளிநொச்சி, மே 26

முல்லைத்தீவு, முறிகண்டிப் பகுதியில் நேற்றிரவு 8.30 மணியளவில் தொடருந்துடன் மோதுண்டு குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்தார் என்று >> 04

## வழிநடத்தல் குழு உறுப்பினர்களுக்கு வாய்ப்பூட்டு!

ஊடகங்களுக்கு தகவல் வழங்கத் தடா

கொழும்பு, மே 26

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிநடத்தல் குழுவில் நேற்றுக் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன என்று தெரியவருகின்றது. அத்துடன் கூட்டத்தில் பேசப்படும் விடயங்கள் தொடர்பில் ஊடகங்களிடம் மூச்சும் காட்டக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக >> 21



## மங்கள, ரவி பொறுப்பேற்பு

கொழும்பு, மே 26

அமைச்சர்களான மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க ஆகியோர் தமது அமைச்சுக்களை நேற்றுப் பொறுப்பேற்றுக் >> 04

## விபத்தை ஏற்படுத்திய பஸ் மீது தாக்குதல்; பெண் உட்பட 15 பேர் ஊர்காவற்றுறையில் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், மே 26

ஊர்காவற்றுறையில் ஒரே நாளில் பெண் உட்பட 15 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். >> 21

## வெலிவேரிய துப்பாக்கிச் சூடு; பிரிகேடியர் தேசப்பிரிய சி.ஐ.டியால் நேற்று கைது

கொழும்பு, மே 26

சுத்தமான குடிதண்ணீரைக் கேட்டுப் போராட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தக் கட்டளையிட்ட குற்றச்சாட் டில் பிரிகேடியர் அனுர தேசப்பிரிய குணவர்த்தனவைக் குற்றப் >> 21

## வடக்கு - கிழக்கில் மேலும் 3000 ஏக்கர் விரைவில் விடுவிப்பு

சபையில் கூறியது அரசு

கொழும்பு, மே 26

கூட்டாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் 5ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளது. மேலும் 3 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்க நடவடிக்கை >> 21

## குளத்தில் மூழ்கி இளைஞர் சாவு

கிளியில் சம்பவம்

யாழ். மே 26

கிளிநொச்சி கனகாம்பிகைக் குளத்தில் நண் >> 21

## தமிழர் இனியும் பொறுத்திரார் தீர்வுக்கு அரசை அழுத்துங்கள்

சுவீடன் நாட்டுப் பிரதிநிதியிடம் சம்பந்தன் நேரில் எடுத்துரைப்பு



கொழும்பு, மே 26

தமிழர்கள் பொறுமை காக்கும் வரையில் பொறுமை காத்து விட்டார்கள். இனியும் அவர்களால் பொறுத்திருக்க முடியாது. தமிழ் மக்களின் அன்றாட மற்றும் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு வழங்கப்படவேண்டும். >> 04

## கிணற்றுடன் ஆயுதங்களை வெடிக்கவைக்கத் தீர்மானம்

தையிட்டிப் பகுதி மக்களை இன்று அங்கு செல்லவேண்டாமெனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

மக்கள் மீள்குடியமர்வுக்கு அண்மையில் அனுமதிக்கப்பட்ட தையிட்டிப் பிரதேசக் கிணற்றிலிருந்து தொடர்ச்சியாகப் பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுவந்த நிலையில், எஞ்சிய ஆயுதங்களை மீட்க முடியாமையால் அவற்றை இன்று வெடிக்க வைத்து அழிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. >> 21

## இனவாதத்தைக் கக்கி வந்த ஞானசார தேரர் கைது அச்சத்தால் தலைமறைவு

வெளிநாட்டுக்குத் தப்பாதிருக்கத் தடை உத்தரவு

தீவிர தேடுதலில் பொலிஸ் குழுக்கள் களமிறக்கம்

யாழ்ப்பாணம், மே 26

இனவெறுப்புப் பரப்புரைகளை மேற்கொண்டு, முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களைத் தூண்டி வந்த பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமறைவாகியுள்ளார். அவரைக் கைது செய்வதற்குப் பலபொலிஸ் குழுக்கள் தேடுதலில் ஈடுபட்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் பிரியந்தஜெயக்கொடி தெரிவித்துள்ளார்.

குழப்பம் விளைவித்தல், பொலிஸாருக்குத் தடையை ஏற்படுத்தி அச்சுறுத்தியமை இன மற்றும் மத >> 21



## தூதுவருக்குத் தவறான தகவல் வழங்கினார் வடக்கு முதல்வர்

எதிர்க்கட்சித் தலைவர் சபையில் சாடல்

யாழ்ப்பாணம், மே 26

சுன்னாகம் நிலத்தடி நீரில் கழிவு ஒயில் கலந்தமை குறித்து முறையாக ஆய்வு செய்யாதவர்களின் பொய்யான கதையைக் கேட்டு பிரிட்டன் தூதுவருக்கு, ஒயிலின் அளவு குறைவாகவே உள்ளதால் அபாயம் இல்லை எனத் தவறான கருத்தைச் சொல்லியுள்ளீர்கள் என்று வடக்கு முதலமைச்சரைச் சபையில் சாடினார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா. >> 04

## அமைச்சர்கள் மீதான விசாரணை அறிக்கை ஜூன் 6 வெளிவரும்

வடக்கு முதலமைச்சர் அறிவிப்பு

யாழ். மே 26

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கை எதிர்வரும் ஜூன் 6 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். வடக்கு >> 21

## மாலை 6 மணிக்குப் பின்னர் தனியார் வகுப்புகளுக்கு தடை

வடக்கு மாகாண சபையில் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு மாகாணத்தில் இயங்கும் தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணிக்குப் பின்னரும் காலை 6 மணிக்கு முன்னரும் செயற்படுவதை நிறுத்தவேண்டும். வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் விடுமுறை வழங்கவேண்டும் எனவும் >> 04

## காங்கேசனில் விடுவித்த பகுதி கிணற்றில் 2 மோ. சைக்கிள்கள்

உடனே அங்கு விரைந்த இராணுவத்தினர் இலக்கத் தகடுகளைப் பிடுங்கிச் சென்றனர்

யாழ்ப்பாணம், மே 26

காங்கேசன்துறையில் இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட கிணற்றுக்குள் இருந்து இரு மோட்டார் சைக்கிள்கள் மீட்கப்பட்டன. அங்கு விரைந்த இராணுவத்தினர் என்று கூறியவர்கள் அந்த மோட்டார் சைக்கிள்களின் இலக்கத்தகடுகளைப் >> 21



## விக்கியைக் கைது செய்தால் சரணடைவாராம் ஞானசாரர்

யாழ்ப்பாணம், மே 26

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனைக் கைது செய்தால், பொதுபலசேனாவின் பொதுச் செயலர் ஞானசார தேரர் சரணடைவார் என்று, அந்த அமைப்பு கொழும்பில் நேற்று நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியுள்ளது.

பொதுபலசேனா அமைப்பின் பிரதிநிதி, மாகல்கந்தே சுத்த தேரர் செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது;

புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள சட்டத்திற்கு அமையவே ஞானசார தேரரைக் கைது செய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப் >> 21

## மனைவியை வன்புணர்ந்த கணவனுக்குத் தண்டனை

16 வயதில் நடந்த சம்பவத்துக்கு மூன்று பிள்ளைகளின் தந்தையான பின் ஒத்திவைத்த கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மே 26

மனைவியை 16 வயதில் வன்புணர்வுக்குட்படுத்தியதற்காகக் கணவனுக்கு 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 ஆண்டு கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. சம்பவம் >> 21

12 மாத நிலையான வைப்பு

13.25%

வ.வி.வீ. 13.25%

இப்பொழுது உங்களுடைய நிலையான வைப்பிற்கு அதிகபட்ச வட்டி வீதம்

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000

அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து நிலையான வைப்பு கணக்கினை ஆரம்பியுங்கள்.

www.dfcc.lk

ரூ. 25,000 இலிருந்து ரூ. 10 மில்லியன் வரை, நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி

உங்கள் வளர்ச்சிக்கு

# வடக்கு - கிழக்கிலுள்ள காணிப் பிரச்சினைக்கு சிறப்பு வேலைத்திட்டம்

## அமைச்சுப் பதவியை இன்று பொறுப்பேற்கின்றார் கயந்த



கொழும்பு, மே 26

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள காணிப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காணச் சிறப்பு வேலைத் திட்டங்கள் வகுக்கப்படும் என்று காணி மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

ஊடகத்துறை மற்றும் நாடாளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சராக இருந்த கயந்த கருணாதிலகவுக்கு அமைச்சரவை மாற்றத்தின்போது காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. நாடாளுமன்ற மறுசீரமைப்பு அவர் வசமே இருக்கின்றது.

இன்று காலை அவர் காணி அமைச்சில் தனது கடமைகளை அனைத்துமத வழிபாட்டுடன் ஏற்கவுள்ளார். அதன்பின்னர் சிறப்பு ஊடகவியலாளர் மாநாடொன்றையும் நடத்தவுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாடு முடிவடைந்த பின்னர், தமிழ் ஊடகவியலாளர்கள் சிலர், வடக்கு - கிழக்கில் நிலவும் காணிப் பிரச்சினை பற்றியும், வடக்குக்கான பயணத்தை எப்போது ஆரம்பிப்பீர்கள் என்றும் அமைச்சரிடம் கேட்டனர்.

இதற்குப் பதிலளித்த அவர், "நாட்டில் காணிப்பிரச்சினை முக்கிய பிரச்சினையாக இருக்கின்றது. அதைத் தீர்க்கப் பெரும் வேலைத்திட்டங்கள் அவசியம். நாளை (இன்று) அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் ஊடகவியலாளர் மாநாடு நடத்தப்படும். அதன்பின்னர் அறிவிப்புகள் உத்தியோகபூர்வமாக விடுக்கப்படும். அதிகாரிகளைச் சந்திக்க வேண்டும். பிரச்சினைகளின் தன்மையை ஆராய வேண்டும் - என்றார். (த-4)

# நினைவேந்தலில் இடையூறுக்கு மன்னிப்புக் கோரியது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், மே 26

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு பொது மக்களிடம் வடக்கு மாகாண சபை மன்னிப்புக் கோருவதாக அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபையில் நேற்று அறிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மாகாண சபையின் அறிவித்தல்களை அறிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

"2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக கொன்று குவிக்கப்பட்ட எமது உறவுகளை நினைவுகூர கடந்த 18 ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் குறுக்கீடு செய்து குழப்பிய அநாகரிகச் செயலை இந்தச் சபை வன்மையாகக் கண்டிக்கின்றது. இதனால் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு பொதுமக்களிடம் எமது கவலையையும் மன்னிப்பையும் கோருகின்றோம்" என்று அவைத் தலைவர் தெரிவித்தார். (வ-8)

## ஞானசார தேரருக்கு கொலை மிரட்டலாம்

### பாதுகாப்பு வழங்குமாறு கோருகிறது பொதுபலசேனா

கொழும்பு, மே 26

பொது பலசேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலகொடத்தே ஞானசார தேரருக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் விசாரணை நடத்தி ஞானசார தேரருக்குப் பாதுகாப்பு வழங்குமாறும், பொதுபல சேனா அமைப்பு கோரியுள்ளது.

பொலிஸ்மா அதிபருக்கு இது தொடர்பில் அந்த அமைப்பு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இனவாத மதவாத முறுகல்களை ஏற்படுத்தி இதன் ஊடாக ஞானசார தேரருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகின்றது. சிறையில் தண்டனை அனுபவித்து வரும் பாதாள உலகக் குழு உறுப்பினர்களைப் பயன்படுத்தி ஞானசார தேரருக்கு உயிர் ஆபத்தை ஏற்படுத்தத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. வேற்று மதமொன்றின் மீது தாக்குதல் நடத்தி அந்த இடத்தில் ஞான சாரருக்கு ஆபத்து ஏற்படுத்த முயற்சிக்கப்படுகிறது. ஞானசார தேரருக்கு ஏதேனும் ஆபத்து ஏற்பட்டால் அதற்கான பொறுப்பை அரச தலைவர், தலைமை அமைச்சர் மற்றும் அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றுள்ளது.

(த-5)

## வேலைதேடும் பட்டதாரிகள் நடத்திய போராட்டத்துக்கு மாகாண சபை கண்டனம்

யாழ்ப்பாணம் மே 26

வடக்கு மாகாண சபைக்கு முன்பாக வேலைதேடும் பட்டதாரிகள் நடாத்திய போராட்டத்துக்கு வடக்கு மாகாண சபை கண்டனம் தெரிவித்தது.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபை அறிவித்தல்களை வெளியிட்டார். அதன் போதே மாகாண சபையின் மேற்படி கண்டனத்தை அவர் அறிவித்தார். "வடக்கு மாகாண சபையின் கடந்த அமர்வின் போது பேரவைச் செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடிய வேலைதேடும் பட்டதாரிகள் மாகாண சபையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். அது மட்டுமன்றி மாகாண சபை உறுப்பினர்களை உள்ளே நுழைய விடாது தடுக்கும் வகையில் சபையின் நுழைவாயில் களுக்கு முன்பாக அமர்ந்திருந்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் மாகாண சபை அமர்வில் கலந்து கொள்வதற்காக வந்திருந்த போதும் அவரையும் உள்ளே விடாது பட்டதாரிகள் தடுத்தனர். அதன் போது வடக்கு மாகாண முதலமைச்சர் வேலைதேடும் பட்டதாரிகளுடன் பிரச்சினைகள் தொடர்பில் தெளிவுபடுத்தினார். எனினும் முதலமைச்சரின் விளக்கத்தை கேட்க மறுத்த அவர்கள் முதலமைச்சரை உள்ளே அனுமதிக்க விடாது தடுத்தனர். இதனால் முதலமைச்சர் உட்பட சில உறுப்பினர்கள் சபை அமர்வில் கலந்து கொள்ள முடியாத நிலமை ஏற்பட்டது.

இந்தப் போராட்டத்தால் மாகாண சபையின் அமர்வு முழுமையாக நடத்த முடியாமல் தடைப்பட்டதுடன் மதியத்துடன் ஒத்திவைக்கப்பட்டது. வேலைதேடும் பட்டதாரிகளின் இவ்வாறான போராட்டங்களுக்கு மாகாண சபை தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்வதுடன், எதிர்வரும் காலங்களில் இவ்வாறான போராட்டங்களுக்கு இடமளிக்காது" என்று அவைத்தலைவர் தெரிவித்தார். (வ-8)

## "கேள்விகளை முன்வையுங்கள் பதில்களைத் தருவோம்"

### சிறப்பு அமர்வு குறித்து விக்கி கருத்து

யாழ்ப்பாணம் மே 26

"வடக்கு மாகாண சபை மற்றும் மாகாண அமைச்சுக்களால் முன்னெடுக்கப்பட்ட அபிவிருத்திகள் எவை? என்று ஆராயும் 2 நாட்கள் சிறப்பு அமர்வை நடத்த வேண்டுமானால், முதல் நாளில் எங்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளை முன்வையுங்கள். அவற்றுக்கு நாங்கள் இரண்டாம் நாளில் பதில்களைத் தருகின்றோம்"

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வில் மாகாண அமைச்சுக்கள் இதுவரை முன்னெடுத்த பணிகள் எவை? என ஆராய்வதற்குச் சிறப்பு அமர்வை நட வேண்டும் என்று உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

"மாகாண அமைச்சுக்கள் மற்றும் அமைச்சர்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் ஆராய நானும் மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் எழுத்துமூலமாக அவைத்தலைவரிடம் கோரியிருந்தோம்.

இது தொடர்பில் கூட்டப்படும் சிறப்பு அமர்வில் வடக்கு மாகாண அமைச்சு ஆற்றிய பணிகளை நாம் அனைவரும் ஆராய்வோம்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தார்.

"மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட விடயங்களை ஆராய்வதற்காகச் சிறப்பு அமர்வை நடத்துவதால் என்ன பயன்? எங்களால் முன்வைக்கப்படும் கேள்விகளுக்கு மாகாண அமைச்சர்கள், 'கொழும்பு அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். அவர்கள் எங்களுக்கு இன்னும் பதில் அனுப்பவில்லை. நிதியில்லை' என்று வழமையான அமர்வுகளில் வழங்கும் பதிலைத்தான் சிறப்பு அமர்விலும் கூறுவார்கள். எனவே சிறப்பு அமர்வை வீணாகக் கூட்ட வேண்டுமா?" என்று எதிர்க்கட்சி உறுப்பினர் தவநாதன் தெரிவித்தார்.

"தவநாதனின் கருத்துக்கு நானும் ஒத்துப்போகின்றேன். மாகாண சபையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் சபையில் கதைக்கும்போது, வழமையாக வழங்கும் பதில்களையே சிறப்பு அமர்வில் கூறப்போகின்றனர்.

எனவே இவ்வாறான சிறப்பு அமர்வில் எந்தப் பயனும் இருக்காது. அப்படியானால் மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்வோம். அதற்காக வேண்டுமானால் சிறப்பு அமர்வை நடாத்தலாம்" என்று ஆளும் கட்சி உறுப்பினர் இ.ஆர்னோல்ட் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பல வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளது. ஆனால் மாகாண சபை எதுவுமே செய்யவில்லை என்ற கருத்தே பரவலாக இருக்கின்றது.

ஆகவே நிச்சயமாக சிறப்பு அமர்வை நடத்த வேண்டும். மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் மற்றும் அபிவிருத்திகளை அந்த அமர்வில் நாம் பட்டியலிடுவோம். அவற்றை அந்த அமர்வில் ஆராய்வோம்" ஆளும் கட்சி உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

"வடக்கு மாகாண சபை ஆற்றிய செயற்திட்டங்கள் தொடர்பாக சிறப்பு அமர்வை ஆராய கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. ஆகவே முதல் நாள் அமர்வில் மாகாண சபை அமைச்சர்களிடம் கேட்க வேண்டிய கேள்விகளை முன்வையுங்கள். மறுநாள் அதற்குரிய பதில்களை நாம் வழங்குவோம்" என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாண சபை உறுப்பினர்களின் கருத்துக்களை கேட்டறிந்த வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போது வரை மாகாண சபையால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் என்ன? என்பது தொடர்பில் ஆராய சிறப்பு அமர்வொன்றை நடாத்த ஒழுங்கு செய்யப்படும் என்று அறிவித்தார். (வ-8)

# இனவாதக் குழுக்களுக்கு அடிபணியவே மாட்டோம்

## கொழும்பில் ஹக்கீம் சூளுரை



கொழும்பு, மே 26
சில இனவாதக் குழுக்கள் அரசின் உறுதித்தன்மையை இல்லாமல் செய்வதற்காக அடாவடிகளையும் அட்டகாசங்களையும் மேற்கொண்டு வருகின்றன. இதற்கு நாம் ஒருபோதும் அடிபணியவோ சரணாகதியடையவோ மாட்டோம். இவ்வாறு முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய தமிழ் இலக்கிய பொன்விழா நினைவுமலர் வெளியீடும் முஸ்லிம் காங்கிரசின் மாதாந்த சஞ்சிகையான சாட்சியம் சஞ்சிகையில் வெளியீடும், மீள் வடிவமைக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரசின் இணையத்தள அறிமுகமும் கொழும்பு மேல்மாகாண அழகியல் மன்ற கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.
இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய, மக்களைப் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு ஆட்சியாளர்களுக்கு உள்ளது. சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிராக குறிப்பாக முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெறும் சம்பவங்களுக்கு முடிவு கட்டாதுவிட்டால் நாட்டுக்குச் சுபீட்சம் எட்டாக்கனியாகிவிடும்.
நாம் எரிபொருள் கொடுப்பவர்களாக மாறாது பக்குவமாக இந்த விடயங்களை அணுகவேண்டும். இந்த பித்தலாட்டச் சம்பவங்களுக்கு முடிவு கட்டப்படாதுவிட்டால் முஸ்லிம் இளைஞர்கள் இன்று கொதித்துக் கொண்டிருப்பது போல் அதற்குப் பதிலடி கொடுக்கவும் தூண்டப்படலாம்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் முஸ்லிம் காங்கிரஸுக்கும் முடிச்சுப் போட்டு வங்குரோத்து அரசியல் செய்யச் சிலர் முற்பட்டுள்ளனர். முஸ்லிம் காங்கிரசை விமர்ச்சிப்பதே இன்று சிலருக்குத் தொழிலாக மாறியுள்ளது. எம்மைப் பொறுத்தவரை அதிகாரங்களைப் பகிர்வது தொடர்பிலும் சிறுபான்மைச் சமூகங்களின் நலன்களின் தொடர்பிலும்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் ஒருமித்து செயற்படவேண்டிய நிலை தோன்றியுள்ளது. இந்த உண்மை நிலை புரியாது வடக்கு-கிழக்கு இணைப்புக்குக் ஹக்கீம் சம்மதம் தெரிவித்துவிட்டார் எனத் தெற்கிலும் கிழக்கிலும் சிலர் விசமப் பரப்புரைகளை மேற்கொண்டுள்ளனர்.
கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணைந்தால் வடக்கையும் கிழக்கையும் எப்படி இணைக்க முடியும். இரு கட்சிகளையும் சேர்ந்த சுமார் 50 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அளவிலேயே நாடாளுமன்றத்தில் உள்ளனர். அவ்வாறானால் எப்படி வடக்கையும் கிழக்கையும் இணைக்க முடியும். இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளாமல் சிலர் இந்த விசமக் கூக்குரல்களை எழுப்புகிறார்கள். நாடு முழுவதும் முஸ்லிம்கள் மத்தியில் இன்று அச்சமும் பதற்றமும், பீதியும், ஆத்திரமும், ஆவேசமும் ஏற்பட்டுள்ளது. இதனை அரசு கவனத்தில் கொள்ள வேண்டியது முக்கியபொறுப்பாகும் - என்றார். (து-10-30)

# சுகாதார தொண்டர்களின் போராட்டம் தொடர்கிறது




வவுனியா, மே 26
நேற்று 22ஆவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள சுகாதாரத் தொண்டர்கள், தீர்வு வழங்கப்படும் வரை போராட்டத்தை கைவிடப்போவதில்லை என்று தெரிவித்தனர்.
வடக்கில் 15 வருடங்களுக்கு மேலாக பணியாற்றிய சுகாதார தொண்டர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரி கடந்த 4ஆம் திகதி வவுனியா பிராந்திய வைத்திய அதிகாரியின் அலுவலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர். போராட்டம் நேற்று 22ஆவது நாளாகவும் தொடர்ந்தது. (ற-21)

# ரயிலின் முன்பாய்ந்து மாணவி உயிர்துறப்பு

## மன்னாரில் துயரச் சம்பவம்

யாழ்ப்பாணம், மே 26
தவறான முடிவு எடுத்த மாணவி தொடருந்து முன்பாகப் பாய்ந்து தனது உயிரை மாய்த்தார்.
"அம்மாவின் பாசம் கிடைக்காத காரணத்தால் இந்த முடிவுக்கு வந்தேன்" என்ற விடயம் உட்பட 3 பக்கங்களில் அவர் எழுதிய கடிதம் ஒன்றை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தப் பரிதாபச் சம்பவம் மன்னார் வங்காலை ரயில் கடவையில் இருந்து மன்னார் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றது.
கொழும்பில் இருந்து தலை மன்னார் நோக்கிப் பயணித்த தொடருந்தின் முன்பாகவே மாணவி பாய்ந்து உயிரை மாய்த்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னாரில் பிரபல பாடசாலை ஒன்றில் உயர் தரத்தில் கல்வி கற்கும் தயாளினி என அழைக்கப்படும் சண்முகலிங்கம் மிதுலா என்ற மாணவியே உடல் துண்டான நிலையில் தண்டவாளத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.
தனது சொந்த இடமான முழங்காவிலுக்குச் சென்றுவிட்டு மன்னார் உப்புக்குளம் பகுதியில் உள்ள தனது உறவினர் ஒருவரின் வாடகை வீட்டுக்கு உடைகள் அடங்கிய பை ஒன்றுடன் சென்றபோதே சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த மாணவி எழுதியதாகக் கூறப்படும் 3 பக்கங்கள் கொண்ட கடிதம் மீட்கப்பட்டது.
மாணவியின் உடலம் குறித்த ரயிலிலேயே ஏற்றப்பட்டு மன்னார் சௌத்பார் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு, உடமைகள் சோதிக்கப்பட்டபோது மனதை வேதனைக்குள்ளாக்கும் வகையில் சுமார் 3 பக்கங்களைக் கொண்ட கடிதம் ஒன்று மீட்கப்பட்டது.
அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
எனக்கு மட்டும் பல்வேறு சோதனைகளும் வேதனைகளும் ஏற்படுகின்றன. எனது அம்மா என்னைத் தனியாகத் தவிக்க விட்டுள்ளார். அம்மா அம்மா என்று வலிந்து சென்றபோதும் கல் நெஞ்சம் கொண்ட அம்மாவாக அவர் நடந்து கொண்டுள்ளார்.
எனக்காக உள்ளவர்களுடன் சண்டையிட்டு என்னை அவர்களிடம் இருந்து பிரிக்க நினைக்கிறார். எனக்குத் துரோகம் செய்ய நினைக்கிறார். எனது சாவுக்கு யாரும் காரணமில்லை. எனது வாழ்க்கையில் சந்தோசம் இல்லை. இதன் காரணமாகவே இந்த முடிவை எடுத்துள்ளேன்என்றுள்ளது.
மாணவியின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாக் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவமும், குறித்த மாணவியின் கடிதமும் மன்னார் மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (து-4-56)

# 10 ஆடுகள் ஓரிரவில் வெட்டிச் சரிப்பு

யாழ்ப்பாணம், மே 26
வடமராட்சி வத்தராயான் பகுதியில் உள்ள வீட்டில் வளர்க்கப்பட்ட ஆடுகள் அனைத்தும் ஒரே இரவில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளன என்று மருதங்கேணி பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இரவு நடந்துள்ளது.
பெண்ணின் சுய தொழில் முயற்சியில் வீட்டில் ஆடு வளர்ப்பை மேற்கொண்டுள்ளார். அவருடைய வீட்டில் 10 ஆடுகள் நின்றுள்ளன. இனந்தெரியாதோரால் கடந்த 21 ஆம் திகதி இரவு 2 லட்சம் பெறுமதியான 10 ஆடுகளும் வெட்டப்பட்டன.
வெட்டப்பட்ட ஆடுகளை அப்படியே விட்டுசென்றுள்ளனர். என்ன நோக்கத்துக்காக இது நடைபெற்றது என தெரியவில்லை. இது தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-10- 26)

# கிழக்கு மாகாணப் பட்டதாரிகளின் கைதைக் கண்டித்துப் போராட்டம்

## பொதுமன்னிப்பு வழங்கி விடுவிக்குமாறு யாழ். வேலைதேடும் பட்டதாரிகள் கோரிக்கை



யாழ்ப்பாணம் மே 26
கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகளைப் பொதுமன்னிப்பு வழங்கி விடுதலை செய்யுமாறு கோரி யாழ்ப்பாண மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி கிழக்கு மாகாண வேலைதேடும் பட்டதாரிகள் மாகாண சபைக்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்த போது, பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தாத வகையில் போராட்டத்தை முன்னெடுக்குமாறு எழுத்து மூல ஆணை ஒன்றை நீதிமன்றம் பிறப்பித்திருந்தது.
பட்டதாரிகள் குறித்த நீதிமன்ற ஆணையைக் கிழித்து எறிந்தனர். இதனையடுத்து நீதிமன்ற ஆணையை அவமதித்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இதன் அடிப்படையில் கடந்த 23ஆம் திகதி அவர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் எதிர் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளன்ர்
கிழக்கு மாகாணப் பட்டதாரிகள் நீதிமன்றை அவமதித்தது குற்றம் தான். எனினும் அவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளித்துக் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை. செய்யுமாறு கோரி நேற்றுத் தாம் இந்தக் கவனவீர்ப்புப் போராடத்தில் ஈடுபட்டதாக யாழ்ப்பாண மாவட்ட வேலைதேடும் பட்டதாரிகள் தெரிவித்தனர். (து-ரி)

# 35 வயதுக்குக் குறைந்தோருக்கு ஓட்டோ லைசன்ஸ் கிடையாது

கொழும்பு, மே 26
முச்சக்கரவண்டிச் சாரதி அனுமதிப்பத்திரங்களை இனிமேல் 35 வயதுக்குக் குறைந்தவர்கள் பெறமுடியாதெனப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா அறிவித்துள்ளார்.
18 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முச்சக்கர வண்டிச் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படுவதால் விபத்துகள் அதிகரிப்பதாகவும், பொதுமக்களின் பாதுகாப்பை உத்தேசித்து இந்தச் சாரதி அனுமதிப் பத்திரத்துக்கான வயதெல்லையை 35ஆக உயர்த்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.
அமைச்சரின் இந்த அதிரடி உத்தரவால் முச்சக்கரவண்டிகளை நம்பி வாழ்க்கை நடத்தவுள்ள இளைஞர்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படுமெனவும், போக்குவரத்து அமைச்சர் எடுக்கும் இத்தகைய முடிவுகள் முன்னர் போலவே இப்போதும் பெரும் பிரச்சினைகளை உருவாக்கும் எனவும் அகில இலங்கை முச்சக்கரவண்டிச் சாரதிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (து-4)

இணுவில் அருள்மிகு
ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார்
திருக்கோயில்
வருடாந்த மஹோற்சவம் - 2017



எட்டாம் திருவிழா - தங்கச்சப்பறம்
இன்று (26.05.2017) வெள்ளிக்கிழமை
முற்பகல் 11.15 மணி
யானை வாகனங்களில் சுவாமி வீதியுலா
மாலை 7.00 மணி
விநாயகர், சுப்பிரமணியர் தங்கச்சப்பறத்தில் சுவாமி வீதியுலா

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## சுதேச மருத்துவ சபை உறுப்பினர்கள் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 26

தற்போது இயங்காது இருக்கும் இலங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியின் செயற்பாடுகளை மீள் வலுவூட்டுவதற்காக வடமாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்ட இடைக்கால முகாமைத்துவ சபை வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் உறுப்பினர்களின் விவரங்களை உறுத்திப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

சபையின் உறுப்பினர்கள் வட இலங்கை சுதேச மருத்துவ சபையின் உறுப்பினர்கள் எனக் கருதக் கூடிய பொருத்தமான ஆவணங்களுடன் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்துக்கு அலுவலக நேரத்தில் சமூகமளித்து உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரும் இடைக்கால முகாமைத்துவ சபையின் தலைவருமான இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.(ற-21)

## வீட்டு வாசலில் வர்த்தகரை தாக்கி ரூ.40 ஆயிரம் பறிப்பு

### திருநெல்வேலியில் புதன் இரவு சம்பவம்

யாழ்ப்பாணம், மே 26

வர்த்தக நிலையத்தைப் பூட்டிவிட்டு முச்சக்கரவண்டியில் வீடு திரும்பிய வர்த்தகரைப் பிறிதொரு முச்சக்கர வண்டியில் பின்தொடர்ந்த இளைஞர்கள், அவரைத் தாக்கிப் பணப் பையைப் பறித்துச் சென்றனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு திருநெல்வேலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

திருநெல்வேலி முடமாவடிப் பகுதியில் உள்ள தனது வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு நேற்று முன்தினம் இரவு 9.45 மணியளவில் மருமகனின் முச்சக்கர வண்டியில் வீடு திரும்பியுள்ளார் வர்த்தகர். அவர் அன்றைய விற்பனைப் பணத்தையும் எடுத்துச் சென்றார். வீட்டுக்கும் கடைக்கும் இடையில் 600 மீற்றர் இடைவெளியே உள்ளது.

வர்த்தகர் தனது வீட்டு வாசலில் சென்று இறங்கியவேளை சிவப்பு நிற முச்சக்கர வண்டி ஒன்றில் வந்த மூன்று இளைஞர்கள் ஓடிச் சென்று வர்த்தகர் பயணித்த முச்சக்கர வண்டியின் சாரதியைத் தாக்கியுள்ளனர். இதன்போது வர்த்தகர் முச்சக்கர வண்டியில் இருந்து இறங்கி ஓடினார். அவ்வேளை, அவரது கையில் இருந்த பணப் பையை பறித்துக்கொண்டு குறித்த இளைஞர்கள் தப்பிச் சென்றனர்.

அன்றைய விற்பனைப் பணமான 40 ஆயிரம் ரூபாவே இவ்வாறு கொள்ளையிடப்பட்டதாகக் குறித்த வர்த்தகர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார். பொலிசார் தீவிர விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் அதிக இடங்களில் சீ.சீ.ரி.வி. கமராக்கள் பொருத்தப் பட்டுள்ளமையால் அவற்றின் மூலம் முச்சக்கர வண்டியை இனம்காணும் முயற்சியில் கோப்பாய் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். (த-101)

## முகாம்களில் தஞ்சமடைந்த தமிழரின் தங்கங்கள் எங்கே?

### தகவலில்லை என்கிறது அரசு

கொழும்பு, மே 26

போரின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான சொத்துகள், தங்கம் மற்றும் ஆபரணங்கள் தொடர்பில் தம்மிடம் எந்தவொரு தகவலும் இல்லை என்று அரசு நேற்று தெரிவித்தது.

நாடாளுமன்றம் நேற்று வியாழக்கிழமை பிரதிச் சபாநாயகர் திலங்க சுமதிபால தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத்தாக்கல் ஆகியன முடிவடைந்த பின்னர் வாய்மூல விடைக்கான கேள்விச்சுற்று ஆரம்பமானது. இந்நிலையில், நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் நேற்று நான்காவது தடவையாகவும் இது தொடர்பில் கேட்கப்பட்டிருந்தது. இதற்கான பதிலை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாளிப்பு, மீள்குடியேற்ற மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் சபையில் சமர்ப்பித்தார். இந்தப் பதில்களிலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

"போரின் பின்னர் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெருமளவு தங்கம் எங்கேனும் நம்பிக்கைப் பொறுப்பில் வைப்பீடு செய்யப்பட்டதா?" என்று நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ கேள்வி எழுப்பினார். அதற்குப் பதிலளித்த சுவாமிநாதன்,

"போரின் பின்னர் அகதிகளாக்கப்பட்டவர்கள் தங்குவதற்கான வசதிகள் வவுனியா மாவட்டத்திலேயே மேற்கொள்ளப்பட்டன. இந்த மக்களது சொத்துக்கள் மற்றும் ஆபரணங்கள் குறித்து எந்தவித தகவல்களும் வவுனியா மாவட்ட செயலகத்திடம் இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் சுவாமிநாதன் பதில் அளித்தார்.

இதேவேளை, "தமது தங்கம் மற்றும் ஆபரணங்களைத் திருப்பிக் கொடுக்கவில்லை என மக்களின் முறைப்பாடுகள் எதுவும் கிடைக்கப்பெற்றுள்ளதா? இது தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? என வாசுதேவ எழுப்பிய மற்றொரு கேள்விக்கு, தகவல்கள் எதுவும் இல்லை எனவும், நடவடிக்கை எடுப்பது தனது அமைச்சுக்கு சம்பந்தப்பட்ட கேள்வி இல்லை எனவும் அமைச்சர் சுவாமிநாதன் பதில் அளித்தார். (த-4)

## நெடுந்தாரை ஓட்டுநர் பதவிக்கு ஆள்சேர்ப்பு

யாழ்ப்பாணம், மே 26

நெடுந்தாரகை பயணிகள் கப்பல் சேவைக்கான தலைமை ஓட்டுநர் பதவிக்கு ஆள்சேர்ப்பு செய்யப்படவுள்ளது.

வடமாகாண முதலமைச்சு செயலாளர் இந்த நியமனத்துக்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

நெடுந்தாரகை பயணிகள் கப்பல் சேவைக்கு நாடு தழுவிய ரீதியில் இருந்து தலைமை ஓட்டுநர் பதவிக்கான விண்ணப்பங்கள் கிடைக்குமிடத்து உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என முதலமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ற-50)

## ரவியின் பெயரில் போலிக் கீச்சகம்

கொழும்பு, மே 26

அயலுறவுத்துறை அமைச்சர் ரவி கருணாநாயக்காக, தனது பெயரில் போலிக் கீச்சகம் (ருவிற்றர்) உருவாக்கப்பட்டுள்ளதாகக் குற்றப் புலனாய்வுப் பிரிவில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார்.

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கீச்சகத்தில், இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் உயிரிழந்துள்ளார் எனப் பதிவிட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிய அயலுறவுத்துறை அமைச்சராக ரவி கருணாநாயக்க நேற்றுப் பதவியேற்றிருந்தார். இந்த நிலையில் அவரது பெயரில் கீச்சகம் உருவாக்கப்பட்டு அதில், இந்தியாவின் முன்னாள் தலைமை அமைச்சர் உயிரிழந்துள்ளதாகவும் அதற்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் பதிவிடப்பட்டிந்தது. இது தனது கீச்சகம் இல்லை என்று தெரிவித்துள்ள அயலுறவுத்துறை அமைச்சர், இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவிடம் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். (த-5)

## இ.போ.ச பஸ் மீது முள்ளியவளையில் நேற்றிரவு கல் வீச்சு

முல்லைத்தீவு, மே 26

முல்லைத்தீவு, முள்ளியவளைப் பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது விசமிகளால் கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலால் பேருந்தின் கண்ணாடி ஒன்று முற்றாக உடைந்துள்ளது. வவுனியாவிலிருந்து முல்லைத்தீவு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையின் முல்லைத்தீவு சாலைக்குச் சொந்தமான பேருந்து நேற்றிரவு 8 மணியளவில் முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரிக்கு முன்பாக பயணித்துக் கொண்டிருந்த போது விசமிகளால் கல் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் சாரதியின் பக்க வாட்டில் உள்ள கண்ணாடி உடைந்து சேதமடைந்தது. சாரதி காயம் ஏதுமின்றி தப்பித்துக்கொண்டார். சம்பவம் தொடர்பில் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன" என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-102)

## முதலாம் பக்கத்தொடர்ச்சிகள்...

### மங்கள...

கொண்டனர்.

கூட்டு அரசின் நிதி அமைச்சராகப் பதவி வகித்த ரவி கருணாநாயக்க, கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை மாற்றத்தின்போது அயலுறவு அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

புதிய நிதியமைச்சராக நியமிக்கப் பட்ட மங்கள சமரவீர இந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

நிதியமைச்சுக்குச் சென்ற மங்கள சமரவீர, ஆடம்பரம் இன்றி எளிய முறையில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இந்தநிகழ்வின்போது சிறப்பு விருந்தினர்கள் எவரும் கலந்து கொள்ளவில்லை. எனினும் மங்கள சமரவீரவின் சகோதரி ஜயந்தி குணவர்தன மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகள் கலந்துக் கொண்டனர். (த-4)

### மாலை...

வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சர்வேஸ்வரன் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மாகாண சபையின் 93 ஆவது அமர்வு நேற்று நடைபெற்றது. இதன்போதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது. தனியார் கல்வி நிலையங்களில் மாலை 6 மணிக்குப் பின்னர் கற்றல் நடவடிக்கைகள் நடைபெறுவதால் பல முறையற்ற சம்பவங்கள் நடைபெறுவதாகச் சுட்டிக்காட்டிய மாகாண சபை உறுப்பினர் சர்வேஸ்வரன், காலை 6 மணிக்கு முன்னர் தனியார் கல்வி நிலையங்கள் இயங்குவதையும் நிறுத்தவேண்டும். இதற்கு மாகாண சபை நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கோரினார்.

வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் தனியார் கல்வி நிலையங்களை நடத்தக் கூடாது எனவும் கோரிக்கை முன்வைக்கப் பட்டிருந்தது. இவை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. (த-8)

### தமிழர்...

அதற்குப் பன்னாட்டுச் சமூகம் அழுத்தம் கொடுக்கவேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கை, இந்தியா, பூட்டான், மாலைதீவு மற்றும் நேபாளத்துக்கான சுவீடன் வதிவிடப் பிரதிநிதி ஹரால்ட் சன்பேர்க், இரா.சம்பந்தனை நாடாளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் சந்தித்துப் பேசினார். இதன்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளதாக, இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்சினை முக்கியமானது. மீள்குடியமர்வு பூர்தியடையவில்லை. அரசியல் கைதிகள் முழுமையா விடுவிக்கப்படவில்லை. இராணுவப் பிரசன்னம் குறையவில்லை. காணாமற் போனோர் பிரச்சினை தீர்க்கப்பட வில்லை. கூட்டு அரசின் ஆட்சியைப் பொறுப்பேற்று 2 வருடங்கள் கடந்து விட்டன.

தமிழ் மக்கள் தங்களால் முடிந்தவரை பொறுமையாக இருந்து விட்டார்கள். இனியும் அவர்களால் பொறுமையாக இருக்க முடியாது. அவர்களின் பிரச்சினைகள் விரைந்து தீர்க்கப்பட வேண்டும். பன்னாட்டு சமூகம் இதற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்ததாகக் கூறினார் இரா.சம்பந்தன். (த-5)

### தூதுவருக்குத்...

சுன்னாகம் நீரில் ஒயில் கலந்தமை தொடர்பில் பிரிட்டன் தூதுவரிடம் முதலமைச்சர் கூறிய விடயங்கள் தொடர்பாக நேற்றைய அமர்வில் முதலமைச்சரிடம் வாய்மூலமான வினாக்களைக் கோரினார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

கடந்த வருடம் ஜூன் மாதம் பிரிட்டன் தூதுவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்தபோது தங்களைச் சந்தித்து யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர் மாசடைந்துள்ளமை தொடர்பான கரிசனையை வெளிப்படுத்தினாரா?, அவ்வாறு வெளிப்படுத்தியிருந்தால் வெளிநாடுகளில் நீர்ப் பரிசோதனைகளை செய்தவர்கள் யார்?, அவ்வாறு நீர் பரிசோதனைக்குப் பணிப்புரை வழங்கியது யார்?அவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்திய நீர் மாதிரிகள் எத்தனை?, அந்தப் பரிசோதனை அறிக்கையைச் சபையில் சமர்ப்பிக்க முடியுமா? அதற்கான செலவு எவ்வளவு? வழங்கியவர்கள் யார்?என முதலமைச்சரிடம் அடுக்கடுக்காக வினாக்களை முன்வைத்தார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர்,

பிரிட்டன் தூதுவர் யாழ்ப்பாணத்தில் நீர் மாசடைந்துள்ளமை தொடர்பில் அவர் தனது கரிசனையை வெளியிட்டிருந்தார். அதன்போது நான் சுன்னாகம் நிலத்தடி நீரில் கலந்துள்ள ஒயிலின் அளவு அபாய நிலையிலும் குறைவாகவே இருக்கின்றது எனக் கூறினேன்.

வ[illegible]பயின் விவசாய அமைச்சின் நிபுணர் குழுவின் அறிக்கையில் விவரம் உள்ளது. பரிசோதனை நிறுவனத் துக்கு பணிப்புரை வழங்கவில்லை. முழு விவரங்களும் நிபுணர்குழு அறிக்கையில் உள்ளதுஎன்றார்.

இதன்போது கருத்துரைத்த தவராசா, எவ்வித முறையான அனுமதியும் இல்லாமல் யாரோ 5 பேர் கொண்ட குழு சொன்னதை வைத்துக்கொண்டு ஒரு நாட்டின் தூதுவருக்கு நீர் மாசு தொடர்பில் எந்தப் பிரச்சினையும் இல்லை எனக் கூறலாமா? யாரும் அனுமதிக்காத நிபுணர் குழு அங்குள்ள 12 கிணறுகளை மட்டும் ஆய்வு செய்துவிட்டு முடிவுக்கு வரமுடியாது -என்றார். (த-8)

### ரயிலுடன்...

பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி பொன்னகரைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான தவமன்றன் பாலசூரியர் (வயது - 43) என்பவரே உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணத்திலிருந்து நேற்றிரவு கொழும்பு நோக்கிப் பயணித்த தபால் தொட[illegible]ருந்துடன் மோதுண்டதில் குடும்பத்[illegible] சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்[illegible] வம் இடம்பெற்ற பகுதியிலிருந்[illegible] தொடருந்தில் கொண்டு செல்லப்பட்ட[illegible] பத்தலைவரின் உடலம் மாங்குளம் [illegible]ருந்து நிலைத்தில் ஒப்படைக்கப்பட்டது. [illegible]பவம் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றன[illegible] (வ-6.35)

# யாழ். மாவட்ட உறுப்பினர்கள் பலர் சபையில் இருப்பதில்லை

## வடக்கு மாகாண சபை அமர்வில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம் மே 26
வடக்கு மாகாண சபை உறுப்பினர்களில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பாலானோர் சபை அமர்வுகளில் முழுமையாக இருப்பதில்லை என்று ஆளும் கட்சி உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையின் 93ஆவது அமர்வு அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது. பிற்பகல் அமர்வில் வடக்கு மாகாணத்தில் அடகு பிடிப்போருக்கான நியதிச் சட்டவரைவு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது. விவாதத்தில் சபையில் சில உறுப்பினர்கள் இல்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 16 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் முதலமைச்சர், அவைத்தலைவர், சி.அகிலதாஸ், க. சர்வேஸ்வரன், திருமதி அனந்தி சசிதரன், சி. தவராசா ஆகிய 6 உறுப்பினர்கள் மட்டுமே சபையில் இருந்தனர். ஏனைய உறுப்பினர்கள் அனைவருமே கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள். "யாழ்ப்பாணத்தில் இருக்கின்ற மாகாண சபை உறுப்பினர்களுக்கும் வெளி மாவட்டத்திலிருந்து வருகை தரும் மாகாண சபை உறுப்பினர்களுக்கும் போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் வெளிமாவட்டத்திலிருந்து வரும் நாங்கள் மட்டுமே இறுதிவரை சபை நடவடிக்கைகளில் கலந்துகொள்கின்றோம். யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர்களின் இந்தச் செயற்பாடு மாகாண சபையையும் முதலமைச்சரையும் அவமானப்படுத்துவதாகவே காணப்படுகின்றது" என்று உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் குற்றஞ்சாட்டினார்.

"மாகாண சபை அனைத்து உறுப்பினர்களுக்கும் போக்குவரத்து கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் 16 உறுப்பினர்கள் இருகின்றனர். ஆனால் தற்போது சபையில் சிலர்தான் இருக்கின்றனர். மாகாண சபையின் அமர்வுக்கு வரும் சில உறுப்பினர்கள் வந்து தலையைக் காட்டி விட்டு உடனடியாகவே சபையிலிருந்து வெளியேறுகின்றனர். வேறு சிலர் சபைக்கு வந்து விட்டு கதிரையிலிருந்து காலாட்டிக் கொண்டிருந்துவிட்டு சிறிது நேரத்திலேயே சபையை விட்டு ஓடிவிடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளுக்கு உரிய நடவடிக்கையை இனிவரும் காலங்களில் எடுக்க வேண்டும்" என்று அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். (வ-8)

## போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம்கோரல்

யாழ்ப்பாணம், மே 26
இலங்கைத் தொழிற்பயிற்சி அதிகார சபையின் வடக்கு மாகாணத்திலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில், போதனாசிரியர்கள் வெற்றிடங்களுக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

காய்ச்சி ஒட்டுபவர் (வெல்டர்), வெதுப்பக உற்பத்தியாளர், சமையலாளர், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, கட்டட நிர்மாண உதவியாளர், மின் மோட்டார் மீள் முறுக்குநர், விவசாய இயந்திர உபகரணங்கள் திருத்துநர், வெளியிணைப்புப் படகு இயந்திரத் திருத்துநர், பெண்கள் சிறுவர்களுக்கான ஆடைவடிவமைப்பாளர், தோற்பொருள் மற்றும் கைப்பை உற்பத்தியாளர் போன்ற கற்கைநெறிகளுக்கான போதனாசிரியர் வெற்றிடங்களுக்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிப்பவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஒரு அமர்வில் தமிழ் மற்றும் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல், குறித்த தொழிற்துறையில் டிப்ளோமா அல்லது பட்டம் பெற்றிருத்தல், ஆகக்குறைந்தது ஒரு வருடம் உள்நாடு அல் லது வெளிநாட்டில் கற்பித்தல் அனுபவம் அல்லது பட்டம் இருத்தல் , 18 வய துக்குக் குறையாமலும், 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் ஆகிய தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும். தகுதியுடைய விண்ணப்பதாரிகள் தங்களது சுயவிபரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து உதவிப்பணிப்பாளர், இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை, முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல. 12 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-12)

## புதிய கட்டடத் தொகுதி திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், மே 26
வடமராட்ச்சி, புற்றளை மகா வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதித் திறப்புவிழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. வித்தியாலய முதல்வர் ஆறுமுகம் சிவநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த. குருகுலராஜாவும் சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம், எம். கே.சிவாஜிலிங்கம், சி.அகிலதாஸ் ஆகியோரும் மதிப்புறு விருந்தினர்களாக வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன், வடக்கு மாகாணக் கல்வி பணிப்பாளர் செ. உதயகுமார், வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் சி. புஸ்பலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-422)

## கண் சிசிக்சை முகாம்

யாழ்ப்பாணம், மே 26
வட்டுக்கோட்டை, உலோலசிட்டி விநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் அனுசரணையுடன் தந்தை செல்வா அறப்பணி மன்றத்தின் கொழும்புக் கிளையால் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அராலி மத்தியிலுள்ள சங்கத் தலைவர் வி.செல்வரத்தினத்தின் இல்லத்தில் கண் பரிசோதித்து இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. கண் சத்திரசிகிச்சை செய்தவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படமாட்டாது. பயனாளிகள் வரும்போது தேசிய அடையாள அட்டையை எடுத்துவரவேண்டும். மூக்குக் கண்ணாடி வழங்கும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (வ-10)

## முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம்.மே 26
புலோலி தென்மேற்கு கந்தமுருகேசனார் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கும் கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டுப்போட்டி நாளை சனிக்கிழமை பி.ப 1.30க்கு கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளி மைதானத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. கந்தமுருகேசனார் மாதிரி முன்பள்ளி முகாமைத்துவக் குழுவின் தலைவரும் சனசமூக நிலையத் தலைவருமான சமாதான நீதிவான் மு.ஜெகதேவன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் முகாமையாளர் சிதம்பரப்பிள்ளை தவலிங்கம் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## அருளானந்த பிள்ளையாருக்கு இன்று கொடி

அளவெட்டி, மே 26
கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்தத் திருவிழா இன்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. எதிர்வரும் 8ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 9ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-36)

## மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்ற குற்றச்சாட்டில் வர்த்தகருக்கு மறியல்

தென்மராட்சி, மே 26
பாடசாலை மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வர்த்தகரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று நேற்று உத்தர விட்டது.

"சாவகச்சேரி, பொலிஸ் பிரிவிலுள்ள வர்த்தக நிலையத்துக்குக் கடந்த திங்கட்கிழமை பொருள்கள் வாங்கச் சென்ற 11 வயது மாணவியை, கடையின் உரிமையாளர் துர்நடத்தைக்கு உட்படுத்த முயன்றுள்ளார். அவரிடமிருந்து தப்பித்த மாணவி வீட்டுக்குச் சென்று பெற்றோரிடம் நடந்தவற்றைக் கூறியுள்ளார். சம்பவம் தொடர்பில் மாணவியின் பெற்றோர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டனர்.

விசாரணைகளின் பின்னர் மாணவி மீது துர்நடத்தைக்கு முயன்றார் என்ற குற்றச்சாட்டில் 57 வயதுடைய வர்த்தகர் கைது செய்யப்பட்டார்" என்று சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸார் தெரிவித்தனர்.

"இந்தச் சம்பவத்தால் ஆத்திரமடைந்த தந்தை தோட்டத்திலிருந்து கொண்டு வந்த மண்வெட்டியுடன், குற்றஞ்சாட்டப்படும் வர்த்தகரைத் தாக்கியுள்ளார். அத்துடன், அவர் வர்த்தக நிலையத்தையும் சேதப்படுத்தியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான வர்த்தகர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பெற்று வீடு திரும்பிய பின்னரே வர்த்தகர் கைது செய்யப்பட்டார்" என்றும் பொலிஸார் மன்றில் தெரிவித்தனர்.

வர்த்தகர் மற்றும் அவரைத் தாக்கிய மாணவியின் தந்தையும் சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான், வர்த்தகரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். மாணவியின் தந்தையை 25 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார்.

இதேவேளை, நாவற்குழிப் பகுதியில் வீட்டுத் தோட்டப் பயிர்களுக்கு நீர் பாய்ச்சிய இளம் பெண் மீது பாலியல் பலாத்காரம் செய்ய முயன்று தோட்டத்தின் பயிர்களை நாசமாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் மன்று உத்தரவிட்டது.

வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்ட ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பயிர்களை சந்தேக நபர் நாசமாக்கினார் என்று 22 வயதுடைய இளம் பெண்ணால் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டையடுத்தே அவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-9)





## சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக யாழில் விழிப்புணர்வு நடைபவனி


யாழ்ப்பாணம், மே 26
நடப்பு ஆண்டுக்கான இளைஞர் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வு நடைபவனி யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்றது.

வருடந்தோறும் கொண்டாடப்படும் இளைஞர் தினத்தை முன்னிட்டு ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தொனிப்பொருளின் கீழ் இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களால் நன்மை தரும் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இளைஞர் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபவனி நிகழ்வொன்று நேற்று நடைபெற்றது. "தூய்மையான இலங்கைக்கான இளைஞர் குரல்" எனும் வேலைத் திட்டத்தின் கீழ் நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்ற கலைத்தூது மண்டப முன்றலில் இருந்து விழிப்புணர்வு நடைபவனி ஆரம்பித்து, யாழ்ப்பாண நகர்ப் புறத்தை அடைந்தது. இதன்போது சூழல் பாதுகாப்புத் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன் வீதி ஓரத்தில் உள்ள பிளாஸ்ரிக் பொருள்கள் மற்றும் குப்பைகள் என்பவை பிரித்துச் சேகரிக்கப்பட்டன.

இதில் யாழ்ப்பாண மாவட்ட இளைஞர் கழக அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஜ-ரி)



வடக்கு மாகாண சபையின் வளாகத்துக்குள் பறக்கவி டப்பட்டிருந்த மாகாண சபையின் கொடி கிழிந்த நிலையில் காணப்பட்டது. அது தொடர்பில் சமூக வலைத் தளங்களில் செய்தி வெளியாகியது. அது வெளியாகிச் சில மணி நேரத்துக்குள்ளேயே மாகாண சபையின் கொடி புதியது மாற்றப்பட்டு பறக்கவிடப்பட்டது. (வ-8)

# நபரொருவரைப் பொல்லால் தாக்கியவருக்கு 2 வருடச் சிறை

## 5 ஆண்டுகளுக்குத் தண்டனையை ஒத்திவைத்தது யாழ். மேல் நீதிமன்று

யாழ்ப்பாணம்,மே 26

நபரொருவரைப் பொல்லால் அடித்து காயப்படுத்தியமை அவருக்கு இறப்பை ஏற்படுத்த முயற்சித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்ட குற்றவாளிக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட 2 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

பாதிக்கப்பட்ட நபருக்கு 75 ஆயிரம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்க வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம், இளவாளைப் பகுதியில் 2104ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி ஆனந்தராசா கபில்ராஜ் என்பவரைப் பொல்லால் அடித்துக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அதே இடத்தைச் சேர்ந்த சிவராஜா தனுராஜ் இளவாளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். சந்தேகநபர் மீதான ஆரம்ப விசாரணைகள் மல்லாகம் நீதிவான் மன்றில் நிறைவடைந்தன. வழக்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் பாரப்படுத்தப்பட்டது.

ஆனந்தராசா கபில்ராஜை பொல்லால் அடித்து காயப்படுத்தியமை மற்றும் அவருக்கு இறப்பை ஏற்படுத்த முயற்சித்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களை முன்வைத்து சிவராஜா தனுராஜீக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதி மன்றில் சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை முன்வைக் கப்பட்டது.

வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. வழக்குத் தொடுனர் தரப்பில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்தும் எதிரி தரப்பில் நா.அரியபுத்திரனும் முன்னிலையாகினர்.

"தாக்கியவரும், அதனால் பாதிக்கப்பட்டவரும் உறவினர்கள். சம்பவம் எதிர்பாராத வகையில் இடம்பெற்றது. எதிரி தனது தவறை தற்போது உணர்ந்துள்ளார். பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டை வழங்க அவர் தயாராகவுள்ளார்" என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி மன்றில் விண்ணப்பம் செய்தார்.

எதிரி தாமாகவே முன்வந்து தன் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டுள்ளார். பாதிக்கப்பட்டவர் மேற்கொண்டு வேலை ஏதும் செய்ய முடியாத நிலையில் இருக்கின்றார். பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும்" என்று அரச சட்டவாதி மன்றிடம் விண்ணப்பம் செய்தார். இருதரப்புக் கோரிக்கைகளையும் பரிசீலனை செய்த மேல் நீதிமன்ற நீதிபதி, குற்றவாளிக்கு 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகிறது. இந்தத் தண்டனை 5 வருடங்களுக்கு ஒத்தவைக்கப்படுகிறது. குற்றவாளி 2ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும்: அதனைச் செலுத்தத் தவறின் ஒரு மாத கால சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும். பாதிக்கப்பட்ட நபருக்கு 75 ஆயிரம் ரூபா இழப்பீட்டை குற்றவாளி வழங்க வேண்டும். அதனை வழங்க முடியாதுவிடின் ஒரு வருட கடூழியச் சிறைத்தண் டனை அனுபவிக்க வேண்டும்" என்று தண்டனைத் தீர்ப்பை அறிவித்தார்.

(வ-12)

# குடாநாட்டுப் பண்ணையாளர்களுக்கு கால்நடை வளர்ப்புக் குறித்துப் பயிற்சி

யாழ்ப்பாணம் மே 26

யாழ்ப்பாணக் குடாநாட்டு பண்ணையாளர்களுக்கு கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்புத் தொடர்பான சிறப்புப் பயிற்சிகள் விரைவில் வழங்கப்படும் என்று யாழ்ப்பாண மாவட்ட கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத் தின் உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

"மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்துக்கு வருடம் தோறும் அவர்களுக்குக் கால்நடைகளை வழங்குகின்றோம். அவர்கள் அதனை வளர்த்து பாரமரித்து தமது வாழ்வாதாரத்தை உயர்த்துகிறார்கள். அத்தோடு பண்ணையாளர்களுக்கான கால்நடை வளர்ப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்கள் கால்நடைகளை வளர்த்து சிறப்பான பயனைப் பெறலாம்.

இதற்காக 12 பிரதேசங்களைத் தெரிவு செய்துள்ளோம். ஒவ்வொரு பிரதேசத்திலும் ஒரு நாள் செயலமர்வில் 30 பண்ணையாளர்களுக்கு பயிற்சி வழங்கப்படும். இந்தப் பயிற்சி நெறியை நடாத்துவதற்கான அனைத்து வேலைகளும் தற்பொழுது நடைபெறுகின்றன" என்று உதவிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்தார்.

(வ-ரி)

# சிறார்களுக்கான விளையாட்டு விழா

யாழ்ப்பாணம்.மே.15

கோப்பாய் சமூக சேவா சங்கத்தால் நடத்தப்படும் பாலர் பகல் விடுதி மற்றும் முன்பள்ளியின் விளையாட்டு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பாலர் பகல் விடுதி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபர் எ.ஆனந்தராசாவும் கலந்து கொள்வார். (வ-12)

## கிராம அலுவலர் மீது தாக்குதல்

# 4 பேர் குற்றத்தை ஏற்றுக்கொண்டதால் சிறுவன் உட்பட அனைவருக்கும் பிணை

சாவகச்சேரி, மே 26

கிராம அலுவலரைத் தாக்கினார்கள் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 5 பேரில் நால்வர் சாவகச்சேரி நீதிவான் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். எனினும் 16 வயதுச் சிறுவன் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்க மறுத்தார். வழக்கு விசாரணையை ஒத்திவைத்த நீதிவான், 5 பேரையும் நிபந்தனையுடனான பிணையில் விடுவித்தார்.

அல்லாரைப் பகுதியில் பொதுமக்களுக்கு தொடர்ச்சியாக இடையூறு விளைவிக்கும் வகையில் பாடல்களை ஒலிபரப்பியவர்கள் தொடர்பாக கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டை விசாரிப்பதற்காக கடந்த ஏப்ரல் 16ஆம் திகதி அந்தப் பகுதியின் கிராம அலுவலர் சம்பவ இடத்துக்குச் சென்றார். கிராம அலுவலரின் கடமைக்கு இடையூறு விளைத்த சிலர், அவரைத் தாக்கிக் காயப்படுத்தினர். அத்துடன், கிராம அலுவலரது 35 ஆயிரம் ரூபா பெறுமதியான அலைபேசியையும் அவர்கள் உடைத்து சேதப்படுத்தியிருந்தனர்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக கிராம அலுவலர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிறுவன் உட்பட 5 பேரைக் கைது செய்தனர். அவர்கள் 5 பேருக்கும் எதிராக சாவகச்சேரி நீதிவான் மன்றில் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். தேவையற்ற முறையில் கூட்டமாக இருந்தமை, அரச அலுவலர் எனத் தெரிந்தும் கடமை நேரத்தில் அவரைத் தாக்கிக் காயப்படுத்தியமை, அரச அலுவலரை கடமை செய்ய விடாமல் தடுத்தமை மற்றும் கிராம அலுவலரது 35 ஆயிரம் ரூபா பெறு மதியான அலைபேசியை உடைத்து சேதப்படுத்தியமை ஆகிய 4 குற்றச்சாட்டுகள் 5 பேருக்கு எதிராகப் பொலிஸார் முன்வைக்கப் பட்டன. வழக்கு விசாரணைகளை முன்னெடுத்த நீதிவான் மன்று சந்தேகநபர்கள் 5 பேரையும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைத்தது. அடையாள அணிவகுப்பு நடாத்தப்பட்டது. அடையாள அணிவகுப்பில் தன் மீது தாக்குதல் நடத்தினார் என்று கிராம அலுவலரால் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

இந்த வழக்கு சாவகச்சேரி நீதிவான் மன்றில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. முதலாவது சந்தேகநபரான 16 வயதுச் சிறுவன் தவிர்ந்த ஏனைய நால்வரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். வழக்கை பரிசீலனை செய்த நீதிவான், சிறுவன் உட்பட 5பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதித்தார். அத்துடன், 5 பேரும் தினமும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கையொப்பமிடுமாறும் உத்தரவிட்டார்.

(வ-9)

# டெங்கு நுளம்புப் பெருக்கத்துக்கு ஏற்றவாறு குடியிருப்பை வைத்திருந்தோர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், மே 26

"தேசிய டெங்குக் கட்டுப்பாட்டுத் தினத்தை முன்னிட்டு வலி. தென் மேற்கு பிரதேசத்தில் ஆயிரத்து 499 குடியிருப்புக்களில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றன. அதில் 762 குடியிருப்புக்களில் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சூழல் இருந்தமை கண்டறியப்பட்டது. அதில்14குடியிருப்பாளர்களுக்கு - எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது"

இவ்வாறு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு தினங்களாக கடந்த 22ஆம், 23 ஆம் திகதி வடக்கு மாகாணத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. இந்த நடவடிக்கை வலி.தென்மேற்கு பிரதேச சபையனரால் முன்னெடுக்கப்பட்டது. டெங்கு நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகளவில் இனங்காணப்பட்ட சுதுமலை, சாவல்கட்டு, மாகியம்பிட்டி ஆகிய இடங்களில் சுகாதாரப் பிரிவினரும் பொலிஸாரும்இணைந்துசோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

சுதுமலை, சாவல்கட்டு ஆகிய இடங்களில் கடந்த 22 ஆம் திகதி 789 குடியிருப்புக்களில் நடத்திய சோதனையின் போது, 371 குடியிருப்புக்களில் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய சூழல் இருந்தமை கண்டறியப்பட்டன. அதில் 11 குடியிருப்புக்களில் குடம்பிகள் இருந்தன. இதேபோல் மறுநாள் 23 ஆம் திகதி மாகியம்பிட்டியில் 710 குடியிருப்புக்களில் நடைபெற்ற சோதனையின் போது 391 குடியிருப்புக்களில் நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய சூழல் இருந்தமை அறியப்பட்டது. அதில் 7 குடியிருப்புக்களில் குடம்பிகள் இருந்தன.

இந்த நிலையில் நுளம்புகள் உற்பத்தியாகக்கூடிய சூழலை வைத்திருந்த 762 குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரப் பரிசோதகர்களால் எச்சரிக்கை வழங்கப்பட்டன. சுற்றுச் சூழலைச் சுத்தமாக வைத்திருக்குமாறும் அவர்களுக்கு அதிகாரிகள் அறிவுரை வழங்கினர்.

இதேவேளை, குடம்பிகள் கண்டுபிடிக்கப்பட்ட 18 குடியிருப்பாளர்களில் 14 பேருக்கு எதிராக பொலிஸார் மல்லாகம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(வ-115)

# மாணவர்கள் கல்விக்கு உதவுகின்றது சாவ. கைத்தொழில் வணிகர் மன்றம்

## டிறிபேர்க் கல்லூரி அதிபர் பாராட்டு

சாவகச்சேரி, மே 26

வர்த்தகத்தில் கிடைக்கும் லாபத்தின் ஒரு பகுதியைப் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக செலவிடுவது சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் பெரும் பாக்கியமாகக் கருதுகிறார்களென நினைக்கிறேன். வருடாந்தம் தென்மராட்சி பிரதேச பாடசாலைகளில் கற்கும் நூற்றுக்கணக் கான மாணவர்களுக்கு கல்வி மேம்பாட்டு நிதி வழங்கி அவர்களின் கல்வித் தரத்தை மேம்படுத்தி வருகின்றமை இதற்குச் சான்றாகும். இவ்வாறு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமாரன் தெரிவித்தார்.

சாவகச்சேரி நகரப் பகுதி வர்த்தகர்களால் கல்லூரிக்கு பிஸாஸ்ரிக் கதிரைகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இந்த மண்டபம் அமைக்கப்பட்டு பத்து வருடங்களுக்கு மேலாகியும் மண்டபத்துக்கான கதிரைகளைத் தற்போது தான் பெறமுடிந்தது. நான் எழுத்து மூலம் கேட்காத போதிலும் எனது வாய்மொழியிலான கோரிக்கையை ஏற்று 300 கதிரைகளை வழங்கி உதவியமைக்குக் கல்லூரிச் சமூகம் சார்பில் வணிகர் மன்றத்துக்கும் கதிரைகளை வழங்கிய வணிகர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்கின்றோம். வறிய மாணவர்களின் கல்விப் பணிக்கு ஆற்றும் சேவையைத் தொடர்ந்து எதிர்காலத்தில் கல்வியால் சமூகத்தை முன்னேற்ற வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்- என்றார்.

(ற-9)

# உயிரற்ற நிலையில் தாய், குழந்தை மீட்பு

நுவரெலியா, மே26

நாவலப்பிட்டி நோட்டன் பகுதியில் திரிபோச வாங்கச் சென்று காணாமல்போன தாயும், குழந்தையும் நேற்றுக்காலை லக்சபான நீர் வீழ்ச்சியிலிருந்து உயிரற்ற நிலையில் கண்டெடுக்கப்பட்டனர்.

தெப்பட்டன் தோட்டத்தில் வசித்துவந்த செல்வராஜ் சுசிலா (வயது29) என்ற பெண்ணே குழந்தையுடன் உடலமாக மீட்கப்பட்டுள்ளார். இவரது கணவர் கொழும்பில் பணிபுரிகிறார். நேற்றுமுன்தினம் காலை 10 மணியளிவில் தெப்பட்டன் தோட்டத்திலிருந்து தனது இரண்டு மாத ஆண் குழந்தையுடன் திரிபோச வாங்குவதற்காக கொத்தலனை சனசமூக நிலையத்துக்குச் சென்றுள்ளார். இருவரும் மாலைவரை வீடு திரும்பாததை அடுத்து உறவினர்கள் நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர்.

பிரதேச மக்களும், பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்று அதிகாலை 3 மணியளவில் லக்பான நீர் வீழ்ச்சிப் பகுதியில் குழந்தை சடலமாக மீட்கப்பட்டது.

தொடர்ந்து நீர்வீழ்ச்சிப் பகுதியில் தாயும் உடலமாக மீட்கப்பட்டார்.

இதுதொடர்பில் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் எனத் தெரிவித்த பொலிஸார், உடலங்களை நாவலப்பிட்டி வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படும் எனக்கூறினர். (ற-யு43)

# செல்வம் கொழிக்கும் எங்கள் சொந்த மண்ணை தாருங்கள்

## இரணைதீவு மக்கள் தொடர் போராட்டம்

கிளிநொச்சி, மே 26

தமது பூர்வீக நிலமான இரணைதீவில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரி இரணைதீவு மக்கள் நடத்திவரும் போராட்டம் நேற்று 25 ஆவது நாளாகத் தொடர்ந்தது.



இரணைதீவிலிருந்து 1992 ஆம் ஆண்டு போர் காரணமாக மக்கள் வெளியேற்றப்பட்டனர். போர் முடிந்து எட்டு வருடங்களாகியும் சொந்த நிலத்தில் மீள்குடி யமரவோ அல்லது அங்கு சென்று தொழில் செய்யவோ அவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. தற்போது முழங்காவில் இரணைமாதா நகரில் தங்கியுள்ள இரணைதீவு மக்கள் தங்களை சொந்த இடத்தில் மீள்குடியமர அனுமதிக்க வேண்டும் என்று கோரி கடந்த முதலாம் திகதி முதல் தொடர் போராட்டம் நடத்துகின்றனர்.

"எங்கள் மண்ணில் நாங்கள் இருப்போமாக இருந்தால் வசதியாக இருப்போம். இப்போது பணமின்றி கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றோம். எங்கள் மண்ணில் இருந்த சுகம் இல்லை. இப்போது வருத்தங்களால் துன்பப்படுகின்றோம். நாங்கள் எந்தக் குறையுமின்றி வாழ்ந்தோம். தொழில் வளங்கள் எவ்வளவோ இருந்தது. செல்வம் செழிக்கும் எங்கள் மண்ணை எங்களிடம் தாருங்கள்." என்று பேராட்டத்தில் ஈடுபடும் இரணைதீவு மக்கள் தெரிவித்தனர். (ற -21)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் ரூ.3 கோடியில் அபிவிருத்தி

முல்லைத்தீவு, மே 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஆறு கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் 3 கோடி 70 லட்சம் ரூபா செலவில் பத்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள சிறிய குளங்கள் சீரமைப்பு, நீர் விநியோக வாய்க்கால்கள் சீரமைப்பு உள்ளிட்ட பத்து வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. முள்ளியவளை கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட கஞ்சுரமோட்டை குளத்தின் சீரமைப்பு வேலை, அளம்பில் கமநல சேவை நிலையத்தின் கீழ் அளம்பில் குளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் சீரமைப்பு, பாண்டியன் குளம் கமநலசேவை நிலையத்தின் கீழ் உள்ள தேவி குளத்தின் சீரமைப்பு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

துணுக்காய் கமநல சேவை நிலையத்துக்குட்பட்ட கரம்பைக் குளத்தின் சீரமைப்பு வேலைகள், ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் புலுமச்சிநாதகுளத்தின் சீரமைப்பு போன்றனவும் மேற்கொள்ளப்படவுள்ளன. தச்சடம்பன் நீர்ப்பாசன வாய்க்கால் சீரமைப்பு வேலைகள், ஒட்டுசுட்டான் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட கோடாரிக்கல்க் குளம், பெரிய இத்திமடுக்குளம், இடிதாங்கிக்குளம் மற்றும் தவசிகுளத்தின் சீரமைப்பு வேலைகள் போன்றனவும் மேற்கொள்ளப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ற -21)

# பார்வை இழந்தவருக்கு சிறிய வர்த்தக நிலையம்

வவுனியா, மே 26

போரால் பார்வையை இழந்த வவுனியா செட்டிக்குளம் வீரபுரம் பிரதேசத்தை சேர்ந்த மாற்று வலுள்ள ஒருவருக்கு வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பு சிறிய வர்த்தக நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுத்துள்ளது.



போரால் தனது இரு சகோதரர்களும் காணமல் போன நிலையில், கண்களினது பார்வையும் இழந்து வறுமையில் வாழ்ந்த தனபாலன் என்பவருக்கே பலசரக்கு வர்தக நிலையம் அமைத்து கொடுக்கப்பட்டது. சுமார் நான்கு லட்சம் பெறுமதியில் வவுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் தலைவர் சந்திரகுமார் கண்ணனின் ஏற்பாட்டில் லண்டன் துர்க்கை அம்மன் ஆலயத்தின் நிதி பங்களிப்பில் அமைக்கப்பட்ட இந்த பலசரக்கு நிலையம் நேற்று முன்தினம் அவரிடம் கையளிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ற -21)

# அனுமதியின்றி கள் வைத்திருந்த 14 பேருக்கு தண்டம்

தென்மராட்சி, மே 26

அனுமதிப்பத்திரம் இன்றி கள் வைத்திருந்த 14 பேருக்கும், டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

சாவகச்சேரி மதுவரி நிலையத்தினர் பிரதேசத்தில் நடத்திய சோதனைகளில் வீடுகளில் அனுமதிப்பத்திரமின்றி அளவுக்கு அதிக மாக கள் வைத்திருந்த 20 பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்தி ருந்தனர். இந்த வழக்குகள் நேற்று முன்தினம் நீதிமன்றில் விசாணைக்கு எடுக்கப்பட்டன. விசாரணைக்கு வந்திருந்த 14 பேர் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து தலா 3 ஆயிரம் ரூபா தண்டம் விதி க்கப்பட்டது.

கொடிகாமம் பொலிஸ் நிலையச் சுற்றாடல் பிரிவினர் மேற்கொண்ட சோதனைகளின் போது டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய ஏதுநிலையில் குடியிருப்புகளை வைத்திருந்த இருவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 3 ஆயிரம் ரூபா வீதம் தண்டம் விதிக்கப்பட்டது. (ற - 9)

# பரராஜசிங்கம் எம்.பி.கொலை; மேலுமொரு சந்தேகநபர் கைது

மட்டக்களப்பு, மே 26

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக சிறப்பு குற்றப்புலனாய்வு துறையினரால் மற்றுமொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டில் வசித்து வந்த குணத்திலக்க என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய போது நீதிவான் எம்.கணேசராஜா எதிர்வரும் ஜூன் மாதம் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சந்தேகநபரை முன்னிலைப்படுத்தி சிறப்பு குற்றப்புலனாய்வு துறை நீதிமன்றத்தில் முன்வைத்த அறிக்கையில் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு சந்தேகநபரை எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி மேல் நீதிமன்றத்தில் சிறைச்சாலை அதிகாரி ஊடாக முன்னிலைப்படுத்த நீதிமன்ற அனுமதியை கோரியிருந்தது. அதேவேளை சந்தேகநபரான குலத்துங்க தான் மன்றில் கூற்றொன்றை கூற விரும்பு கின்றேன் என்று நீதவானிடம் தெரிவித்தார்.

இதனை ஏற்றுக் கொண்ட நீதவான் நீதிமன்ற நீதவான் எம். கணேசராஜா எதிர்வரும் ஜூன் 5ஆம் திகதி சிறைச்சாலை உத்தியோகத்தர் ஊடாக நீதி மன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறும், அன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார்

2005ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ஆம் திகதி மட்டக்களப்பு புனித மரியாள் பேராலயத்திற்குள் வைத்து, நத்தார் நள்ளிரவு ஆராதனையின் போது ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்த கொலை தொடர்பாக கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட 7 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் மட்டக்களப்பு மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 7ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. சிவ நேசதுரை சந்திரகாந்தன் உட்பட 4 பேர் ஏற்கனவே கைதாகி ஒன்றரை வருடங்களுக்கு மேலாக நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். 3 பேர் தேடப்பட்டுவந்த நிலையிலே 5ஆவது நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (ற - 10)

# பள்ளிவாசல்கள் மீது தாக்குதல்; பொறுப்பற்றிருக்கும் பொலிஸார்

## மனித உரிமைச் செயற்பாட்டாளர் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 26


முஸ்லிம்களின் வணிக நிலையங்கள் மற்றும் பள்ளிவாசல்களுக்கு எதிரான தொடர் தாக்குதல்களைத் தடுப்பதற்கு பொலிஸார் தவறி விட்டனர் என்று மனித உரிமை செயற்பாட்டாளரான விக்டர் ஐவன் தெரிவித்தார். முஸ்லிம் பள்ளிவாசல், வணிக நிலையங்களின் அண்மைய தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

முஸ்லிம்களுக்குச் சொந்தமான வணிக நிலையங்கள், பள்ளிவாசல்கள், மையவாடி என்பனவற்றின் மீது, கடந்த ஒரு மாத காலத்துக்குள் 20 வரையான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றன. இது தொடர்பாக இதுவரையில் பொலிஸாரால் எவரும் கைது செய்யப்படவில்லை. பொலிஸாரின் இந்த வகையான பொறுப்பற்ற தன்மையால்தான், 2014 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழ்த்தப்பட்டன. குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காததன் மூலம், இந்த நடவடிக்கைகள் தொடர்வதற்கு பொலிஸார் காரணமாகவுள்ளனர். முஸ்லிம்களுக்கு எதிரான இந்த வன்முறைகளுக்குப் பௌத்த அடிப்படைவாத அமைப்பு ஒன்றே காரணம்" - என்றார். (ஐ -10)

# நாட்டின் பல பாகங்களில் சுழல் காற்றுடன் மழை

## வீடுகள், மரங்கள் சேதம்: சில இடங்களில் வெள்ளம்





வவுனியா



நெடுங்கேணி



திருகோணமலை



இரத்தினபுரி

யாழ்ப்பாணம், மே 26
வடக்குக் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் பெரும்பகுதிகளில் கடந்த இருநாள்களாக காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. அதனால் வீடுகள், கட்டடங்கள் பெரும் சேதங்களுக்கு உள்ளாகின. கால்நடைகளும் உயிரிழந்தன.

**வவுனியா**

வவுனியாவில் நேற்று முன்தினம் பெய்த சுழல் காற்றுடன் கூடிய கடும் மழையால் 21 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்தது. 20 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. 83.3 மில்லிமீற்றர் மழை பதிவானது. மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது. நகர் பகுதி, பட்டானிச்சூர், குருமன்காடு, வேப்பங்குளம், நெள்ளுக்குளம், குழுமாட்டுச்சந்தி போன்ற பகுதிகளில் கடும் காற்றுடன் கூடிய கடும் மழை பெய்தது. பெரு மரங்கள் சரிந்து விழுந்தன. வீடுகளும் சேதமடைந்தன. பல்வேறு இடங்களில் மின்சார கம்பிகள் அறுந்தன.

"மன்னார் வீதி குருமன்காட்டு சந்தியில் வீதியோரத்திலிருந்த பழமை வாய்ந்த மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததால் மன்னார் வவுனியா வீதிப் போக்குவரத்துத் தடைப்பட்டது. நைனாமடுவில் ஒரு வீடு முழுமையாகச் சேதமடைந்தது. பகுதியளவில் 3 வீடுகள் சேதமடைந்தன. 4 குடும்பங்களைச் சேர்ந்த 16 பேர் பாதிப்புக்கு உள்ளாகினர்.

குளவிசுட்டானில் இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் பாதிப்படைந்தனர். வவுனியா பிரதேச செயலகப் பிரிவில் மகாறம்பைக்குளத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பாதிக்கப்பட்டனர். நெடுங்கேணி தெற்கில் 3 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 3 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேர் பாதிப்புக்கு உள்ளாகினர். ஒலுமடுவில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பாதிப்புக்குள்ளாகினர்.

பரந்தனில் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன. 5 குடும்பங்களைச் சேர்ந்த 15 பேர் பாதிப்புக்குள்ளாகினர். காத்தார் சின்னக்குளத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 அங்கத்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஓமந்தை மாளிகையில் ஒரு வீடு பகுதியளவில் சேதமடைந்தது. ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பாதிப்படைந்தனர். கோவில் குளத்தில் 2 வீடுகள் பகுதியளவில் சேதங்களுக்கு உள்ளாகின. 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் பாதிக்கப்பட்டனர். பெரிய உளுக்குளத்தில் ஒரு வீடு பகுதியளவில் சேதங்களுக்கு உள்ளானது. ஒரு குடும்பத்தை சேர்ந்த 2 பேர் பாதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கான தற்காலிக நடவடிக்கைகள் செய்துகொடுக்கப்படவுள்ளன. உயர் காற்று மழையின் தாக்கமே பாதிப்புகளுக்குக் காரணம்" - என்று வவுனியா மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எரி.என் சூரியராஜா தெரிவித்தார்.

கடும் காற்றுடன் கூடிய மழையால் வவுனியா பொலிஸ் நிலைய பொலிஸார் விடுதிக் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழுந்தது. வவுனியா பொலிஸ் நிலையத்தில் நின்ற மரம் ஒன்று முறிந்து விழுந்ததால் 5 மோட்டர் சைக்கிள்கள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

**ஒட்டுசுட்டான்**

ஒட்டுசுட்டான் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை தீடிரென வீசிய காற்றால் நான்கு தற்காலிக வீடுகளின் கூரை துக்கி வீசப்பட்டன. இடியுடன் கூடிய மழை பொழிந்த வேளை காற்றும் சற்றுப் பலமாக வீசியது. வித்தியாபுரம் பகுதியில் நான்கு தற்காலிக வீடுகள் சேதமடைந்தன. வீட்டின் கூரைகள் துக்கி விசப்பட்டமையால், வீட்டின் உரிமையாளர்கள் அசெளகரிங்களை எதிர்கொண்டனர். தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டு நீண்ட காலங்கள் கடந்து விட்ட நிலையில் வீடுகள் மிகவும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கற்சிலைமடு 3ஆம் கண்டம் கிராமத்தில் நேற்றுமுன்தினம் இடி, மின்னலுடன் கடும் மழை பொழிந்தது. மின்னல் தாக்கி கால்நடைகள் உயிரிழந்தன. வீடுகளும் சேதமடைந்தன.


தங்கராசா கந்தசாமி என்பவரின் இரு பசுமாடுகள் மின்னல் தாக்கி உயிரிழந்தன. அவற்றின் பெறுமதி 2 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டது. பெண் தலைமைக் குடும்பமான சிவதாசன் கமலராணியின் வீட்டுக் கூரை தூக்கி வீசப்பட்டது.

கடந்த ஆண்டு கமலராணியின் கண்பார்வையற்ற தாயார் அடுப்புக்கு மூட்டிய தீயில் வீடு எரிந்து அழிந்தது. அந்த விபத்தில் கண் பார்வையற்ற தாயும் உயிரிழந்தார். உதவியற்றிருந்த கமலராணிக்கு கிராமத்து இளைஞர்கள் இணைந்து தற்காலிக வீடு அமைத்துக் கொடுத்திருந்தனர். அதன் கூரையே சுழல் காற்றில் சேதடைந்தது.

மழையால் பல பயன்தரு மரங்கள் சேதமடைந்துள்ளன என்றும், அவை தொடர்பில் கிராம அலுவலரிடம் முறையிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

**நெடுங்கேணி**

நெடுங்கேணி ஒலுமடுப் பகுதியில் நேற்று முன்தினம் 2மணியளவில் இடியுடன் கூடிய மழை பதிவானது. காற்றும் சற்று பலமாக வீசியது. பப்பாசி மரங்களும், முருங்கை, வாழை, மா போன்ற மரங்கள் முறிந்து விழுந்தன. வீடுகள், பொதுநோக்கு மண்டபம், அரசி ஆலை போன்றவற்றின் கூரைகள் காற்றால் தூக்கி வீசப்பட்டன.



ஒட்டுசுட்டான்

**இரத்தினபுரி**

இரத்தினபுரி, பெல்மதுளை, காவத்தை ஆகிய பகுதிகளில் நேற்று அதிகாலை முதல் தொடர்ந்து அடைமழை பெய்தது. காவத்தை ஸ்ரீ கிருஸ்ணா தமிழ் மகாவித்தியாலயத்தின் மைதானம் மற்றும் பத்துல்பான பிரதேசத்தில் சில வீடுகளும் பாதிப்புக்கு உள்ளாகின. இரத்தினபுரி பதுல்பான பிரதான வீதி யோரத்தில் மண்சரிவும் ஏற்பட்டது.

**திருகோணமலை**

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம்மாலைவீசியமினிசூறாவளியால் சில வீடுகள் சேதமடைந்ததுடன் பெரிய மரங்களும் காற்றால் முறிந்து விழுந்தன.

(ற -ஐ.ய.21, 402, 101, 7)

## மீதொட்டமுல்ல இடர் குறித்து முறைப்பாடுகள்; விசாரணைகளை ஆரம்பித்தது ஆணைக்குழு

கொழும்பு, மே 26
கொழும்பு கொலன்னாவ மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிந்து விழுந்த இடர் தொடர்பாக, முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மீதான விசாரணைகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

மீதொட்டமுல்ல குப்பை மேட்டு இடருக்கு எதிராக மக்கள் அமைப்பின் இணைப்பாளர் நுவன் போபகே மற்றும் இடரால் பாதிக்கப்பட்டவர்கள் கொழும்பிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வாக்குமூலம் அளிப்பதற்காக நேற்று முன்தினம் சென்றனர்.

இடரால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு, நிவாரணம் வழங்கலில் அவர்களது உரிமைமீறப்பட்ட விடயங்கள் மற்றும் பொறுப்பு கூறவேண்டிய பிரிவினர் தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட தரப்பினர் வாக்குமூலம் அளித்தனர். இதனைக் கவனத்தில் கொண்ட இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, சம்பந்தப்பட்டவர்களை விரைவில் ஆணைக் குழுவுக்கு அழைத்து விசாரணை நடத்தப்படும் என்று உறுதிமொழி அளித்தது.

கொலன்னாவ மீதொட்டமுல்லப் பகுதியில் குப்பை மேட்டில் ஒருபகுதி கடந்த ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி மாலை 3 மணியளவில் குடியிருப்புக்கள் மீது சரிந்து விழுந்தது. இந்த இடரால் 32 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ - 10)



# ஐ.நா. சபை அறிக்கையை நிராகரித்தது வடகொரியா

பியாங்யாங், மே 26
தமது தற்காப்புக்காக மேற்கொள்ளப்படும்அத்தனை முயற்சிகளிலும் குறைகாணவேண்டாம் என்று தெரிவித்து ஐக்கிய நாடுகள் சபையின் கண்டன அறிக்கையை நிராகரித்தது வடகொரியா.

வடகொரியா மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட நிலையில், இந்தச் சோதனை முயற்சி உலக அமைதிக்கு ஆபத்தானது என்று மற்றுமொரு கண்டனத்தை விடுத்தது ஐக்கிய நாடுகள் சபை. கண்டன அறிக்கை வடகொரியா நிராகரித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் கண்டன அறிக்கைக்கு எதிரான ஓர் அறிக்கையை வடகொரியா நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அதில்'வடகொரியாதனதுபாதுகாப்புக்காக எடுக்கும் ஒவ்வொரு தற்காப்பு



நடவடிக்கையிலும் குறை காண்பது வேடிக்கையாக இருக்கிறது. வடகொரியா மீது வெறுப்புணர்வும், விரோத உணர்ச்சியும் கொண்டவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். அமெரிக்காவும் அந்த நாட்டைப் பின்பற்றுபவர்களும் தான் தற்போதைய அறிக்கைக்கு காரணமாக உள்ளனர்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)



## லிபியாவில் அகதிகள் சென்ற

# படகு கவிழ்ந்ததில் 30 பேர் உயிரிழப்பு

உரோம், மே 26
லிபியாவில் இருந்து அகதிகள் சென்ற படகு நேற்றுமுன்தினம் கவிழ்த்துவிபத்துக்குள்ளானதில் 30 பேர் உயிரிழந்தனர்.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

ஈராக், ஈரான், இஸ்ரேல், பலஸ்தீனம், சிரியா, ஆப்கானிஸ்தான், சோமாலியா, எத்தியோப்பியா, ஏமன் உள்ளிட்ட நாடுகளில் நிலவும் போர் மற்றும் வரட்சி காரணமாக அங்குள்ள மக்கள் பலர் லிபியாவுக்குச் சென்று பின்னர் அங்கிருந்து மத்திய தரைக்கடல் வழியாக இத்தாலிக்குச் செல்கின்றனர்.

அவ்வாறு சென்ற படகொன்று நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானதில் கிட்டத்தட்ட 30 பேர் உயிரிழந்தனர். இவர்களில் மூன்று குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர்.

120 பேர் லிபிய கடலோர காவல்படையால் மீட்கப்பட்டனர்.

கிட்டத்தட்ட 100 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. விபத்து நடைபெற்று நீண்ட நேரமாகியுள்ள தால் ஏனையவர்களின் நிலை தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

> “ 120 பேர் லிபிய கடலோர காவல் படையால் மீட்கப்பட்டனர். கிட்டத்தட்ட 100 பேர் வரை காணாமல் போயுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. விபத்து நடைபெற்று நீண்ட நேரமாகியுள்ளதால் ஏனையவர்களின் நிலை தொடர்பில் அச்சம் வெளியிடப்பட்டது.

# உலக அமைதிக்கு கூடுதல் முயற்சி

## பாப்பரசரைச் சந்தித்த பின்னர் டொனால்ட் ட்ரம்ப் கருத்து

வொஷிங்டன், மே 26
உலக அமைதிக்கு வருங்காலத்தில் கூடுதல் முயற்சி மேற்கொள்ளப்படும் இவ்வாறு தனது ருவிற்றரில் பதிவிட்டார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.

ட்ரம்ப் தனது முதலாவது சுற்றுப்பயணத்தை தற்போது மேற்கொண்டுள்ளார். சவூதி அரசர் சல்மான், இஸ்ரேல் அதிபர் நெத்தன்யாகு, பலஸ்தீன அதிபர் அப்பாஸ் ஆகியோரைத் தொடர்ந்து மூன்றாம் கட்டமாக பாப்பரசர் பிரான்சிஸை அவர் நேற்றுமுன்தினம் சந்தித்தார்.



கடந்த வருடம் இறுதிப்பகுதியில் அமெரிக்க அதிபர் தேல்தலுக்கான பரப்புரை நடைபெற்றது. இதில் மெக்சிக்கோ எல்லையில் சுவர் எழுப்பப்படும் என்று ட்ரம்ப் தெரிவித்தமைக்கு பாப்பரசர் கண்டனம் தெரிவித்தார். எல்லையில் சுவர்கள் இடிக்கப்பட வேண்டுமே தவிர அமைக்கப்படக்கூடாது என்று பாப்பரசர் தெரிவித்திருந்தார். இந்தக் கருத்து பாப்பரசருக்கு தேவையற்றது என்று ட்ரமப் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இவர்கள் இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்த நிலையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றமை பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் சந்திப்பு இடம் பெற்றது.

பாப்பரசரைச் சந்தித்த பின்னர் ட்ரம்ப் தனது ருவிற்றரில் 'உலக அமைதியை நிரந்தரமாக ஏற்படுத்த கூடுதல் முயற்சி மேற்கொள்ளப்படும்' என்று பதிவிட்டார். (ம)



பிரிட்டனின் செல்சி நகரில் அண்மையில் மிகப்பெரும் எடுப்பில் மலர் கண்காட்சி நடத்தப்பட்டது. ராணி எலிசபெத் உள்ளிட்ட பெரும்புள்ளிகளும் மலர் கண்காட்சியைப் பார்க்க வந்திருந்தனர். அதன் ஒரு வாயிலின் ஒளிப்படமே இது. (ம)

## பிலிப்பைன்ஸ் தீவொன்றில் இராணுவ ஆட்சி

பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் இருந்து 800 கி.மீ. தொலைவில் உள்ள மாராவி தீவில் ஐ.எஸ்.ஐ.எஸ். ஆதரவு ஆயுததாரிகள் ஊடுருவியதை அடுத்து அங்கு இராணுவ ஆட்சியை அறிவித்தார் அதிபர் றொட்றிக்கோ டுடேர்தே. ஆயுததாரிகளை அங்கிருந்து விரட்டியடிப்பதற்காக இராணுவத்தினர் கடும் சண்டையில் ஈடுபட்டு வருகின்றனர். சித்தோ என்ற பாதிரியாரையும் சில மக்களையும் ஆயுததாரிகள் பிடித்துச் சென்றுள்ளதால் நிலைமை மோசாகலாம் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

# மன்செஸ்டர் தற்கொலைதாரியின் தந்தை லிபியாவில் கைதானார்

பிரிட்டனின் மன்செஸ்டர் நகரில் தாக்குதல் நடத்தியவரின் தந்தை மற்றும் சகோதரர் லிபியாவில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டனர்.

மன்செஸ்டர் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 22 பேர் உயிரிழந்தனர். 58 பேர் காயமடைந்தனர். லிபியாவைச் சேர்ந்த 22 வயதேயான சல்மான் அபேடி என்பவரே இந்தத் தாக்குதலை நடத்தியவர் என்று விசாரணையில் தெரியவந்தது. இதை அமெரிக்க புலனாய்வுத்துறையும் உறுதிசெய்தது. இந்த நிலையில் அவரின் சகோதரர் மற்றும் தந்தை இருவரையும் லிபியப் பொலிஸார் நேற்றுக் கைது செய்தனர். "இந்தத் தாக்குதலில் இவர்கள் தொடர்புபட்டுள்ளனரா என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே இந்தக் கைது நடவடிக்கை" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மன்செஸ்டர் நகரில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து லண்டன் உள்ளிட்ட பல்வேறு நகர்களில் இராணுவத்தினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

குறிப்பாக லண்டனின் பாதுகாப்பு இராணுவத்திடம் முழுமையாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அங்கு மட்டும் 4 ஆயிரம் சிப்பாய்கள் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டள்னளர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# அரசியல் தலைமையின் தவறே காரணம்!

சட்டத்தை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸ் தவறிவிட்டது என்று சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்நாயக்க நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

''நாட்டில்சட்டம்அனைவருக்கும்சமமானது. அமைதியையும்சட்டத்தையும்நடைமுறைப்படுத்துவது பொலிஸாரின் கடமை. அமைதிக்கு அச்சுறுத்தலாக அமையும் சம்பவங்களுக்குஎதிராகப்பொலிஸார்நடவடிக்கைஎடுக்கவேண்டும்'' என்று அவர் தெரிவித்தார்.

அண்மைக்காலமாகசிறுபான்மை இனத்தவர்கள், குறிப்பாக முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்களுக்குக் கடும் கண்டனங்கள் எழுந்த நிலையில் அமைச்சர் சாகல பொலிஸார் மீது இலகுவாகப் பழியைப் போட்டுள்ளார்.

பொலிஸார்அப்படி நடந்து கொண்டதற்கும், ஆண்டாண்டு காலமாக அப்படியே நடந்துவருவதற்கும் இலங்கையின் அரசியல் கலாசாரம்தான் காரணம் என்பதை சாகல மிக நுட்பமாகமறைத்துவிட்டு இது பொலிஸாரின்தவறுகளில்ஒன்று என்றவகையில் இதனைக் குறுக்கிவிட முனைந்திருக்கிறார்.

சிறுபான்மை இனங்களுக்கு எதிராக, குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு எதிராகப் பொலிஸாரை ஏவித்தாக்குதல் நடத்தியது காலம் காலமாக கொழும்பு அரசுகள்தான். பொலிஸார் தன்னிச்சையாக அந்தத் தாக்குதல்களை நடத்தவில்லை. அதற்கான ஆக்கமும் ஊக்கமும் அரசியல் தலைவர்களாலேயே அவர்களுக்கு வழங்கப்பட்டது. அரசியல் தலைவர்களின் வழிநடத்தலிலேயே அவர்கள் சிறுபான்மை இனங்கள் மீதான எல்லாக் குற்றங்களையும் புரிந்தார்கள்.

சிறுபான்மை மக்களுக்கு எதிராகத் தாங்கள் செய்யும் எந்தவொரு குற்றத்தில் இருந்தும் சிங்கள, பௌத்த அரசியல்வாதிகள் தம்மைப் பாதுகாப்பார்கள் என்கிற நம்பிக்கையில் பொலிஸார் வரம்பு மீறிச் செய்த குற்றங்களுக்காகக்கூட அவர்கள் ஒருபோதும் தண்டிக்கப்பட்டதில்லை. அந்த அளவுக்கு பௌத்த, சிங்கள அரசியல் கேடயம் அவர்களுக்குப் பாதுகாப்பாக விளங்கியது.

அதனால்தான் அவர்களால் அதிலிருந்து வெளிவர முடியவில்லை. காவியுடை பிக்குகளுக்கு எதிராகத் தங்கள் கரங்களை உயர்த்த அவர்கள் தயங்குகிறார்கள். அதுவும் சிறுபான்மை மக்களுக்கு எதிராகப் பிக்குகள் அட்டகாசம் புரியும்போதும், அட்டூழியங்கள் செய்யும்போதும் அவர்களை நெருங்கவே பயப்படுகிறார்கள். பிக்குகளுக்கு அரசியலில் இருக்கும் செல்வாக்கு அவர்களுக்கு நன்கு தெரியும்.

இவ்வாறு பொலிஸாரின் செயல்களுக்கு, அதாவது சட்டத்தைமீறுவோர்மீதுநடவடிக்கைஎடுக்காதிருக்கும்பொலிஸாரின் போக்குக்கு அரசியல் தலைமைத்துவமே காரணம் என்பதை மறைத்து நாடாளுமன்றத்தில் பழியைப் பொலிஸார்மீதுமட்டும்போட்டுவிட்டார்அமைச்சர். தற்போதைய மைத்திரி -ரணில் கூட்டு அரசு பதவிக்கு வந்த பின்னர்கூட இது மாதிரியான விடயங்களில் ஆணித்தரமான நடவடிக்கையை அது எடுக்கவில்லை.

இலங்கையில் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையின் வன்முறையில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்கிற உறுதியானசெய்தி இந்தஅரசியல்தலைமையாலும் வெளிப்படுத்தப்படவில்லை. இதனால்தான்பொலிஸாரின் போக்கிலும்மாற்றம்ஏற்படவில்லை. அரசு இது விடயத்தில் உறுதியான தலைமைத்துவத்தைக் கொடுத்திருந்தால், சிறுபான்மையினரின் பாதுகாப்பில் தாம் அதீத அக்கறை உடையவர்கள்என்பதை ஆணித்தரமாகநிரூபித்திருந்தால்பொலிஸார் குறைந்தபட்சம் அதனைப் பின்பற்றவாவது முன்வந்திருப்பார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

ஏன், அமைச்சர் சாகலவேகூட, நடந்த சம்பவங்களை இனவாத நோக்குடைய, சிறுபான்மையினருக்கு எதிரான குற்றங்களாக ஏற்கவில்லை. அவை, ''இடம்பெறும்சம்பவங்களில் சில இன மற்றும் மத வெறுப்புக் கொண்ட சம்பவங்கள் அல்ல. அவை விபத்துக்கள் அல்லது குற்றச்செயல்கள். எனினும் முக்கிய பிரச்சினைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக எல்லாச்சம்பவங்களும் இனவாதச்செயல்பாடுகள்ஆக்கப்பட்டுள்ளன''என்றுஅவர்தெரிவித்திருக்கிறார்.

இப்படித்தான்காலம்காலமாகச்சிறுபான்மை இனங்களுக்கு எதிரான வன்முறைகள் எல்லாவற்றையும் வெறும் குற்றங்கள்எனக்குறுக்கி, ஒரு பெரும்பான்மைஅரசியல்தலைமையைக் கொடுத்து வருகிறார்கள். இதுவேதான் சிறுபான்மை இனங்களுக்கு எதிரான எல்லாக் குற்றங்களின் பெருக்கத்துக்கும் காரணம்.

# ஆற்று மணல் அகழ்வு ஏற்படுத்தும் கிணற்று நீர்வளப் பாதிப்பு

இரா.தனம்

ஒட்டுசுட்டான் பகுதியில் கிணறுகளின் நீர்மட்டம் குறைவதற்குக் காரணம் மலைகள் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதும், ஆறுகளில் உள்ள மணல் ஆழமாகத் தோண்டி எடுக்கப்படுவதுமே என முத்து ஐயன்கட்டு, கற்சிலைமடு, பேராறு, வசந்தபுரம் போன்ற கிராமங்களில் வசிக்கும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கற்சிலைமடு 3ஆம் கண்டம் என்ற பகுதியைச் சேர்ந்த தங்கராசா மகேந்திரம் என்பவர் இது குறித்துத் தெரிவிக்கும்போது; பேராற்றுக்கரையோரத்தில் வாழும் மக்களுக்கு இங்கு காணிகள் உள்ளன. எமது காணிகளில் வெட்டப்பட்ட கிணறுகள் எத்தனையோ வருடங்கள் நீர் வற்றாத கிணறுகளாக இருந்தமையால், எமது காணிகளில் வான்பயிர் உட்பட ஏனைய உப உணவுப்பயிர்களையும் விளைவித்து வந்தோம். மழை இல்லாது விட்டாலும், எமது வாழ்வாதாரத்துக்கான பயிர்களை செய்கை பண்ணி வந்தோம். ஆனால் இந்தப் பகுதியில் வெடிவைத்து கல் அகழ்வுகளை மேற்கொண்டு ஆழமாக்கத் தொடங்கியதாலும், சிற்றாறுகளிலும் பேராறுகளிலும் மணல் ஏற்றத்தொடங்கியதாலும் எமது காணிகளில் உள்ள கிணறுகளின் நீர்மட்டம் குறைந்து கொண்டு செல்லத் தொடங்கியது. இன்று எமது பயிர்களை காப்பாற்றமுடியாது வரட்சியினால் பாதிப்படைகிறோம். மலைகள் வெடிவைத்துத் தகர்க்கப்படுவதால் ஏற்படும் அதிர்வினால் நீர் மட்டம் குறைவது மட்டுமல்லாது, முன்னரெல்லாம் மழை இல்லாது போய்விட்டது. அதுமட்டுமல்ல ஆறுகளிலே மணல் ஏற்றினார்கள். ஆனால் நிலத்தைப் பெரிதாக அகழ்ந்ததில்லை. இப்போது ஆறுகளில் பெரியகுழிகளை அமைத்து மணல் அகழ்வைத் தொடர்கின்றனர். இதனால்கிணற்றின் ஆழத்தைவிட ஆற்றின் ஆழம் அதிகமாக உள்ளதால், கிணறுகளின் நீர்மட்டம் குறைந்து வருகின்றது. ஆறுகளின் நடுவில் ஆற்று மணலை உழவுயந்திரத்தின் மூலம் பிளேட் பூட்டி இழுத்து ஏற்றப்படுவதாலும், குழிகளை அமைத்துத் தோண்டப்படுவதாலும் விவசாயிகளான நாம் பாதிப்படைகிறோம்.

### மணல் அகழ்வு மட்டுப்படுத்தப்படாததால் ஏற்படும் பாதிப்பு

மணல் அகழ்வானது மட்டுப்படுத்தப்படாது, உள்ளூர் அமைப்புகளாலும், தனியார்களினாலும், வெளி மாவட்டங்களில் உள்ளோர்களாலும் தொடர்ந்து அகழப்படுவதால் எமது வளங்கள் அழிவடைந்து வருவதுடன் நாமும் பாதிப்படைந்து வருகிறோம்.

எனவே எமது பகுதியில் கிராமங்களை அண்டிய பகுதிகளில் ஆற்றில் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்தவேண்டும். மணல் ஏற்ற அனுமதி பெற்றாலும், அனுமதிக்கப்படும் அளவுக்கு மேலதிகமாக அகழ்வு இடம்பெறுகிறது. எமது கிராமத்தைச் சுற்றிப் பேராறு ஓடுகின்றது. அதனைவிட சிற்றாறுகளும் ஓடுகின்றன. இவற்றில் எங்குபார்த்தாலும் மிகவும் ஆழமாகவே மணல் அகழப்பட்டு ஆறுகள் ஆழமாக்கப்பட்டுள்ளன. இந்த ஆறுகளை விடுத்து வேறு இடங்களில் மணல் ஏற்ற ஆவன செய்யப்பட வேண்டும். கிணற்றைவிட குறிப்பிட்ட ஆறுகளின் நீரைப் பயன்படுத்தி எத்தனையோ பேர் உப உணவுப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர். தற்போது அத்தகைய வாய்ப்புக்கூட இல்லாது போய்விட்டது எனவும் தெரிவித்தார்.

இதேபோன்று பேராறு, குருவிச்ச ஆறு போன்ற ஆறுகளை அண்மித்து வாழும் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில், "ஆறுகளில் தொடர்ச்சியாக மணல் ஏற்றப்படுவதால் ஆறுகள் பெரிய அளவில் ஆழமாகி கிணறுகளின் நீர் மட்டம் குறைந்து வருவதுடன், ஆற்றோரங்களில் உள்ள எமது காணிகளில் உள்ள வளங்களும் அழிவடைகின்றன. மேற்குறிப்பிட்ட விவசாயிகளின் கருத்து நூறு



வீதம் உண்மையானது. ஆறுகள் ஆழமாக்கப்படுவதால் அருகாமையில் உள்ள மரங்களும் சரிந்து வீழ்ந்து, அதிகமான வெள்ளம் ஏற்படும் காலத்தில் மரங்கள் அடித்துச் செல்லப்படுவதால் கட்டப்பட்டுள்ள பாலங்களும் பாதிப்படைகின்றன. உதாரணத்துக்கு கனகரத்தினபுரம் செல்லும் வழியில் அமைக்கப்பட்டுள்ள பாலம், அருகில் நின்ற பெருமரங்கள் காரணமாக வேரோடு சாய்ந்து வீழ்ந்ததால் சேதமடைந்துள்ளது.

எனவே கிராமங்களை அண்டிய ஆறுகளில் மணல் அகழ்வு முற்றாக தடைசெய்யப்படுதல் வேண்டும். இதனைப் பிரதேச செயலகத்தினர், பிரதேசசபையினர் ஆகிய தரப்பினர் கண்காணிக்க வேண்டும். வெறுமனே பொலிஸாரை நம்பி இந்த விடயத்தில் அசட்டையாக இருந்தல்கூடாது.

### பயனற்றுப் போன குழாய்க்கிணறுகள்

கிணறுகள் அமைப்பது அதிக செலவீனத்தை ஏற்படுத்தவதால், எமது கிராமங்களில் முன்னர் குழாய்க்கிணறுகளும் அமைக்கப்பட்டன. இதனால் மக்களின் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஓரளவு நீங்கியது. ஆனால் தற்போது குழாக்கிணறுகளிலிருந்து பெறத்தக்க நீரின் அளவு குறைந்து காணப்படுவதுடன், எத்தனையோ குழாய்க்கிணறுகள் நெடுங்காலமாகப் பழுதடைந்து இயங்கமுடியாத நிலையில் உள்ளன. இதனைத் திருத்தி அமைக்க எவரும் முன்வரவில்லை. அதுமட்டுமல்லாது போதியளவு பொதுக்கிணறுகளும் இல்லாத நிலை உள்ளது. இருக்கும் கிணறுகள் கூட சுத்தப்படுத்தப்படாததால் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளன. தற்போது வரலாறு காணாத வறட்சியினால் நாம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். குடிதண்ணீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறிவிட்டது. முன்னர் பிரதேச சபையினரால் நீர்த்தாங்கிகள் வைக்கப்பட்டு நீர்வழங்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது அத்தகைய செயற்பாடு இடம் பெறுவதில்லை. வைக்கப்பட்ட நீர்த்தாங்கிகளையும் மீள எடுத்துச் சென்றுள்ளனர். தமது காணிகளில் கிணறுகளைக் கொண்டிராத குடும்பங்கள் குடிதண்ணீர் பெற வேறு இடங்களுக்குச் செல்கின்றனர்.

குளிப்பதற்கு ஆறுகளைப் பயன்படுத்தியோரும் தற்போது கிணறுகளை நாடிச் செல்கின்றனர்.

கால்நடைகள் நீரின்றி அலைவதுடன், சேற்று நிலங்களில் (குளங்களில்) புதையுண்டு இறந்தும் வருகின்றன. சுருங்கக் கூறின் முல்லைமாவட்டம் பெரியதொரு வறட்சியை எதிர்கொண்டுள்ளது.

வான்பயிர்கள் குறிப்பாக , தென்னைவளம் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. தென்னைப் பயிர்ச்செய்கையாளர்கள் மிகவும் பாதிப்பை எதிர்கொண்டுவருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் முல்லை மாவட்டக் கிராமங்களின் அவலநிலையை நேரில் பார்வையிட்டு பொது அமைப்புகளோடு தொடர்புகொண்டு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். இங்குள்ள குழாய்க்கிணறுகள் திருத்தம் செய்யப்படுவதுடன் நீர் வசதியில்லாத குடும்பங்கள் வாழும் பகுதிகளில் மேலும் குழாய்க்கிணறுகள் மற்றும் பொதுக்கிணறுகளை அமைக்க ஆவன செய்யப்பட வேண்டும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆங்கிலவழிமூலம் – அசோசியேற்றட் பிறெஸ் – கிறிஸ்கன் பிரான்ஸிஸ்

மொழியாக்கம் – நித்தியபாரதி

# அரசுக்கு எதிராக அதிகரித்து வரும் தமிழ் மக்களது அதிருப்தி

இலங்கையில் இடம்பெற்று முடிந்த குருதி தோய்ந்த உள்நாட்டுப் போரின் எட்டாவது ஆண்டு கடந்த 18ஆம் திகதி நிறைவடைந்தது. இந்தப் போரின் போது காணாமற் போன தமது உறவுகளை அவர்களின் குடும்பத்தவர்கள் தேடிக்கொண்டிருக்கும் அதேவேளையில் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தமது நிலங்களை விடுவிக்குமாறும்தமிழ்மக்கள்கோரிக்கைவிடுத்து வருகின்றனர்.

போர் தமது கணவன்மாரை இழந்த பெண்கள்தமதுகுடும்பங்களைப்பராமரிப்பதிலும், ஊனமுற்றோர் எவ்வித தொழிலின்றியும்பெரும்துன்பங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

மக்கள் நிச்சயமற்ற உணர்வுடன் வாழ்வதாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

போரின்போது சாவடைந்த இலங்கை இராணுவவீரர்களின்குடும்பத்தவர்கள் கடந்த 18ஆம் திகதியன்று கொழும்பிலுள்ள போர் நினைவாலயத்தில் தமது அஞ்சலியைச் செலுத்தினர். அந்த நிகழ்வுக்கு இலங்கையின் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் வருகை தந்திருந்தார்.

இறுதிப் போர் இடம்பெற்ற முன்னைய போர் வலயத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயத்துக்கு அருகில் தமிழ் மக்கள் நினைவு அஞ்சலியைத் செலுத்தினர். அதுமட்டுமல்லாது, தமிழ்மக்கள் வாழும் வடக்கு மற்றும் கிழக்கின் பல இடங்களிலும் போரின்போது இறந்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

**தமிழர் பகுதிகளில் இராணுவப் பிரசன்னம் குறித்த ஆட்சேபனை**

உள்நாட்டுப் போர் முடிவடைந்ததிலிருந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெறாவிட்டாலும் கூட, வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளதாக வடக்கிலுள்ள தமிழ் மக்கள் முறையிட்டுள்ளனர். ஆனால் தொடர்ந்தும் இராணுவத்தினரின் பலத்தை அதிகரிக்கவுள்ளதாக கடந்த 18ஆம் திகதியன்று அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்ட அரச தலைவர் சிறிசேன தெரிவித்திருந்தார்.

'தேசிய பாதுகாப்பு மீது அரசு கவனம் செலுத்த வேண்டியபொறுப்பைக் கொண்டுள்ளது. எமது முப்படைகளையும்பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எப்போதும் எடுப்போம். கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் நாங்கள் எமது எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்' என அரச தலைவர் சிறிசேன தெரிவித்திருந்தார்.

போரை வென்றெடுத்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவை எதிர்த்து 2015 தேர்தலில்போட்டியிட்டுவெற்றி பெற்றசிறிசேனமீதுதமிழ்மக்கள்அதீத நம்பிக்கை வைத்திருந்தனர். 'மகிந்த ராஜபக்ச மீது மக்கள் கொண்டிருந்த கோபத்தைவிட தற்போதைய அரசாங்கத்தின் மீதே தற்போது மக்கள் அதிக கோபம் கொண்டுள்ளனர். என வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காகப் பணியாற்றும் ரி.பரந்தாமன் தெரிவித்தார்.

'சிங்களப் பெரும்பான்மை அரசு தமக்காக எதையும் தரப்போவதில்லை என்பது தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் அவநம்பிக்கைகள் காணப்படுகின்றன' எனப் பரந்தாமன் தெரிவித்தார்.

**வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறிய அரசு**

போரின்போது காணாமற்போன பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு என்ன நடந்ததுஎன்பதுதொடர்பாகத்தாம்கண்டறிந்து கூறுவதாக தற்போதைய அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அவற்றை அது இன்னமும் நிறைவேற்றவில்லை. போரின் இறுதி நாட்களில் தம்மிடம் ஒப்படைக்குமாறு இலங்கை இராணுவத்தினர் கூறியமையாலேயே தாம் தமது உறவுகளை அவர்களிடம் ஒப்படைத்ததாக காணாமற் போனோரின் உறவினர்கள் கூறுகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசு பல்வேறு வாக்குறுதிகளை வழங்கிய போதிலும், அரசாங்கத்தாலும் புலிகள் அமைப்பாலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல் சம்பவங்களை விசாரணை செய்வதற்கான நீதிப் பொறிமுறை எதுவும் இதுவரையிலும் அமைக்கப்படவில்லை.

புலிகள் அமைப்புடன் தொடர்புபட்டவர்கள் என்கின்ற குற்றச்சாட்டின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு பல ஆண்டுகளாக எவ்வித குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாதநிலையில்தடுத்துவைக்கப் பட்டுள்ளனர். எவ்வித குற்றங்களுமின்றி சந்தேகத்தின் பேரில் தடுத்து வைப்பதற்கான அனுமதியை வழங்கும் பயங்கரவாதத் தடைச் சட்டம் தற்போதும் நடைமுறையிலுள்ளது. இந்த நாட்டைத் தமிழ்ப் புலிகளிடமிருந்து பாதுகாத்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு தண்டனை வழங்குவதற்குத் தாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்என அடிக்கடிசிறிசேனதெரிவித்து வருகிறார்.

**மனித உரிமை மீறல்கள் குறித்து இருதரப்புக்கள்மீதும்குற்றச்சாட்டு**

போரின்போது பொதுமக்கள் மற்றும் வைத்தியசாலைகள் மீது கண்மூடித்தனமாக எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டமை மற்றும் போர் வலயத்திற்குள் அகப்பட்டுத்தவித்த பல ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு உணவு மற்றும் மருந்து போன்றவற்றை வழங்காது தடுத்து வைத்தமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளன. போரின் இறுதிக்கட்டத்தில் மட்டும் 40,000 வரையான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக ஐ.நா உறுதிப்படுத்தியது.

இதேபோன்று சிறுவர்களைப் போரில் ஈடுபடுத்தியமை, மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தியமை போன்ற பல்வேறு குற்றச்சாட்டுக்கள் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக முன்வைக்கப்பட்டன.


போரின் போது பல்வேறு மீறல்களில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது தொடர்ந்தும் அவர்களின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்துவதற்கோ அல்லது தேசிய பாதுகாப்பு மிக்க நாடாக இலங்கையை மாற்றுவதற்கான எவ்வித முயற்சியையும்அரசுமுன்னெடுக்க வில்லை என அனைத்துலக நெருக்கடிகள் குழுவால்வெளியிடப்பட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை இராணுவத்தினர் தொடர்ந்தும்வடக்கு கிழக்கில் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளமை மற்றும் போர் மீறல்கள் தொடர்பாக எவ்வித விசாரணையும் முன்னெடுக்கப்படாமை போன்றவை பல தமிழ் மக்களின் இன உணர்வுகளை மேலும் பலப்படுத்துவதற்கும் சிங்களவர்கள் மற்றும் முஸ்லீம்களுடன் குழப்பங்களை உருவாக்குவதற்கும் வழிவகுக்கும் என இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிராந்திய சுயாட்சியை வழங்குவதில் அரசாங்கம் தொடர்ந்தும் காலத்தை இழுத்தடிப்பதானது, நாட்டில் அமைதியின்மை ஏற்படவும், மோதல்கள் ஏற்படவும், வழிவகுக்கும் எனவும் அனைத்துலக நெருக்கடிகள் குழுவால் வெளியிடப்பட்ட அரசு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.







## ஆசிரியருக்கான கடிதம்

### கூட்டமைப்பின் தலைமையை விமர்சிப்பதை கஜேந்திரகுமார் கைவிட மாட்டாரா?

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தரை இழிவுபடுத்தும் வகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பொது இடங்களில் உரையாற்றி வருகின்றார். தமிழ் மக்களுக்குச் சம்பந்தர் நன்மை எதுவும் செய்யவில்லையெனவும் தீமைகளையே 'புரிந்துள்ளார் எனவும் அவர் கூறுகிறார்.

கூட்டமைப்பில் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்குரிய சுகங்களை அனுபவிக்கும் போது இனித்த சம்பந்தர், தற்போது மட்டும் கஜேந்திரகுமாருக்கு ஏன் வேப்பங்காயாகக் கசக்கின்றார் என்பதை சாதாரண அறிவுள்ள பொதுமகன் கூடப் புரிந்து கொள்வான். முள்ளிவாய்க்காலில் சம்பந்தருக்கு ஏற்படுத்தப்பட்ட அவமானம் முழுத் தமிழர்களுக்கும் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாகும். அந்த வேளையில் அங்கு உடனிருந்த வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் குறித்த சம்பவம் தொடர்பாக வாயைத் திறக்காமல் மௌனம் கடைப்பிடித்து வருகின்றார். தாம் சார்ந்த அமைப்பின் தலைவருக்கு ஏற்பட்ட அவமானத்துக்கு வருத்தம் தெரிவிப்பதைக் கூட அவர் தவிர்த்துள்ளார். ஆனால் வடக்கு மாகாண சபையில் இந்தச் சம்பவத்தைக் கண்டித்துப் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை பாராட்டுக்குரியது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது கூட்டமைப்புக்கு எதிராகப் பரப்புரைகளில் ஈடுபட்ட கஜேந்திரகுமார் அணியினரால் சொற்ப வாக்குகளையே பெறமுடிந்தது.

கூட்டமைப்புக்குக் கிடைக்க வேண்டிய ஒரு நாடாளுமன்ற ஆசனத்தை இல்லாமல் செய்தது தான் இவர்கள் செய்த சாதனை. மக்களை உசுப்பேத்தி விடுகின்ற உரைகளை இவர்கள் மேற்கொள்வன் மூலம் இவர்களால் எதையும் சாதிக்க முடியாது. ஆனால் மக்க ளின் உணர்ச்சிகளைக் கிளறிவிடு வதே இவர்களின் வழமையான செயற்பாடாகிவிட்டுள்ளது. இவர்களின் தூண்டுதல் காரணமாகவே முள்ளி வாய்க்காலில் சம்பந்தருக்கு அவமானம் விளைவிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஐயம் தற்போது மனதில் எழுகின்றது.

இதுவரை தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கஜேந்திரகுமார் என்ன செய்துள்ளார் என்பதை அவரே ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதை விடுத்து கூட்ட மைப்பையும் அதன் தலைவரையும் கேவலமாக விமர்சிப்பதை அவர் இனியா வது நிறுத்திக் கொள்ள வேண்டும்.

*மா.சண்முகராசா, நவிண்டில்*



# கண்ணியமாய் தன் கடமைய

# உயர்திரு. பொ.சிவானந்தராஜா அ

## ஆசிச்செய்தி



சைவமும் தமிழும் இனிதே நிரம்பி ஊறுகின்ற யாழ்ப் பாண நன்னகரின் விளங்கு புகழ் சான்றோர் உருவான தீவகத்தின் வேலணைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து இம்மண் ணிற்குப் பல ஆயிரம் கற்றவர் மாணவ சமுதாயத்தை உருவாக்கி அளித்த திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் மணிவிழாக் காணும் இவ்வேளை அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவது மனநிறைவைத் தருகின்றது. "எழுத்தறிவித்தவன் இறைவன்" ஆனாலும் இவ் ஆசிரியத் தொழிலை அந்த இறைவனாலும் ஆற்ற முடியாது. அப்படிப்பட்ட பணியில் சிவானந்தராஜா அவர்கள் பல வருடங்கள் சேவையாற்றி இச் சமூகத்துக்கு நல்ல ஒழுக்கசீலர்களாக மற்றவர்களுக்கு வழிகாட்டி உள்ள நல்லதொரு மாணவர் பரம்பரையை உருவாக்கிச் செல்வது இறைபணி என்றே கருதுகின்றேன். மேலும் அவர் இவ் ஓய்வுக் காலத்தில் சந்தோசமாக மனநிம்மதியாக உடல் நலத்தோடு வாழ எல்லாம் வல்ல முருகப் பெருமானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

" என்றும் வேண்டும் இன்ப அன்பு ""

**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமி.**
**இரண்டாவது குருமஹா சந்நிதானம்**
**நல்லை ஆதீனம்**

## அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



"அறிஞர்க்கு அழகு கற்றுணர்ந்து அடங்கல்""


என்னும் ஆன்றோர் வாக்கிற்கு அமைவாக கல்வி கேள்விகளால் உயர்ந்து அன்பும் அடக்கமும் மானிடப்பண்பும் அழகூட்ட பல்துறை ஆற்றல்களால் கல்வித்துறையை அலங்கரித்த வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளர் உயர் திரு. பொன்னம்பலம் சிவானந்த ராஜா அவர்களது அறுபதாவது அகவையில் அவரை வாழ்த்துவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

கல்வி கற்கும் காலத்தில் சிறந்த மாணவனாகவும் பின் பல்வேறு பட்டங்களையும் பெற்று 01.03.1979 ஆம் ஆண்டு தொடக்கம் 34 வருடங்கள் சிறந்த ஆசிரியராகவும் பணிபுரிந்து 15.02.2013 தொடக்கம் வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளராக நான்கு வருடங்கள் திறம்படப் பணியாற்றினார். போராட்ட காலங்களில் பெரும் பாதிப்புக்குட்பட்டிருந்த இப்பிரதேசத்தை மீண்டும் தொடங்கும் மிடுக்குடனும் புது உத்வேகத்தை ஊட்டிய பெருமை இவரையே சாரும். அழிக்கப்பட்ட வேலணை மண்ணை அழகூட்டி கல்வியறிவினைப் புகட்டி மக்கள் மனதிலும் மாணவர் மனதிலும் உள்ள அறியாமையினை அகற்றி அறிவை ஊட்டி பல்துறைப் பரிமாணப் பாங்குடைய பண்பாலும் திறனாலும் தனக்கென வோர் செயலொழுங்குப் பாணியும் துணிவும் ஒருங்கே இணைந்த ஆளமை மிக்க இவர் மென்வாக்காலும் இன்முகத்தாலும் மாற்றாரையும் கவர்ந்து செயல்ாற்றும் திறன் கொண்ட கல்விச் சிந்தனையும் கால நேர நெருக் கடியிலும் தன் கடன் பணிசெய்து கிடப்பதே என வாழ்ந்தவர் என்றால் மிகையில்லை.

கற்றுணர்ந்த குணவோன் தனை கல்லை, காரைநகரின் மைந்தனை அறுபது அகவையாம் மணிவிழா நாளில் சீரும் சிறப்பும் பேரும் புகழும் கொண்டு நீடூழி வாழ வாழ்த்துகின்றேன்.

**திருமதி. விஜயகலா மகேஸ்வரன் (பா.உ)**
**சிறுவர் விவகார இராஜங்க அமைச்சரும்,**
**யாழ் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு**
**இணைத்தலைவரும்.**

## வாழ்த்துச் செய்தி



வேலணைக் கோட்டக் கல்விப். பணிப்பாளர் திரு.பொன்னம் பலம் சிவானந்தராஜா அவர்கள் ஆசிரியராக சேவை ஆற்றி படிப்படியாக வளர்ந்து கோட்டக் கல்விப் பணிப்பாளராக 04 வருடங்கள் சேவையாற்றி. இன்று மணிவிழா நாயக னாக வீற்றிருக்கிறார். அவரது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகிறேன்.

வெறுமனே கல்வியை மட்டும் போதிப்பதுடன் மட்டும் நின்றுவிடாது மண்ணில் பிறந்த குழந்தை வாழ்வில் நெறி பிறழாது வாழத் தேவையான ஒழுக்கம், பண்பு, ஆன்மீகம், பொதுஅறிவு போன்றவற்றையும், மாணவ சமூகத்திற்கு தேவையான ஆற்றல், ஊக்கம், விடாமுயற்சி, தன்னம்பிக்கை அனைத்தையும் அவர்களுக்கு உட்புகுத்தி, பண்புள்ள மானுடர்களாக உருவாக்கி சமூகத்திற்கு வழங்குவதில் ஆசிரிய சேவை மகத்தானது. இவ்வாறே தனது உன்னத பணியை செவ்வனே செய்து தன் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் திரு.பொன்னம் பலம் சிவானந்தராஜா அவர்கள். இவரது இளைப்பாற்றுக் காலத்தில் மனநிறைவுடன் மகிழ்வாக வாழ வாழ்த்துவதோடு, மணிவிழா சிறப்புடன் நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. த.குருகுலராசா -**
**அமைச்சர்.**
**வடக்கு மாகாண கல்வி அமைச்சு**

## மனமகிழ்வுடன் வாழ்த்துகின்றேன்



உயர்திரு. பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் நல்ல கணவராக, நல்லாசிரியனாக, நல்ல நண்பனாக, நல்ல தந்தையாக, பாராட்டுமிக்க அதிபராக, பண்பான அதிகாரியாக பரிணமித்து ஓய்வுபெறும் நண்பன் சிவானந்தராஜாவின் அறுபதாவது அகவையில் வாழ்த்துவதைப் பெருமையெனக் கொள்கின்றேன். பண்பான மனிதர்களுக்கு அடையாளமாக விளங்குகின்ற யாழ். தீபகற்பத்தின் காரைநகர் பெற்றெடுத்த பொன்னம்பலம் நாகம்மா தம்பதியரின் புதல்வன் சிவானந்தராசா எப்போதும் மகிழ்வான சிரிப்போடு நடமாடும் உன்னதமான நண்பன்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பெற்றெடுத்த அருமைக் குழந்தை, யாழ்.மத்திய கல்லூரியின் மைந்தர்களுக்கே உரித்தான உன்னத பண்புகள் பலவற்றைப் பறைசாற்றி நிற்கும் நல்ல மனிதன். பாடசாலைகளிலும், தனியார் கல்வி நிலையங்களிலும் புகழ்பூத்த விஞ்ஞான பாட ஆசிரியராக விளங்கியவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் இக்கட்டான காலகட்டத்தில் நீண்டகாலம் ஆசிரியப்பணி செய்து பலநூறு மாணவர்களின் உயர்ச்சிக்குப் பாடுபட்டவர்.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினராக இருந்து நண்பன் என்ற வகையில் பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கியவர். எல்லோருடனும் இசைந்து பழகும் பக்குவத்தை இவரிடமே நாம் கற்க வேண்டும். விட்டுக்கொடுப்புக்களும், வீண்வசை பாடாமையும் இவரிடம் உள்ள அரிய குணம். சிரித்துக்கொண்டு முகத்தெதிரே பேசுகின்ற பாங்கு இவருக்கே உரித்தானது. ஆசிரியனாக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக இவர் அலங்கரித்த பதவி கள் அனைத்தும் சிறப்பானவை. நல்ல மனையாளோடு, நல்மக்கட்பேற்றுடன் நீண்ட ஆயுள்கொண்டு வாழவேண்டுமென்று அகவை அறுபதில் வாழ்த்து கின்றேன்.

சிவாவிற்கு அகவை அறுபதே தவிர. சிவாவின் துடிப்புக்கு இப்பொழுதும் பதினாறே.

**சரா.புவனேஸ்வரன்,**
**பொதுச்செயலாளர்,**
**இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வரின் செய்தி



கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளாக கல்விச்சேவையில் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக அரும்பெரும் சேவையாற்றி ஓய்வுபெறும் எமது அன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களுக்கு எமது யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறைமாவட்டம் சார்பாக மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

கல்விப் பணிக்கென தான் பெற்றுக்கொண்ட அழைப்பை இறைபணியாக ஏற்று அப்பணியின் தார்ப்பரியத்தைத் தெளிவாக உணர்ந்து தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட கல்விச் சமூகத்தை ஒரு சொத்தாக மதித்து இவர் ஆற்றிய அளப்பரிய பணியினால் பலனடைந்து வாழ்வில் உயர்ந்து நிற்கும் ஒவ்வொரு உள்ளம் சார்பாகவும் எமது நன்றி மலர்களை சமர்ப்பிக்கின்றோம்.

இலங்கைத் தீவிலேயே மிகவும் நெருக்கடிகளும், கஷ்டங்களும் மலிந்த தீவகத்தில் அவற்றைப் புரிந்துகொண்டு மத வேறுபாடுகளின்றி, மனிதமாண்பினை மதித்து இவரால் மேற்கொள்ளப்பட்ட பல வெற்றிகரமான முன்னெடுப்புக்களுக்காகவும் அதனால் மக்கள் அடைந்த நன்மைகளுக்காக வும் எமது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

இறை ஆசீர் இவர் மீது நிறைவாகப் பொழியப்படவும், அமைதியோடும், மகிழ்ச்சியோடும், நல் ஆரோக்கியத்தோடும் தனது ஓய்வுகாலத்தில் இன்புற்று வாழவும் அன்போடு வாழ்த்தி நிற்கின்றோம்.

**அருட்திரு ப.யோ.ஜெபரட்ணம்,**
**குருமுதல்வர்,**
**யாழ்.கத்தோலிக்க மறைமாவட்டம்.**

## முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி




கல்வித் திணைக்களத்தின் வேலணைக் கோட்டத்தில் மிக நீண்டகாலமாக கோட்டக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி அதிபராக, நல் ஆசானாக அரும் சேவையாற்றி ஓய்வுபெறும் கோட்டக்கல்விப் பணிப்பாளராக திரு. பொன்னம்பலம் சிவானந்த ராஜா அவர்கள் தமது 60 ஆவது அகவையை பூர்த்திசெய்து அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி நடைபெறவிருக்கும் பிரிவு உபசார விழாவிற்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பிவைப்பதில் மகிழ்வடைகின்றேன்.

எழுத்தறிவத்தவன் இறைவனாவான் என்ற முதுமொழிக்கு அமைவாக கற்பிதல் பணியை கடந்த 38 ஆண்டுகள் சிறப்புற நடத்தி ஆசிரியராக, அதிபராக, கோட்டக் கல்விப்பணிபாளராக பல பதவிகளை வகித்ததுடன் மட்டும் நின்றுவிடாது கற்பித்தலுடன் இணைந்து தன்னையும் கல்விப் புலத்தில் வளப்படுத்திக் கொண்ட இப் பெருமகனின் ஓய்வு கல்வித்துறைக்கு ஒரு இழப்பாக இருக்கும் என எண்ணுகின்றேன்.

அறுபது வயதில் அரச சேவையில் இருந்து ஓய்வுபெறுவது என்பது தவிர்க்க முடியாத ஒரு விடயமாக உள்ளபோதிலும் ஓய்வு காலத்திலும் தமது ஆற்றலையும் அறிவையும் வடபுலத்தின் கல்வி மேம்பாட்டிற்கு அர்ப்பணிக்க முன்வர வேண்டும் என இத்தருணத்தில் வினையமாக வேண்டுவதுடன் அவரின் ஓய்வு காலம் சுபீட்சமானதாகவும் சுகபலத்துடன் இன்னும் பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என வாழ்த்தி எனது வாழ்த்துரையை நிறைவு செய்கின்றேன்.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்**
**முதலமைச்சர் வடமாகாணம்.**

## அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



உயர்திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களின் மணிவிழாவினை முன்னிட்டு வெளியீடு செய்யும் பத்திரிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

திருவாளர் பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் ஆரம்பக் கல்வியினை காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும், இடைநிலை மற்றும் உயர் நிலைக் கல்வியினை யாழ்.மத்திய கல்லூரியிலும் கற்றுக்கொண்டார். விஞ்ஞான விஷேட பயிற்சியினை NIE யிலும் கல்விமாணிப் பட்டத்தினையும் பெற்று பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமாவினைப் பெற்ற அதேவேளை நல்லாசிரியராக, முதலாந்தர அதிபராக விளங்கிய பெருமைக்குரியவர்.

38 வருடங்களாக நல்லாசானாக, அதிபராக மற்றும் கோட்டக்கல்விப் பணிப்பாளராக கல்விச் சமூகத்துக்குச் சிறந்த சேவையாற்றி மணிவிழாக் காணும் இவ்வேளை வெளியீடு செய்யும் சிவா பத்திரிகை மலருக்கு முழு முயற்சியுடன் முனைந்திருப்பது போற்றுதற்குரியது. மணிவிழா நாயகன் பண்பின் சிறப்பை பார்புகழ மெச்சுவதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறப்புற அமையவும் இறைவனைப் பிரார்த்தித்து என் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**

## வாழ்க வளமுடன்



தீவகக் கல்வி வலயத்தில் வேலணைக் கோட்டத்தின் பணிப்பாளராகக் கடமையாற்றி மணிவிழா நிறைவி பணிநயப்பு விழாக் காணும் திரு. பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்துரை வழங்கு வதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

ஆசிரிய சேவையில் கணித ஆசிரியாரகச் சேவையில் இணைந்த இவர் சிறந்த பணியினை ஆற்றியவர் தொடர்ந்து யா / காரை இந்துக்கல்லூயின் அதிபராகப் பணி செய்து காரை மண்ணின் மாணாக்கர் பல்துறை விற்பன்னராக ஊன்று கோலானவர். அர்ப்பணிப்புடனான இவரதுசேவை பாராட்டப் படவேண்டியது.

பின் 2013 ஆம் ஆண்டளவல் தீவக வலயத்தில் கோட்டக் கல்விப் பணிப்பாளராக இணைந்து கொண்டார் தீவக மாணவரின் நலனிலே அக்கறையோடும் ஆசிரியர், அதிபரிடத்தே நன்மதிப்பினைப் பெற்றும் பணியாற்றிய பெருமை இவரையே சேரும். வசதியையும், வாய்ப்பினையும் பாராது சொந்தநலனை எண்ணாது ஊரை யும், உறவுகளையும் நேசித்தவர் தமது வாழ்க்கையெனும் பெரும் பயணத்தில் எமது கோட்டத்தோடு தம்மை இணைந்து உழைத்த இவரைப் பாராட்டுவதிலும் வாழ்த்துவதிலும் பெருமைப்படுகின்றேன்.

மானிடப் பிறவிக்கு மாண்பினை உட்பாய்ச்சும் கல்வி எனும் கருவூயம், நல்லார் கைப்பட்டு வெளிப்படுத்தப்பட்டால் அந்தப் பிரதேசமே ஏற்றம் பெறும் என்ப துண்மை "தாம் இன்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" எனும் வாக்கிற்கமைய கோட்டம் சார் கல்வி நிலை ஏற்றம்பெற முழுமையாக உழைத்த விழா நாயகரை வையகமும், வானகமும் வாழ்த்தும் அத்தோடு எனது வாழ்த்தும் உரித்தாகட்டும். சகல நலன்களும் பெற்று குடும்ப சமேதராய் நீடு வாழு எல்லாம் வல்ல ஈழ சிதம்பரேஷ்வரர் தான் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சு.சுந்தரசிவம்**
**வலயக் கல்விப் பணிப்பாளர் தீவகம்.**



# உயர்திரு பொன்னம்பல

**(SP.Trd.Sc, B.Ed(HONS), Dip.**

(கோட்டக்கல்விப் பணிப்ப

தந்தை : இராசையா பொன்னம்பலம்
தாய் : பொன்னம்பலம் நாகம்மா
மனைவி : சி.இராஜேஸ்வரி
பிள்ளைகள் : சிவபிருந்தன் (கொழும்பு)
சிவவதனி (லண்டன்)
மருமக்கள் : ரி. துளசி
த.விமலாகரன் (லண்டன்)
பேர்த்தி : வி.விமிதா

**சேவைக்காலம் -**
38 வருடங்கள்
(கோட்டக்கல்விப் பணிப்பாளர்
04 வருடங்கள்)




கல்வி : ஆரம்பக்கல்வி
இடைநிலை, உ

தொழிற் தகைமைகள்

01. வ/புளியங்குளம் G.T.M
ஆசிரியர் -
02. வ/கோவில் புதுக்குளம்
ஆசிரியர் -27.0
03. பலாலி ஆசிரியர் பயிற்
ஆ.மாணவர் - 19.01.1
04. வவுனியா CCTM Sc
ஆசிரியர் - 01.01.1984
05. வவுனியா மகாவித்திய
06. யாழ்ரன் கல்லூரி - கா
07. யா/சென்மேரிஸ் வித்தி
08. யாழ்ப்பாணம் இந்துக்க
09. யா/கோப்பாய் மகாவித்
10. யா/Dr. தியாகராஜா ம.ம
11. கோட்டக்கல்வி அலுவல
கோட்டக்கல்விப் பணிப்ப

## வாழ்த்தி எழுத முடியவி
## வணங்கி எழுதுகின்றே



1979 ஆம் ஆண்டு என்தாயின் கருவறையில்
வெளிவந்து விழித்துப் பார்த்தேன் - புளியங் குளத்தில்
அதிபர் அறையில் கடமையேற்று கையொப்பம் இடுகிறீர்கள்
உங்கள் குணத்திலும் குறை ஒன்றும் இல்லை
கடமையிலும் கறையொன்றுமில்லை இந்த
அதிசயம் 38 வருடங்கள்
எப்படி உங்களால் சாத்தியமானது?
கற்றுத்தாருங்கள் ஏனென்றால் நானும்
நடக்க வேண்டிய நீண்ட தூரம் இருக்கிறது
பதவிக்காய் பணியாத நிமிர்ந்த நெஞ்சு – தீயதை
எதிர்க்கும் துணிவு
பாலையும் நீரையும் பிரிக்கும் பக்குவம் - நீங்கள்
மிதித்த புல்லும் நிமிர்ந்து பார்க்கும் பாசம்
வேஷம் போடாத வெளிப்படை

**தொகுப்பு:** T.தயாபரன் , ஆசிரிய
மண்டைதீவு மகாவித்தியாலயம்,
செயலாளர்,
இலங்கை தமிழ் ஆசிரிய சங்கம் தீவ

# இப்பத்திரிகை மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்

# அனைத்துப் பெருந்தகைகளுக்கு

# மையில் உயர்ந்தோனுக்கு.......

# அவர்களின் மணிவிழா சிறப்புமலர்





## லம் சிவானந்தராஜா

### Dip.in School.MGT) SLPS – 1

ணிப்பாளர், வேலணை)

கல்வி : யாழ்ரன் கல்லூரி, காரைநகர்.
லை, உயர்நிலைக் கல்வி : யாழ் மத்திய கல்லூரி
ள் : விசேட பயிற்சி விஞ்ஞானம்
கல்விமாணி - NIE
பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா NIE
அதிபர் தரம் - I
G.T.M.S
- 01.03.1979 - 26.06.1980
க்குளம் A.M.T.M.S
-27.06.1980 - 18.01.1982
பயிற்சி கலாசாலை
19.01.1982 - 31.12.1983
TM School
01.1984 - 30.01.1986
வித்தியாலயம் ஆசிரியர் - 01.02.1986- 31.12.1988
ரி - காரைநகர் ஆசிரியர் - 01.01.1989 - 31.05.1992
வித்தியாலயம் (O.L.R) ஆசிரியர் -01.06.1992 - 31.12.1997
இந்துக்கல்லூரி ஆசிரியர் - 01.01.1998 - 31.12.2005
மகாவித்தியாலயம் அதிபர் - 01.01.2006 - 15.06.2010
ஜா ம.மகாவித்தியாலயம் அதிபர் - 16.06.2010 - 14.02.2013
அலுவலகம் வேலணை
பணிப்பாளர் - 15.02.2013 - 26.05.2017

### யவில்லை - அதனால்
### ர்றேன்.

ல் நடிப்புக்கும் வளையாத நாக்கு...
ளியங் ஆற்றல் உள்ளவனை அரை நொடிக்குள்
அடையாளம் காணும் திறன்..
பூனை செல்லும் சிறிய வழிக்குள்
யானையைக் கூட போகவைக்கும் பேராற்றல்...
ஐயா! ஆண்டவா – எப்படி
இந்த ஆறடி மனிதனுக்கு அற்புத ஆற்றல் கொடுத்தாய்?
தொடர்ந்து வருகின்றோம் - Sir Plc
கற்றுத் தாருங்கள்
அம்புகளை ஏற்று மாலைகளை வெறுத்த
பீஷ்மரே இன்னும் இன்னும் இனிதே உயருங்கள்
வணங்குகின்றேன்...

T.தயாபரன்
ஆசிரியர் மண்டைதீவு மகாவித்தியாலயம்,

ம் தீவகம்

P. பகீரதன்
அபிவிருத்தி உத்தியோகத்த
கோட்டக் கல்வி அலுவலகம்
வேலணை.



### ஆசிச் செய்தி

யாழ்ப்பாணத்தின் இதயபூமி என்று சொல்லப்படுகின்ற தீவகத்திலே நீண்டதொரு கல்விப்பாரம்பரியம் தோன்றி வளர்ந்திருக்கின்றது. அதில் குறிப்பிட்ட கட்டத்திலே இணைந்து கொண்ட திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் அர்ப்பணிப்புள்ள கல்விச்சேவையினை வழங்கியுள்ளார் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஏனைய சார்பு வளங்கள் தீவகத்தில் மிகக் குறைவாக உள்ள போதும் இருக்கின்ற வளத்தினைக்கொண்டு உச்சப்பயனைப் பெற்றுவிட யாவரும் முயற்சித்தல் சிறப்பானது. இக்கால கட்டத்திலே வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரியினுடைய ஓய்வு சிறு மனவருத்தத்தைத் தந்தாலும் இது கட்டாயமானது என்ற அடிப்படையிலேயும் அவருடைய குடும்பத்தாருடன் மகிழ்ச்சிக்குரிய காலமாக அது அமையவேண்டும் என்ற வகையிலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்று குறிப்பாக கடல் கடந்த தீவுப் பாடசாலைகளிலும் அதிலும் நயினாதீவுப் பாடசாலைகளில் இவருடைய தரிசிப்பும், கண்காணிப்பும் அதிகமாய் இருந்ததை நான் அவதானித்திருக்கின்றேன். 38 வருட கல்விச் சேவையினைப் பூர்த்திசெய் கின்ற திரு.பொ. சிவானந்தராஜா அவர்கள் நல்லாசானாக, திறமைமிகு அதிபராக, வினைத்திறன் கூடிய கோட்டக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வு பெறுவது உண்மையில் போற்றுதற்கும் வாழ்த்துதற்கும் உரியது. எனவே ஓய்வுக் காலத்தில் அவர் மகிழ்ச்சியாக மனநிறைவோடு வாழ வேண்டும் என ஆசி கூறுகின்றேன்.

**நவதஹல பதும கீர்த்தி திஸ்ஸ**
**நாயக்க தேரோ**
**நாகதீப விகாரை- நயினாதீவு**



### நாடாளுமன்ற உறுப்பினரின் வாழ்த்துச் செய்தி

பலகாலம் நிறைபணி செய்து படிப்படியாய் உயர்ந்து அதனால் எல்லோர் மனதிலும் நிற்கின்ற உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். அறமும் ஆன்மீகமும் நிறையவே நிரம்பப்பெற்ற யாழ்ப்பாணத்தில் தக்கவழி சான் றோர் சமுதாயத்தை தன்னகத்தே கொண்ட தீவகத்தில் வேலணைக்கோட்டக் கல்விப் பணிப்பாளராக இருந்து இன்று அகவை அறுபதுடன் ஓய்வுபெற்றுச் செல்லுகின்ற திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் இயல்பிலே ஆன்மீக சிந்தனை அதிகம் கொண்டவர். ஆற்றல் மிகுந்த ஆசிரியராக தன்பணி தொடங்கி 29 வருடங்கள் நல்லதொரு மாணவ சமுதாயத்தை உருவாக்க உழைத்தவர். அதில் வெற்றியும் கண்டவர். விஞ்ஞானத்தில் நல்லதொரு விளைதிறன் மிக்க அதிபராக 7வருடங்களை இனிதே நிறைவு செய்து நீண்டதொரு கல்விப் பாரம்பரியத்தை தொடக்கி வைத்து வேலணைக் கோட்டக்கல்விப் பணிப்பாளராக தன் ஓய்வுக்காலத்தை நிறைவு செய்கின்றார். எம் தீவக கல்வி வளர்ச்சியிலே தனக்குரிய இடத்தினை தக்க வைத்துக்கொண்ட இன்று எல்லோர் மனதிலும் நிறைவானதொரு நிலையெய்தி ஓய்வு பெறுகின்றார்.

**டக்ளஸ் தேவனந்தா**
**நாடாளுமன்ற உறுப்பினர் (யாழ். தேர்தல் மாவட்டம்)**
**செயலாளர் நாயகம்**
**(ஈழ மக்கள் ஜனநாயக கட்சி)**



### வாழ்த்துச் செய்தி

வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் உயர்திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்களது 60 ஆவது அகவையினை அடைந்து சேவைநலம் பாராட்டு விழாவிற்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

யாழ் காரைநகரைப் பிறப்பிடமாக கொண்ட திரு பொன்னம்பலம் சிவானந்தராஜா அவர்கள் 1979 தொடக்கம் 2015 வரை ஆசிரியராக யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரையில் உள்ள பிரபல பாடசாலைகளில் (யாழ் இந்துக் கல்லூரி உட்பட) கடமையாற்றியுள்ளார். மேலும் 2006 தொடக்கம் 2012 வரை யா/கோப்பாய் மகாவித்தியாலயம் யா/ Dr.தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராக கடமையாற்றியுள்ளார். 2013 இல் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்று வேலணையில் 26.05.2017 வரை கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார். எல்லாமாக 38 வருடங்கள் கல்விப்புலத்தில் சேவையாற்றியுள்ளார். இவரது 38 வருட சேவையை பாராட்டுவதோடு அவரது சேவை கல்விப்புலத்தில் தொடர, அவர் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்று இறைவனை பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

**பேராசிரியர் சி.விக்கினேஸ்வரன்**
**உபவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



### ஆளுமை மிக்க நாயகன்

மணிவிழாக் காணும் மணிவிழா நாயகன் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய எமது கல்லூரியின் முன்னாள் அதிபரும், தற்போதைய வேலனை கோட்டக்கல்விப் பணிப்பாளருமான திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். காரை இந்துக் கல்லூரி அதிபராக வரலாற்றில் தடம் பதித்து கல்லூரியின் வளர்ச்சிக்காக அயராது உழைத்தவர். பின்னர் வேலணை கோட்டக்கல்வி அதிகாரியாக பதவியால் உயர்ந்தவர்.

பழகுவதற்கு எளியவர். இனியவர் ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்வி அதிகாரியாக கல்விப் புலத்தில் தடம் பதித்தவர். அதிபர்களை, ஆசிரியர்களை, மாணவர்களை அன்புக்கட்டுக் கோப்புக்குள் சுவாரசியமாக வைத்து நிர்வாகம் செய்யும் திறன் கொண்டவர்.

38 ஆண்டுகள் கல்விப்புலத்தில் சேவையாற்றி இன்றுடன் ஓய்வு பெறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் அவர்கள் ஓய்வு காலத்தில் தமது குடும்ப உறுப்பினரோடும் சமூகத்தோடும் நல்லுறவாடி, நற்பணியாற்றி மனமகிழ்வு பெற்று உடல் நலத்துடன் இன்னும் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் அருள் பாலிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**திருமதி.சிவந்தினி வாகீசன்**
**பிரதி அதிபர்**
**யா/காரைநகர் இந்துக் கல்லூரி,**
**காரைநகர்.**



### ஆசிச் செய்தி

எப்பணியிலும் பெரியபணி ஆதலின் கல்விப்பணியே உயர்ந்த பணி. இறைவனால் படைக்கப்பட்ட குழந்தைகள் தாய், தந்தைக்குப் பிறகு குருவிடமே ஒப்படைக்கப் படுகின்றார்கள் அவர்களை இந்த உலகிற்கு நல்லவராகக் கொடுக்கின்ற பாரிய பொறுப்பு ஆசிரிய சமூகத்திடமே ஒப்படைக்கப்படுகின்றது. இறைவனாலே கண் காணிக்கப்படுகின்ற இந்த உலகில் தரமான ஒரு சமுதாயத்தை உருவாக்குதல் மிகச் சிறந்த ஆசிரிய பணி. அதனை ஏற்று திரு.பொ.சிவானந்தராஜா அவர்கள் திறம்பட தன் பணியை நிறைவேற்றியிருக்கின்றார். இத் துறையில் நீண்ட காலம் பணியாற்றிய அவர் ஆளுமை மிக்க ஓர் மாணவர் சமுதாயத்தையும் ஆக்கியளித்துள்ளார். இன, மத பேதமின்றி இவர் ஆற்றிய பணிபோறுதற் குரியது. இவருடைய ஓய்வுக்காலம் கல்வி தன்னிலும் கைப்பொருள் தன்னிலும் கல்வியே அதிசிறப்பானது என்பதை அகத்தில் இருத்தி அள்ளி அள்ளித் தெளித்து அறிவை வளர்த்து ஆளானவர்கள் அன்னாரை மறவார் என்றும். ஆதலால் அன்னாரின் நீண்ட வாழ்வுக்கும் நிறைவான ஆரோக்கியத்திற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

வஸ்ஸலாம்

**அல்ஹாஜ் ஏ.எம்.ஏ. அஸீ**
**(மௌலவி (காஸிமி**
**யாழ்/ கிளி மாவட்**
**உலமாசபை சர்வமத தலைவ**



### அரச பணியிலிருந்து ஓய்வுபெறும் கல்வியியலாளர் திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா

திரு.பொன்னம்பலம் சிவானந்தராஜா 1979 தொடக்கம் 2017 வரை மொத்தமாக 38 வருடங்கள் அரச பணியில் ஆசிரியராக, அதிபராக வவுனியா மாவட்டத்திலும் யாழ். மாவட்டத்திலும் கடமையாற்றியதுடன் அவரது சேவையின் நிறைவாக நான்கு வருடங்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளராக யாழ்.மாவட்டத்திலுள்ள வேலணைக் கோட்டக் கல்வி அலுவலகத்திலும் கடமையாற்றினார்.

இவர் தனது சேவைக்காலத்தில் கல்வியுடன் அறம், ஒழுக்கம் ஆகியவற்றைக் கற்பித்து இளம் சமூகத்தை நெறிப்படுத்தி நல்லாசிரியனாக ஒரு உத்தமமான கல்வியியலாளனாக மிளிர்ந்திருந்தார். அவர் தனது ஓய்வுக் காலத்தில் உடல் உள ஆரோக்கியத்துடன் பூரண ஆயுளுடன் தனது அன்புக்குரிய குடும்ப உறவுகள் சகிதம் அமைதியும் ஆனந்தமும் மிக்க வாழ்வைப் பெற இறைவனை வேண்டிப் பிரார்த்தித்து, வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

**றெஜினோல்ட் கூரே**
**ஆளுநர்,**
**வடமாகாணம்.**



### வாழ்த்துச் செய்தி

வேலணைக் கல்விக் கோட்டத்தல் கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.பொ.சிவானந்த ராஜா அவர்களது சேவையைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றேன்.

விஞ்ஞான பாடத்தில் விசேட பயிற்சியுடன் கல்வி மாணிப் பட்டத்தினையும் பெற்ற இவர் கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் ஆசிரியராக சிறந்த பணியினை ஆற்றியவராவார். தனது சிறப்பான ஆசிரியப்பணி காரணமாக அதிபராகத் தெரிவு செய்யப்பட்டு அதிபர் பணியினையும் சிறப்பாக ஆற்றியுள்ளார். சிறப்பான் அதிபர் பணியின் காரணமாக 2013 ஆண்டிலிருந்து இன்றுவரை வேலணை கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வில் செல்கின்றார். கோட்டக்கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் தீவக வலயத்தினது கல்விச் செயற்பாடுகளுக்கு இவர் பணிகள் அளப்பரியன.

இவரது 38 வருட கல்விப் பணியில் இவர் ஆற்றிய சேவைகளுக்கு எனது நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு இவரது ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்,**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்,**
**வடக்கு மாகாணம்.**



### உளமார உங்களை வாழ்த்துகிறேன்

பணியால் சிறந்து பணிவால் உயர்ந்த உயர்திரு. பொன்னம்பலம் சிவானந்தராஜா ஐயா அவர்கட்கு வாழ்த்துரை வழங்குவதற்கு வயதில்லை என் றாலும் தந்தபணி தரமாய் அமைய வேண்டும் என்ற அவரின் வழிகாட்டலுக் கேற்பவே நானும் ஒருவனாய் வாழ்த்துகின்றேன். சிவானந்தராஜா சேர் என்றாலே தனி விஷேடமிருக்கும். பல்துறை ஆளுமை கொண்ட சேர் அவர்கள் நிமிர்ந்து நிற்பது அவரது திறனின் அடையாளம். கடந்த நான்கு வருடங்களாக இவரது வழிநடத்தலின் கீழ் பணிபுரிந்த வாய்ப்பு எனக்கு இறைவன் அளித்த இன்னொரு கொடை. கடினமான வேலைகளைக் கூட இலகுவாய் இயன்ற வரை முடிப்பார். சிக்கலான பிரச்சினைகள் எழுகின்ற வேளை யாருக்கும் பாதகமின்றி தீர்க்கமாய்த் தீர்மானமெடுப்பார். 38 வருட கால கல்விச் சேவை யில் தான் பெற்ற அனுபவங்களை அதிபர், ஆசிரியர்களுக்கு தனக்குறிய நகைச்சுவைப் பாணியில் நாசுக்காய் சொல்வார். கற்றல், கற்பித்தல் கடந்து நல்ல நிர்வாகியாக மிளிர்ந்தார். மத்திய கல்லூரியில் கற்றுத் தேர்ந்து இந்துக் கல்லூரியில் கற்றுத் தேர்ந்து இந்துக் கல்லூரியில் ஆசிரியராக மிளிர்ந்தார். யாழ்ப்பாணத்தின் புகழ் பூத்த இரண்டு பாடசாலைகளிலும் இவருடைய பாதங்கள் சுற்றிச் சுழன்றன. அதிபர் சேவையில் தான் பெற்றுக் கொண்ட அனுபவங்களைத் தொகுத்து வேலணைக் கோட்டத்தை உயர்ச்சி பெற வைத்தார். இவருடைய ஓய்வுக்காலம் சிறந்து விளங்க இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

**ப.பகீரதன்**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**
**கோட்டக் கல்வி அலுவலகம்**
**வேலணை.**

## ாழ்த்துச் செய்திகள், நிதி பங்களிப்புக்கள் வழங்கிய
## க்கும் கோடி நன்றிகள் உரித்தாகட்டும்.

## அன்புடன் ஆசிரியரின் பழைய மாணவர்கள்.

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லையடி
# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த
# பொங்கல் விழாச் சிறப்பிதழ் - 26.05.2017

## வில்லையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை



### அம்பாளின் அருட்பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட்தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று, இன்றைக்கு சுமார் 51 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட்பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக்குழம் பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்துகின்றன.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அத்னை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக் கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

*''மேன்மை கொள் சைவ நீதி*
*விளங்குக உலகமெல்லாம்''*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

கே. வைத்திலிங்கம்

வில்லை மரத்தாளை வெவ்வினைகள் களைவாளை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வாளை
பொல்லா வினையகல புங்கங்குளத்தார் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்


கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி**
**சேலைச் சோலை**
(பட்டுப் புடைவைகளின்
சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோயிலுக்குத் தேவையான பட்டு சரிகைத்
துணிகள், பட்டு வேட்டிகள், சால்வைகள் மற்றும்
நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
25, 4 ஆம் குறுக்குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22
கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லாப், விடியோ அன் ஸ்ரூடியோ
20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்லையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. **நாதன்**
இல. 96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 0542

**மஹா விஷ்ணு ஹாட்வெயர்**
கட்டடப் பொருள் விற்பனை நிலையம்
712,மாபழம் சந்தி,
தொ.பே.077 905 0185
510, நாவலர் வீதி, நல்லூர்.
தொ.பே.077 905 0185
புங்கன்குளம் சந்தி,
தொ.பே.077 847 0341

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான
மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில்
பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
174, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

**மாருதி**
ரேடிங் சென்ரர்
16A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2932

**தம்பிப்பிள்ளைஅன் கோ**
**Thambippillai & Co**
(கால்நடை தீவனங்கள், மருந்து
வகைகள், கோழிக்குஞ்சுகள்
விற்பனையாளர்கள்)
343, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3353

உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர் 22
கரட் தங்க நகைகளைப் பெற்றிட
சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவெல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தரமான குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
22, மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும்
நகைகளை ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சாஜுகா நகைமாடம்**
64, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700

நியூ லக்கி ஹாட்வெயர்ஸ்
**NEW LUCKY HARDWARES**
**343, Kandy Road,**
**Ariyalai, Jaffna.**
**T.P. 021 373 4432,**
**077 237 8062**

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக
முறையில் அழகிய தங்க நகைகளைக்
குறித்த தவணையில்
செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமாடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய
நகைகளுக்கு நம்பிக்கை
வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
118 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜூவெல்லர்ஸ்**
158,193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

**BANUJAN SAW MILL**
**STATE APPROVED TIMBER DEALER**
**No.48, Punkankulam Road,**
**Jaffna.**

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்
கேற்ப தங்கப்பவுண் நகைகளை
நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவெல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
105/1, புங்கங்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 7877 760

**இராஜேஸ்வரி**
**ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953

## FLC FRENCH LANGUAGE CENTRE

# பிரெஞ்சு வகுப்புக்கள்

2006 முதல் இன்றுவரை 1261 மாணவர்கள்

| | | |
|---|---|---|
| இல. 40, பலாலி வீதி, (ஆரியகுளம்) 03.06.2017 சனி 8.00 0779 789 456 021 221 7781 | No.181, 1st Floor, பிரதான வீதி, நெல்லியடி. 29.05.2017 பி.ப. 4.00 021 320 2973 | IELTS Life Skills A1, B1 வகுப்புக்களும்..... |

(இலுப்பையடி சந்திக்கு அண்மையில் கராஜ் முன்பாக)

## இந்து பௌத்த கலாசாரப் பேரவையால் வடமாகணத்தில் நடத்தப்படும் இரண்டாம் மொழிக்கற்கை நெறிகள் ஆரம்பம்

இந்து பௌத்த கலாசாரப்பேரவையால் வடமாகாணத்தில் நடத்தப்பட்டுவரும் இரண்டாம் மொழிகளான ஆங்கிலம் மற்றும் சிங்கள மொழிகளுக்கான புதிய வகுப்புக்கள் 2017ஆம் ஆண்டு ஆனி மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. 2010 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை 8500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்று சான்றிதழ்கள பெற்றுள்ளனர்.

இந்து பௌத்த கலாசாரப் பேரவையில் அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் போஷகராகவும். வணக்கத்துக்குரிய அத்துரலிய ரத்தின தேரோ அவர்கள் தலைவராகவும். தேசமான்ய எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் அவர்கள் செயலாளராகவும் செயற்படுவதுடன் எம்.ரி.எஸ். இராமச்சந்திரன் அவர்களின் எம்.ரி.எஸ் சர்வதேச சட்ட நிறுவனத்தின் நிதி அனுசரணையில் தொடர்ந்தும் இக்கற்கை நெறி நடைபெற்று வருகின்றது.

இந்த கற்கைநெறியில் கல்வி கற்க விரும்புபவர்கள் 2017ஆம் ஆண்டு ஆனி மாதம் 4ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு கீழ்க் குறிப்பிடப்படும் கற்கை நிலையங்களில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்து விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**கற்கை நிலையங்கள் :-** சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி. இணுவில் இந்துக்-கல்லூரி. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி. கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரி. கொக்குவில் இந்துக் கல்லூரி. வட்டு மத்திய கல்லூரி. சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி.

**தொடர்புகளுக்கும் பதிவுகளுக்கும்:**

**தலைமைக் காரியாலயம் :- 011 233 9660**

**இந்து பௌத்த கலாசாரப் பேரவையின் இணைப்பாளர்**

**076 669 6879**

(AJA CS/ 4209)(11)

## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவாக



**மண்ணில்** 26 . 06 . 1948

**விண்ணில்** 26 . 05 . 2016

**அமரர் ஜேம்ஸ் செல்லையா இம்மானுவல் (சூரியராசா)**

(ஓய்வு பெற்ற மின்சாரசபை ஊழியர்)

என்றும் எங்கள் மனதில் உங்கள் அன்பு
நீங்காது இருக்கும் அப்பா.
உங்கள் அன்பை என்றும் மறவாத
உங்கள் பிரிவால் துயருறும்

**13/1, கோயில் வீதி,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்**

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தங்கபூபதி நடராசா**

பிறப்பு
09.11.1938

இறப்பு
26.05.2015

பூர்வ பட்ச நவமி
திதி: 02.06.2017

ஆண்டு இரண்டு ஆனதுவோ ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மாறாத நினைவுகளால் மனம் வெந்து மாய்கின்றோம்
அழகிய உங்கள் விரிந்த முகம் என்றும் எம் நெஞ்சங்களில்
குடியிருக்கும் அன்புத் தெய்வமே ஆண்டவன் அடியில் சாந்தி பெறுக.

**நாகலிங்கம் சுவாமிகள் வீதி,**
**சங்கானை.**
**076 624 2951**

**பிள்ளைகள்,**
**மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

### வீடு வாடகைக்குண்டு

நீராவியடி கல்லூரி வீதியில் (பிறவுண் வீதிக்கு அண்மையில்) சகலவசதியும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

**077 949 6948**

(C28399)(22.18)

### வீடு வாடகைக்குண்டு

சண்டிலிப்பாய், கல்வளை வீதியில் வீடு வாடகைக்கு (Rs.3000) உண்டு.

**077 716 8988**

### தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு மேற்பார்வையாளர்கள் உடன் தேவை.

**அன்னை நாகா பூட்சிற்றி**
**175, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**077 477 3483**

## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் திரவியம் திருநாவுக்கரசு**

தோற்றம்
09.06.1934

மறைவு
26.05.1994

அம்மா அன்பின் இருப்பிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்து வழிகாட்டிய அம்மா உங்கள் பாதத்தில் மலர்தூவி வணங்கி வெல்வில் முருகனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி!

**"மூர்த்தி வாசம்"**
**முருகமூர்த்தி வீதி, சங்கானை.** **குடும்பத்தினர்.**

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு. மாங்குளம்சந்தைக்கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப்பண மீள்கேள்வி அறிவித்தல்.

புதுக்குடியிருப்புபிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட மாங்குளம் சந்தைக் கட்டடத்தின் கடைகளுக்கான திறப்புப்பணகேள்விகள் 2017ஆனி15ம்திகதிதொடக்கம் கீழ்குறிப்பிடப்படும் மாதாந்தகுத்தகையின் அடிப்படையில வாடகைக்குவழங்குவதற்குஏதுவாககோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 2017.05.26– 2017.06.13அலுவலகநாட்களில் பிற்பகல் 12.00வரை

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:- 2017.06.13பிற்பகல் 12.30மணிவரை

கேள்விகள் திறந்துபரசீலிக்கப்படும் திகதி :- 2017.06.13பிற்பகல் 01.00மணி

கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை **செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை,புதுக்குடியிருப்பு**என்னும் முகவரிக்குஅரக்கு(சீல்)முத்திரையிட்டுதபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டுபதிவுத்தபால் மூலம் 2017.06.13 ஆம் திகதிபிற்பகல் 12.30மணிக்குமுன் கிடைக்கக்கூடியவாறுஅனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கெனபுதுக்குடியிருப்புபிரதேசசபைதலைமைஅலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளகேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்குமுன் இடப்பட வேண்டும். மறுபிரதியை **பிராந்திய உள்;ராட்சி உதவிஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு** என்றமுகவரிக்கு2017.06.13பிற்பகல் 12.30மணிக்குமுன்னர் கிடைக்க்கூடியதாகபதிவுத்தபால் மூலம்அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. கேள்விப்பத்திரங்களைபெறவிரும்புபவர்கள் வதிவிடச்சான்றிதழ் மற்றும் கிராமசேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்டதேசியஅடையாளஅட்டைப்பிரதியுடன் நேரடியாகபுதுக்குடியிருப்புபிரதேசசபையின் தலைமைஅலுவலகத்திற்குசமூகமளிக்கவேண்டும்.
2. கேள்விப்பத்திரங்கள் கீழ் குறிப்பிடப்பட்டமீளளிக்கப்படாதபடிவக்கட்டணங்கள்,மீளளிக்கக்கூடியவைப்புப்பணமும் செலுத்திமேற் குறித்தகாலத்திற்குள் பெற்றுக்கொள்ளவேண்டும்.(விபரம் இணைக்கப்பட்டுள்ளது.)
3. உள்;ராட்சிமன்றங்களினால் தவறுநராகக்கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது.எனினும் தவறுதலாகவழங்கப்பட்டிருப்பின் அதுநிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பானவைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்படமாட்டாது.
4. ஆகக்குறைந்தகேள்வித்தொகையிலும் குறைந்தகேள்விகோருபவர்களின் கேள்விநிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்விகள் திறக்கப்படும் சமயத்தில்கேள்விதாரரோஅல்லதுஅவரதுபிரதிநிதியோசமூகமளிக்கமுடியும்.
6. கேள்விநிபந்தனைகள், அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்வி கோரிக்கைகளை நிராகரிக்கவும்,எந்தவொருகேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையினது செயலாளருக்கு அதிகாரம் உண்டு.
7. வாடகைவருடாவருடம் சபையால் நிர்ணயிக்கப்படும்காலஒழுங்கில் வாடகையின் அடிப்படையில் 10% அதிகரிக்கப்படும்.
8. கடையைவாடகைக்குஎடுப்பவராலேயேநடத்தாப்படவேண்டும். பிரதிநிதிஎவரும் அவர் சார்பில் நடத்தஅனுமதிக்கப்படமாட்டார்.இருந்தும் அவரதுவாரிசுநடத்தஅனுமதிக்கப்படுவார்.(உதாரணம் :- மகன்,மகள்)
9. சபைசெயலாளரின்அனுமதியின்றிஎதுவிதபுனரமைப்புவேலைகளும் மேற்கொள்ளமுடியாது.
10. நிராகரிக்கப்பட்டகேள்விதாரரின் பிணைப்பணம்ஒப்பந்தம் பூர்த்தியானபின்னர் மீளளிக்கமுடியும்.
11. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் சபையால் வங்கப்பட்ட கால எல்லைக்குள் முழுத்தொகையையும் முழுமையாகச் செலுத்திசபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவேண்டும்.
12. பெற்றுக்கொள்ளும் கடைகளில் ஏற்படும் பாதிப்புக்களுக்குகுத்தகைக்குஎடுத்தவரேபொறுப்புடையவராவார்.
13. குத்தகைக்குபெற்றகடைக்கானமின்சாரசெலவுகுத்தகைக்குபெற்றவரினாலேயேசெலுத்தப்படவேண்டும்.
14. வாடகைப்பணம் மாதாந்தம் **இறுதிவேலைநாளுக்குமுன்னர்**தாங்களாகவேசெலுத்தப்படவேண்டும்.தவறின் 10% தண்டமும் சேர்த்துஅறவிடப்படும் என்பதுடன் வாடகைப்பணம் இரு மாதங்கள் தொடர்ந்துகட்டத்தவறின் முன்னறிவித்தலின்றிவாடகைஒப்பந்தம் தானாகவே இரத்துச் செய்யப்பட்டதாககருதப்படும்.
15. சபையின் செயலாளரின் இந்தஒப்பந்தம் தொடர்பாகஎவ்விதமுடிவையும் ஏற்கவேண்டும். இது தொடர்பாகச் சபைக்கெதிராகவோ.'. செயலாளருக்குஎதிராகவோநீதிமன்றம் மூலம் நடவடிக்கைஎடுக்கமுற்படலாகாது.
16. கேள்விசம்பந்தமாகமேலதிகவிவரங்களை/தகவல்களைபிரதேசசபையின் தலைமைஅலுவலகத்தில் அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | கடை இலக்கம். | மாதாந்த வாடகை (ரூபா) | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் (VAT,NBT நீங்களாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | G.F - 09. | 1,750.00 | 1,000.00 | 11,000.00 | 105,000.00 |
| 02 | U.F - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 03 | U:F - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 04 | U.F - 03 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 05 | U.F - 05 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 06 | S - 01 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000.00 |
| 07 | S - 02 | 2,000.00 | 1,000.00 | 13,000.00 | 120,000;00 |

**திரு.ந.ஜெயராஜா செயலாளர்,**
**பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.** 2017.05.25

# WALK IN INTERVIEW

FOR THE POST OF

## BUSINESS DEVELOPMENT MANAGER

NORTHERN PROVINCE

**ON 27TH & 28TH MAY 2017**
**FROM 10.00 A.M. TO 04.00 P.M.**
**AT 02ND FLOOR, NO: 111,**
**RACCA ROAD, JAFFNA**
**CONTACT NO: 076 6768295**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**சின்னவன்**
**சுப்பிரமணியம்**



தோற்றம்
30.10.1946

மறைவு
06.06.2016

திதி:- பிரதமை (26.05.2017)

கடந்த 06.06.2016 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வு இன்று (26.05.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்ப சகிதம் வருகைதந்து ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

12,யமுனாவீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**

# 24ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
23 . 10 . 1926

மறைவு
22 . 05 . 1993

## அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

**(விவசாய நண்பன், கைதடி கிழக்கு, கைதடி)**

குடும்பத்தின் குத்துவிளக்காய் கும்பிடும் தெய்வமாய்
எம்மை வாழவைக்கும் பாசத்தின் சிகரமே!
வருடங்கள் கடந்துபோனாலும்
எம்மனதில் உங்கள் நினைவுகள் என்றும் வாழ்ந்து
கொண்டிருக்கும்....
அன்புக் கணவராய், அருமை தந்தையாய், பாசமிகு
மாமாவாய், அரவணைக்கும் எங்கள் பேரனாய்,
அறிவுரைகூறி எமை வழிநடத்தும்
பூட்டனாய் நீங்கள் என்றும் எம் வாழ்வில் எம்முடன்....

கைதடி கிழக்கு,
கைதடி (AJA.4215) (13)

**குடும்பத்தினர்**
**மனைவி, பிள்ளைகள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்**

# MAJESTIC CINEPLEX Jaffna

A CEYLON THEATRES CINEMA

**கார்கில்ஸ் ஸ்குவெயர்**

(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

**இப்பொழுது திரையில்**




மஜெஸ்டிக் ப்ளாட்டினம்
**10.30 / 1.30 / 4.30 / 7.30 வெள்ளி/சனி 9.30 PM**



சில்வர் / ப்ரொன்ஸ்
**10.30 / 2.30 / 6.30 வெள்ளி/சனி 10.30 PM**

**விசாரணை ☎ 021- 2227712**

MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# மிருதங்க அரங்கேற்றம்



கலாபூஷணம் க.ப.சின்னராசா அவர்களின் மாணவனும்,
கலாபூஷணம் மு. சிங்கராயர் அவர்களின் பேரனும்,மறைந்த உயர்திரு
தீ. மார்சலீன் அவர்களின் பூட்டனும், புனித பத்திரிசிரியார் கல்லூரி
மாணவனும், திரு. திருமதி சி. வசீகரன் கிருபாமேரி
தம்பதியரின் புதல்வனுமாகிய

## செல்வன் வசீகரன் ஜீவிதன்

**அவர்களின் மிருதங்க அரங்கேற்றம்**

**காலம் : 27.05.2017 பிற்பகல் 3.00**
**இடம் : பட்டினசபை மண்டபம் மானிப்பாய்**
தலைவர் : அருட்பணி செ.அன்புராசா (அ.ம.தி)
பிரதம விருந்தினர்கள்: பேரருட் திரு.கலாநிதி யஸ்ரின்பேணாட் ஞானப்பிரகாசம் (யாழ். ஆயர்)
நல்லை ஆதினக் குருமுதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

சிறப்பு விருந்தினர்கள்:

அருட்பணி ஜெறோ செல்வநாயகம்
(அதிபர். புனித பத்திரிசியார் கல்லூரி)
சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ. வாமதேவன்
(ஓய்வு நிலை ஆசிரியர்)
கலா பூஷணம் ம.யோசுதாசன்
(இசைப் பொறுப்பாளர் திருமறை கலாமன்றம்)
கௌரவ விருந்தினர்: உயர்திரு. சண்முகநாதன் ஹரிஹரன்
(ஹார்ரெக்ஸ் உரிமையாளர் - கொழும்பு)

**அரங்கின் கலைஞர்கள்**

பாட்டு - கலாவித்தகர் த.றொபேட்
வயலின் - சுருதிவேந்தன் அ.ஜெயராமன்
கஞ்சிரா - கலைமாணி ந.சிவசுந்தரசர்மா
கடம் - கலாவித்தகர் நா.மாதவன்
முகர்சிங் - கலாவித்தகர் சி.செந்தூரன்
தம்புரா - இசைமாணி க.ரஜீவன்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**
**பெற்றோர்**

புதுக்குடியிருப்பு பிரதேசசபை,புதுக்குடியிருப்பு.

## மீள்கேள்வி அறிவித்தல் - 2017

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட நிலையங்களை 2017.06.15ஆம் திகதியிலிருந்து 2017.12.31 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக்கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலம் :- 2017.05.26 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 2017.06.13 நண்பகல் 12.00 மணிவரை(அலுவலக நாட்களில் மட்டும்)
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி:- 2017.06.13 நண்பகல் 12.30 மணிவரை
கேள்வி திறக்கப்படும் திகதி :- 2017.06.13 பி.ப 01.00 மணி

| இல | குத்தகை வகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புபப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| ஒட்டுசுட்டான் உப அலுவலகம். | | | | |
| 01. | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழியிறைச்சிக்கடை | 1,000.00 | 10,000.00 | 100,000.00 |
| ஒலுமடு உப அலுவலகம். | | | | |
| 01. | மாங்குளம் பொதுச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,000.00 | 5,000.00 | 37,500.00 |

**நிபந்தனைகள்**

- கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதிகளை செயலாளர் பிரதேசசபை புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு 2017.06.13 ஆம் திகதி நண்பகல் 12.30 மணிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்ககப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும் இரண்டாவது பிரதியை பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர் மூல்லைத்தீவு என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
- எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித்தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்பட மாட்டாது. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் மூன்றிலொரு பகுதியை 2017.06.15 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரத்தினை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- கேள்விப்பத்திரத்தனை பெற விரும்புவோர் விண்ணப்பத்துடன் தேசிய அடையாளஅட்டையின் பிரதியுடன் தாம் வதியும் வதிவிடத்தின் வதிவிட சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.
- வியாபாரம் நடைபெறும் போது பொதுமக்கள் இருபக்கமும் நிறையினை அவதானிக்கக்கூடிய தராசினை பயன்ாடுத்தல் வேண்டும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு எடுப்பவர்கள் கடையினது கழிவுகளை தாங்களே அகற்ற வேண்டும். அத்துடன் புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் கொல்களத்தினை பயன்படுத்துதல் வேண்டும்.
- இறைச்சி வகைகளுக்கான கட்டுப்பாட்டு விலையானது சபையினால் தீர்மானிக்கப்படும்.
- இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு பெறும் குத்தகைக்காரர்கள் மாதமொன்றிற்கு ரூபா 500.00 இனை கடை வாடகையாக சபைக்கு செலுத்துதல் வேண்டும்.
- ஏற்கனவே ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டு தவறுநர் பட்டியலில் சேர்த்துகொள்ளப்பட்டவர்கள் நேரடியாகவோ மறைமுகமாகவோ இதில் பங்குபற்ற இயலாது.
- சந்தைகள் நடைபெறும் இடங்கள் தேவை ஏற்படின் மாற்றப்படும்.
- மேலதிக விவரங்களை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு ந. ஜெயராஜா**
**செயலாளர்**
**பிரதேசசபை புதுக்குடியிருப்பு. 2017.05.25**

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 654
சீட்டிழுப்பு திகதி 25.05.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
17 55 59 60 C
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46, 390, 716/=

## வருடாந்த பொதுக் கூட்டம்

**வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம்**

**காலம் : 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை**
**நேரம் : காலை 9.00 மணி**
**இடம் : சிவன்கோயில் மண்டபம் பருத்தித்துறை**

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

செயலாளர் - வடமராட்சி மணல் ஏற்றும் வாகன உரிமையாளர் சங்கம்.

## மோட்சதீப அழைப்பு

கடந்த 17.05.2017 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

**அமரர் விஜேந்திரன் விக்கினேஸ்வரி**
**(செல்வம்)**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (27.05.2017) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**154 ஆம் கட்டை,**
**இந்துபுரம், திருமுறிகண்டி.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 06 . 01 . 1945

**மறைவு** 20 . 05 . 2017

### திருமதி பூபதி செல்வநாயகம்

வடமராட்சி கிழக்கு, குடத்தனை கிழக்கைப் பிறப்பிடமாகவும், மொறட்டுவை சொய்சாபுரம், நெல்லியடி முருகமூர்த்தி ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூபதி செல்வநாயகம் 20.05.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பிள்ளை - பூரணம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், உதயராணி (ஜேர்மனி), திருக்குமார் (கனடா), காலஞ்சென்றவர்களான மதியழகன், பாலகிருஷ்ணன் மற்றும் ஜமுனாராணி (நெதர்லாண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம் (ஜேர்மனி), பிரபா (கனடா), தயாளினி (ஆஸ்திரேலியா), ராஜ்குமார் (நெதர்லாண்ட்), மிதுலா (U.K) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், பிரதீப், பிரசன்னா, அபிஷன், அக்சனா, ஆர்த்திகா, ஹரிசன், மிதுஜா, ஆர்த்திக், விதுஷன், கயந், ஜயந், அபிசேக், பிரசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஆரியாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.05.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் இல.78, நெல்லியடி, முருகமூர்த்தி ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முருகமூர்த்தி ஒழுங்கை,**
**நெல்லியடி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

(ANE/0178)(11)

**மனோகரி - 077 556 2860, பழனி - 077 958 8973**

உத்தியோகபூர்வ முடிவுகள்
சௌவர்தன வாசனாவ
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 42
சீட்டிழுப்பு திகதி 25.05.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
13 15 30 32 04
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 11, 667, 226/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 2, 121, 917/=
அடுத்த ஜக்பொட் 1, 668, 648/=
27.05.2017 திகதி சனிக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**முருகேசு கந்தசாமி** (ராஜன் எலகரிக்கல்ஸ் உரிமையாளர்)



**தோற்றம்** 20 . 05 . 1950

**மறைவு** 19 . 05 . 2015

ஈருடல் ஒருயிராய் வாழ்ந்த -என்
அன்புத்துணைவரே
கண்ணை இமை காப்பதுபோல் எம்மைக்
காத்த அன்புத்தந்தையே
ஆண்டுகள் இரண்டு ஆனதுவே
துயர் ஆறவில்லை
நீங்கள் இன்றி நாம் இன்று
நிர்க்கதியாய் தவிக்கின்றோம்.
வாராயோ இன்னொருகால் எம்மோடு வாழ்வதற்கு

**4 ம் குறுக்குத்தெரு சந்தி,**
**தும்பளை வீதி, பருத்தித்துறை**

**குடும்பத்தினர்.**

## யாழ்ப்பாணம் மாநகரசபை

### இறைச்சிக்கடைகள், சிற்றுண்டிச்சாலைக்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2017

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி கடைகள் 15.06.2017 திகதி முதல் 31.12.2017 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரங்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| கேள்விப்படிவக்கட்டணம் | - | ரூபா 500.00 (**VAT,NBT** நீங்கலாக) |
| கேள்விப்படிவம் விநியோகித்தல் | - | 29.05.2017 – 06.06.2017 பிற்பகல் 3.00 மணிவரை |
| கேள்விப்படிவம் ஏற்றுக் கொள்ளல் | - | 07.06.2017 – மு.ப 9.30 மணிவரை |
| கேள்வி திறத்தல் | - | 07.06.2017 மு.ப 10.00 மணிக்கு |

நிபந்தனைகள்

1.யாழ். மாநகர சபையினால்,18.10.2016, 19.10.2016 ஆகிய திகதிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தல் நிபந்தனைகளுக்கு அமைவாகவும் .

2. சித்தி பெற்றவர்கள் கேள்வித் தொகையின் இறுதி மூன்று மாத குத்தகை, வாடகையையும் சிற்றுண்டிச்சாலைக்கான குத்தகையை பெறுபவர்கள் மின்சாரக்கட்டணத்திற்கான பாதுகாப்பு வைப்புக்கட்டணமாக ரூபா 20,000.00 ஐயும் உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

### மீள்கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ. இல | விவரம் | கடை இல | மீளளிக்கக்கூடிய கேள்வி பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 94,200.00 |
| 2. | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 108,000.00 |
| 3. | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 42,250.00 |
| 4. | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 457,150.00 |
| 5. | புங்கன்குளம் ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 47,600.00 |
| 6. | புங்கன்குளம் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 162,100.00 |
| 7. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 157,000.00 |
| 8. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 185,250.00 |
| 9. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 5,000.00 | 165,000.00 |
| 10. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 116,000.00 |
| 11. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.07 | 5,000.00 | 116,000.00 |
| 12. | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 114,500.00 |
| 13. | யாழ். பொது நூலகம் சிற்றூண்டிச்சாலை (01.07.2017 – 31. 12. 2017) | | 5,000.00 | 120,000.00 |

**மாநகர சபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**26.05.2017**

**பொ.வாகீசன்**
**ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம் மாநகர சபை.**

# மந்துவில் வாள்வெட்டு சம்பவம்; 6 சந்தேகநபர்களுக்கு மறியல்

தென்மராட்சி மே.26
மந்துவிலில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்துடன் தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஆறு பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.
மந்துவில் மேற்குப் பகுதியில் அண்மையில் 20 வயது இளைஞர் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. சம்பவம் நடந்து சில தினங்களின் பின்னர் மீசாலை புத்தூர்ச் சந்திப் பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய முச்சக்கர வண்டியை பொலிஸார் சோதனையிட்ட போது முச்சக்கர வண்டியினுள் ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. முச்சக்கர வண்டியில் பயணித்த 5 பேரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். ஐவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கூறப்படும் இளைஞன் ஒருவர் கடந்த வாரம் மீசாலைப் பகுதியில் நடமாடியபோது பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் அந்த இளைஞரை நீதிமன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ந-9)

# தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தை இடமாற்ற வேண்டாம் என போராட்டம்




வவுனியா, மே 26
தொல்லியல் பணிப்பாளர் நாயகத்தை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று கோரி வவுனியா தொல்பொருள் கலைச்சாலை ஊழியர்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
தொல்லியல் பணிப்பாளர் நாயகம் திசநாயக்காவுக்கு இடம்மாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்று திடீரென அரசால் எழுத்து மூலமான அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்றும், இடமாற்றம் எதுவித காரணங்களும் இன்றி தீடிரென ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது நியாமற்றது. இடமாற்றத்தை அரசு இரத்து செய்ய வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.
பாதாகைகளை ஏந்தியவாறு சுமார் அரைமணி நேரம் போராட்டம் நடத்தப்பட்டது. அதன்பின்னர் அலுவலகத்தின் முன்பாகப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. (ந-21)

# மீனவரின் கருத்தை அறிந்தே இந்தியப் படகுகள் விடுவிக்கப்படும்

## அமைச்சர் மகிந்த அமரவீர கூறுகின்றார்



கொழும்பு, மே 26
இந்திய மீனவர் படகுகளை விடு விப்பதற்கு முன்னர் அது தொடர்பில் எமது மீனவர்கள் மற்றும் அமைப்புக்களின் கருத்துக்கள் பெறப்படும் என்று கடற்றொழில் மற்றும் நீர்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
புதிய அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய அமைச்சரவை கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
இன, மத வன்முறைகள் மற்றும் அதற்கு துணை போகும் கடும்போக்காளர்களைக் கட்டுப்படுத்தி அமைதியை நிலை நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதற்கான முழுமையான அதிகாரம் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.
இதற்கான தீர்மானம் புதிய அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் பொலிஸார் மேற்கொள்ளும் நீதியான செயற்பாடுகளில் எந்தவித தலையீடும் தடைகளும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்றார். (ந -10)

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட

# அத்துமீறிய விவசாயத்தை உடன் அழிக்க நடவடிக்கை

கிளிநொச்சி, மே 26
கிளிநொச்சி மாவட்டத்தில் அத்துமீறி மேற்கொள்ளப்பட்டுள்ள விவசாயச் செய்கைகளை உடன் அழிக்க வேண்டும் என்று மாவட்ட செயலர் கண்டிப்பான உத்தரவு பிறப்பித்துள்ளார் என்று விவசாய அமைப்புக்கள் தெரிவித்தன.
கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டத்துக்கு அமைய இந்த ஆண்டு 980 ஏக்கர் நிலப்பரப்பிலேயே விவசாயம் செய்ய முடியும் என்று கண்டறியப்பட்டது. 900 ஏக்கரில் நெல்லும், 80 ஏக்கரில் சிறு தானியமும் பயிரிடுவதற்கு அனுமதிக்கப்பட்டது. எனினும் இந்த அளவை விட மேலதிகமாக 280 ஏக்கர் நிலத்தில் பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
அத்துமீறி பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட 280 ஏக்கர் செய்கையாளர்களை இனங்கண்டு அவர்களைத் தண்டிக்கும் வகையில் 5 வருடத்துக்கு பங்கு நீரையும், உர மானியத்தையும் நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலர் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் அத்துமீறிய பயிர்ச் செய்கைகளை உடனடியாக அழிக்குமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.
"இரணைமடுக் குளத்தின் நீர் மட்டத்துக்கு அமைய அனுமதிக்கப்பட்டதற்கு மேலதிகமான விதைக்கப்படுவதால் ஒட்டுமொத்த வயல்களுக்கு இறுதிக் கட்டமான 7ஆவது நீர்ப்பாச்சலுக்கான நீர் பற்றாக்குறை ஏற்படும். 7ஆவது நீர்ப்பாய்ச்சல் போதுமானதாக இல்லா விட்டால் நெல் சரியான விளைச்சல் இல்லாது சப்பியாகக் காணப்படும். இதனால் ஒட்டுமொத்த விவசாயிகளும் பாதிக்கப்படுவர். அதனால் மேலதிக விதைப்புத் தொடர்பில் கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்ப டுகின்றது.
அத்துமீறி மேற்கொள்ளப்பட்ட 280 ஏக்கர் செய்கையில் 47 ஏக்கரில் யார் நெற்செய்கை மேற்கொண்டனர் என்பதை வெளிப்படுத்த மறுக்கின்றனர். அந்த 47 ஏக்கருக்கும் புல்லு மருந்து விசிறி செய்கையை அழிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. எஞ்சிய 233 ஏக்கர் உரிமையாளர்களுக்கு எதிரான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன. என்று கிளிநொச்சி மாவட்ட செயலர் சு. அருமைநாயகம் தெரிவித்தார். (ந-101)



# ஏற்றுமதிப் பொருளாதாரமாக நாட்டின் பொருளாதாரம் மாறும்


## தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, மே 26
எதிர்வரும் சில வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் முழுமையாக ஏற்றுமதி பொருளாதாரமாக மாற்றியமைக்கப்படும் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
கடவத்தை ரன்முத்துகல வத்தவவில் புதிய தொழிற்சாலை திறப்பு விழா நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்தாவது
உலகில் செல்வந்த வர்த்தக சந்தை ஐரோப்பாவாகும். ஐரோப்பிய சந்தையில் பிரவேசிப்பதன் மூலம் இலங்கைக்கு போட்டிமிகுந்த வர்த்தக சந்தையை கட்டியெழுப்ப முடியும். இதற்கமைவாக உற்பத்தியை அதிகரித்து வருமானத்தை பெருக்கி போட்டி மிகுந்த சந்தையில் ஏற்றுமதியாளர்கள் பிரவேசிக்க வேண்டும்.
உலகிலேயே பெரிய வர்த்தக சந்தை சீனாவிலேயே உண்டு. அவர்கள் கைத்தொழில்துறையை வர்த்தக சந்தைக்கு மாத்திரம் வரையறுக்கவில்லை. அவர்கள் ஏற்றுமதி தொழில்துறையின் மூலம் வர்த்தகச் சந்தையை கைப்பற்றினர். ஜப்பான், கொரியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் இந்த நடைமுறையை பின்பற்றின. உலக வர்த்தக சந்தையை கைப்பற்றியதன் பின்னர் சிறந்த தொழில் வாய்ப்பு கூடுதலான வருமானத்தை பெற்றுக்கொள்வதற்குரிய வலுவும் ஏற்படுகின்றது-என்றார். (ந-10)

மன்னார் பொது மயானத்தின் பின்பகுதியில்

# கழிவுகள் எரியூட்டப்படுவதால் பிரதேச மக்களுக்குப் பாதிப்பு

மன்னார், மே 26
மன்னார் நகர சபையால் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள மன்னார் பொது மயானத்தின் பின்பகுதியில் எரியூட்டப்படுகின்றன. அதனால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
நேற்று கழிவுப் பொருள்கள் எரியூட்டப்பட்டதால் அந்தப் பகுதி புகைமண்டலாகக் காணப்பட்டது என்றும், அந்தப் பகுதியில் உள்ள 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டது.
நேற்றுக்காலை அந்தப் பகுதியில் திரண்ட மக்கள் கழிவுகளை எரியூட்டுவதற்குக் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். அந்த இடத்துக்கு மன்னார் பொலிஸாரும், நகர சபை அதிகாரிகளும் வந்து மக்களுடன் பேச்சு நடத்தினர். பௌசர் மூலம் நீர் கொண்டுவரப்பட்டு தீயை அணைக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.
"இந்தப் பகுதியில் பல வருடங்களாகக் கழிவுகள் எரியூட்டப்படுகின்றன. அதனால் ஏற்படும் இடர்கள் தொடர்பாக நகர சபை அதிகாரிகளினதும், பல தரப்புகளினதும் கவனத்துக் கொண்டு சென்றோம். எனினும் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. கழிவுகள் எரியூட்டப்படுவதால் குழந்தைகள், வயோதிபர்கள், கர்ப்பிணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர்."



வைத்தியசாலைக் கழிவுகளும் இங்கு கொட்டப்பட்டு எரியூட்டப்படுகின்றன. இறந்த விலங்கு எச்சங்களும் கொட்டப்படுகின்றன. இவற்றால் இந்தப் பகுதியில் உள்ள மக்கள் சுவாச, தோல் நோய்களுக்கு உள்ளாகின்றனர்." என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.
"மன்னார் நகர சபைப் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் பல ஆண்டுகளாக மன்னார் நகர சபைக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் எரியூட்டப்படுகின்றது. குப்பைகளை எரியூட்டுவதால் அந்தப் பகுதி மக்கள் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்து அங்கு கழிவுகளை எரியூட்டுவது நிறுத்தப்பட்டது. கழிவுகள் கொட்டப்பட்டன.
அங்கு கொட்டப்பட்டிருந்த கழிவுகள் நேற்றுத் தீவைக்கப்பட்டுள்ளது. அதனால் அந்தப் பகுதி மக்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர். இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.
மாற்று இடம் வழங்கப்படும் வரை மன்னாரில் சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் அந்த இடத்திலேயே கொட்டப்படும். ஆனால் எரியூட்டப்படாது." என்று மன்னார் நகர சபையின் செயலாளர் பிரிட்டோ லெம்பேட் தெரிவித்தார். (ந-56)

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | 7 | | | | | 9 | |
| | 9 | | | 4 | | 7 | | |
| | 8 | 5 | | | | 4 | 6 | |
| | | 1 | 2 | | 4 | | | 9 |
| | 2 | | 5 | 9 | 6 | | | |
| 9 | | | 8 | | | 2 | | |
| | 6 | 2 | | | | 1 | 4 | |
| | | 9 | | 2 | | | | |
| | | | | | | 9 | 2 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியவிவி சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறு வனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல்இது உலக அளவில் பிரபல்யமானது.

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 3 | 8 | 2 | 4 | 7 | 9 | 1 |
| 2 | 8 | 9 | 5 | 7 | 1 | 4 | 6 | 3 |
| 7 | 4 | 1 | 6 | 9 | 3 | 2 | 8 | 5 |
| 8 | 1 | 5 | 2 | 3 | 9 | 6 | 4 | 7 |
| 4 | 3 | 2 | 7 | 5 | 6 | 8 | 1 | 9 |
| 6 | 9 | 7 | 4 | 1 | 8 | 5 | 3 | 2 |
| 1 | 5 | 8 | 3 | 4 | 2 | 9 | 7 | 6 |
| 9 | 7 | 6 | 1 | 8 | 5 | 3 | 2 | 4 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 7 | 1 | 5 | 8 |



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர். பெண்கள் விருந்து, விழாவில் பங்கேற்று மகிழ்வர்.

**இடபம்:** நண்பர்களால் உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் படிப்படியாக உயரும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். மனைவி விரும்பிய பொருளை வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் தடைகள் குறுக்கிடலாம். லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர்.

**கடகம்:** கவனக்குறைவால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள், சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர். ஆடம்பர எண்ணத்துடன் செயல்படுவர்.

**சிங்கம்:** நேர்மை மிக்கவராகச் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்தத் திட்டமிடுவீர்கள்.

**கன்னி:** உற்சாக மனப்பான்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**துலாம்:** சுயநல நோக்குடன் சிலர் உதவ முன்வருவர். தொழில், வியாபாரத்தில் விடாமுயற்சி தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு, உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** நண்பரால் சிரமத்துக்கு ஆளாகலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்களுக்கு உடல்நலனில் அக்கறை தேவை.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணி யாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பணக்கடனில் ஒரு பகுதியைச் செலுத்துவீர்கள்.

**மகரம்:** குடும்பச் சிரமத்தைப் பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர். பெண்களுக்கு உறவினரால் உதவி உண்டு.

**கும்பம்:** திட்டமிட்ட பணி ஒன்று எளிதாக நிறைவேறும். மனதில் புத்துணர்வு மேலோங்கும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள். லாபம் அதிகரிக்கும்.


**மீனம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். ஆடம்பர வகையில் செலவு செய்வர்.

# பிரியங்கா சந்தித்த அவமானங்கள்

பிரபல தொலைக்காட்சியில் முன்னணி தொகுப்பாளினியாக இருப்பவர் பிரியங்கா. அண்மைக்காலமாகப் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கி வரும் பிரியங்கா, தொலைக்காட்சியில் சிறந்த தொகுப்பாளினி விருதைக்கூட வாங்கியுள்ளார். ஆனால் அவரை ஒரு தொகுப்பாளினி ஒலிவாங்கியைத் தொடக்கூடாது என்று கூறினாராம். பிரியங்கா கல்லூரியில் படித்தபோது குடும்ப கஷ்டத்தின் காரணமாக ஒரு தொலைக்காட்சியில் அழகுகுறிப்பு நிகழ்ச்சி செய்தாராம். பின்னர் ஐ.பி.எல். நடந்தபோது மைதானத்தில் பந்து எடுத்துக்கொடுக்கும் வேலையைச் செய்தாராம். அப்போது சரியாகப் பேசாமல் சொதப்பிய தொகுப்பாளினியிடம், நான் இதைச் செய்யலாமா எனக் கேட்டபோது நீ மைக்கைத் தொடக்கூடாது என அவமானப்படுத்தினாராம். அதன் பின்னர் அந்த வேலையை நிறுத்திவிட்டு சின்ன மேடைகளில் தொடங்கி, தற்போது பிரபல தொலைக்காட்சியில் பல நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குகிறாராம். இதை இவர் ஒரு பேட்டியில் கூறியுள்ளார்.



HBD koki @Saranya
விருப்பங்கள் எப்போதும்
மகிழ்ச்சியை மட்டுமே தரும்
வெறுப்புகள் எப்போதும்
துன்பத்தை மட்டுமே தரும்










கண்ணே! நான் உன்னை என் மனச்
சிறையில் வைத்திருந்தேன்,
உன் அப்பா என்னை மத்திய
சிறையில் வைத்து விட்டார்....!

WhatsApp

என் காதலை அவளிடம்
சொன்னேன்.
அவள் சிரித்துக்கொண்டே ஒரே
வார்த்தை சொன்னாள்...
“நீ ஆயிரத்தில் ஒருவன்!”




# மூன்றாவது கண்

ஒரு பாட்டில் ஏற்பட்ட பொருட் பிழைக்காக இறைவனாகிய சிவபெருமானிடம் நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே என பாண்டியன் அவையில் நக்கீரர் என்ற பெரும் புலவர் வாதம் செய்ததாக சங்க கால பாடலொன்று கூறுவதாக படித்திருக்கிறோம். அல்லது திருவிளையாடல் என்ற சினிமாப் படத்தில் இந்தக் காட்சி யதார்த்தமாக சித்திரிக்கப் பட்டதைப் பார்த்தும் இருப்போம். ஆனால் இந்த மூன்றாவது நெற்றிக் கண் உண்மையில் உண்டா என்றால் அது இருக்கிறது என்றே ஆய்வாளர் கூறுகின்றனர். மூன்றாவது கண்ணை ஞானக்கண் என்று கருதுவாரும் உள்ளனர்.

ஐம்புலன்களில் தலையாயது கண்ணே. கண்களின் முதிர்ச்சியையும், பார்வைப் புலனின் வளர்ச்சியையும் பொறுத்து உயிரினங்களுக்கு கண்களின் தேவையும் எண்ணிக்கையில் குறைந்துள்ளது. நூறு கண்களையுடைய உயிரினங்களில் இருந்து, கண்ணே இல்லாத உயிரினம் வரை உலகில் காணப்படுகின்றன. மொஸ்கோவில் வாழும் ஒருவகை மீன் இனங்களுக்கு கண்களே இல்லை. நில நீர் வாழ்வன, மீன்கள். ஊர்வன, பறப்பன, பாலூட்டிகள் போன்ற உயிரினங்களுக்கு மூன்று கண்கள் உள்ளன என்பது ஆச்சரியமாக இருக்கலாம். மூன்றாவது கண் எமக்கு புலப்படாததற்குக் காரணம் அந்தக் கண் மூளையின் உள்ளே அமைந்திருப்பதாகும். ஒரு பட்டானிக் கடலையின் அளவில் ஒரு கூம்பு வடிவ நரை கலந்த சிவப்பான உறுப்பு நடு மூளையின் பின்புறத்தில் அமைந்துள்ளது. இதன் எடை 0.1 கிராமிலிருந்து 0.2கிராம் வரை இருக்கும். இதன் பெயர் பீனியல் உடல் என்பதாகும். இதைத்தான் கண் என்கின்றனர். இது கண்போன்ற அமைப்பைக் கொண்டுள்ளது என்றும் ஒரு காலத்தில் இது புற உலகோடு தொடர்பு கொள்ளும் வகையில் மண்டை ஓட்டில் தூவாரம் ஒன்றுடன் இருந்திருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர். பரிணாம வளர்ச்சியில் மனிதனின் இரு கண்களும் முழுமையான வளர்ச்சி பெற்று விட்டதால் மூன்றாம் கண்ணின் தேவை குறைந்து அது உள்ளுக்குள் தள்ளப்பட்டு விட்டதாகவும் சிலர் வாதிடுகின்றனர்.

நெற்றிக் கண் பற்றிய ஆய்வுகள் உலகின் பல இடங்களிலும் தொடர்ந்து நடந்த வண்ணம் உள்ளன.

# சாமர்த்தியம்



பேருந்து நிலையத்தில் பழ வியாபாரம் செய்யும் முதியவர் ஒருவர் பேருந்து ஒன்றில் பழக் கூடையுடன் ஏறினார். "ஐந்து பழங்கள் பத்து ரூபாய் " என்று கூவி பழங்களை விற்க முயன்றார். எவரும் பழம் வாங்க முன்வரவில்லை. பழங்களைச் சுமக்க முடியாமல் சுமந்த படி முதியவர் கீழே இறங்கி விட்டார். உடனே பழக் கூடை ஒன்றுடன் இளைஞன் ஒருவன் அதே பேருந்தில் ஏறினான். "ஆறு பழங்கள் பத்து ரூபாய்" என்று கூவினான். அவனுக்கு நல்ல விற்பனை நடந்தது.

மற்றொரு பேருந்தில் ஏறிய முதியவர் அங்கும். "ஐந்து பழங்கள் பத்து ரூபாய்" என்று கூறி விற்க முயன்றார். அங்கும் பயன் இல்லாமல் போகவே கீழே இறங்கி விட்டார். அடுத்து அந்த பேரூந்தில் ஏறிய அதே இளைஞன் நிறைய பழங்களை விற்பனை செய்தான்.

இந்தக் காட்சிகளை அந்த பேருந்து நிலையத்தில் சில மணி நேரம் தரித்து நின்ற மிகப் பெரிய தொழில் நிறுவனம் ஒன்றின் விற்பனை ஆலோசகரான ஒருவர் கவனித்துக் கொண்டிருந்தார். முதியவரில் அவருக்கு ஒரு அனுதாபம் ஏற்பட்டது. உடனே அந்த முதியவரைத் தன்னிடத்தில் அழைத்து ஐந்து பழங்களைப் பத்து ரூபாய் கொடுத்து வாங்கியதுடன். "ஐயா பெரியவரே! அந்த இளைஞனின் சாமர்த்தியம் உங்களிடம் இல்லையே! அவனுக்குப் போட்டியாக நீங்களும் ஆறு பழம் பத்து ரூபாய்க்கு விற்றால் தானே உங்களுக்கும் விற்பனை நடக்கும். அதிக கொள் முதல் மூலம் குறைந்த விலைக்கு பழங்களை வாங்கி, லாபத்தைக் குறைத்து அதிக பொருள்களை விற்பனை செய்யப் பழகுங்கள்'' என்று தனது ஆலோசனைகளை அள்ளி விட்டார். முதியவரோ சிரித்தபடி "சும்மா போ தம்பி. அவன் என் மகன்தான். இந்தப் பழங்களும் அவனுடையவைதான். ஆறு பழம் பத்து ரூபாய்"என்று விற்றால் உடனே வாங்குவதற்கு நமது சனங்களுக்கு விருப்பம் வராது. அதனால் தான் ஐந்து பழம் 10 ரூபா என்று நான் முதலில் கூவிக் கொண்டு போனேன். என் பின்னால் அவன் "ஆறு பழம் 10 ரூபாய் என்று கூறியதும்" அடடே இவனிடத்தில் லாபமாய் இருக்கிறதே என்று மக்கள் உடனேயே தாமதிக்காமல் பழங்களை வாங்குவார்கள். அவன்தான் தம்பி உண்மையான வியாபாரி. எங்களுடைய மக்களின் மனதை மாற்றவே அவன் என்னை முன்னால் அனுப்பி தான் பின்னால் வருகிறான்" என்றார் பெரியவர். ஆலோசனை கூறிய விற்பனை ஆலோசகரோ வாயடைத்துப் போய் நின்றார்.

**புத்திமான் பலவான்**

## மரபுச் சொற்களும் அவற்றின் விளக்கங்களும்

| | | |
|---|---|---|
| 1. அறக்கப் பறக்க | - | மிக விரைவாக |
| 2. முகம் மலர்தல் | - | மகிழ்ச்சியடைதல் |
| 3. இலவு காத்த கிளி | - | காத்திருந்து ஏமாறுதல் |
| 4. தாளம் போடல் | - | வறுமையால் வாடல் |
| 5. நுனிப்புல் மேய்தல் | - | மேலெழுந்த வாரியாகப் படித்தல் |
| 6. வாட்ட சாட்டம் | - | சிறப்பான தோற்றப் பொலிவு |
| 7. கண்ணும் கருத்துமாய் | - | முழுமையான கவனத்துடன் |
| 8. பொடி வைத்துப் பேசுதல் | - | தந்திரமாகப் பேசுதல் |
| 9. ஏட்டிக்குப் போட்டி | - | விதண்டாவாதம் புரிதல் |
| 10. ஏட்டுச் சுரைக்காய் | - | அனுபவமற்ற கல்வியறிவு |
| 11. கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| 12. நட்டாற்றில் விடல் | - | ஆபத்து வேளையில் கைவிடல் |
| 13. குரங்குப் பிடி | - | பிடிவாதமாய் இருத்தல் |
| 14. பூசி மெழுகுதல் | - | குற்றத்தை மறைக்கப்பார்த்தல் |
| 15. ஓட்டை வாயன் | - | இகசியம் பேண முடியாதவன் |
| 16. முன்னுக்கு வருதல் | - | வாழ்க்கையில் முன்னேறுதல் |
| 17. இரண்டும் கெட்டான் | - | நன்மை தீமை அறியாதவன் |
| 18. முகம் கொடுத்தல் | - | எதிர் கொள்ளல் |
| 19. உச்சி குளிர்தல் | - | மிக்க மகிழ்ச்சி |
| 20. கைகழுவுதல் | - | பொறுப்பை நீக்கிக் கொள்ளல் |




## மற்றவரிடத்தில் நன் மதிப்பைப் பெற

1. தேவையான இடத்தில் தேவையான விடயங்களை மட்டும் பேசுவோம்.
2. எந்த விடயத்திலும் பொறுமை கடைப் பிடிப்போம்.
3. பெரியவர்களிடத்தில் மரியாதையுள்ளவராக இருப்போம்.
4. எல்லாம் எமக்குத் தெரியும் என்று அலட்டிக் கொள்ளாது சமயம் வரும்போது அறிவு பூர்வமான திறமையை வெளிக் காட்டுவோம்.
5. எங்கள் கடமைகள் பொறுப்புக்களை நல்ல முறையில் நிறைவேற்றுவதில் ஆர்வமுடையவராக இருப்போம்.
6. கூடியவரை மற்றவர்களிடம் கோபப்படுவதைக் குறைப்போம்.
7. அடுத்தவரின் தனிப்பட்ட விடயங்களில் அவசியமின்றி தலையிடாதிருப்போம்.
8. பிறர் பற்றிக் குறை கூறுவதைத் தவிர்ப்போம்.
9. அடுத்தவரைப் பழிவாங்கும் எண்ணங்களை மனதிலிருந்து அகற்றுவோம்.
10. எமக்குப் பொருத்தமான நிறங்களிலும் செல்லும் இடத்துக்குப் பொருத்தமான வகையிலும் அடக்கமான ஆடைகளை அணிவோம்.
11. சக நண்பர்களின் முன்னேற்றத்துக்கு இயன்றவரை உறுதுணையாக இருப்போம்.
12. நாம் அறியும் நல்ல விடயங்களைத் தேவையேற்படின் மற்றவர்களுடன் பகிர்த்து கொள்வோம்.

# மனிதனின் அழிவுக்குப் பின்னும் வாழும் கரப்பான் பூச்சி

அணுக்குண்டு ஒன்று வெடித்து பெரும் உயிர் அழிவு ஏற்பட்ட பின் சுடுகாடாக மாறியிருக்கும் பிராந்தியத்தைப் பார்க்கக் கூடிய ஒரு உயிரினம் உண்டென்றால் அது வீட்டில் வாழும் கரப்பான் பூச்சிதான். இந்தப் பூச்சி மனிதனை விட பல ஆயிரம் மடங்கு கதிர் வீச்சைத் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் படைத்தது. மனிதனின் அழிவின் பின்னரும் வாழப் போகும் இவை, தோன்றியது மனித இனம் தோன்றுவதற்கு முன்னரே ஆகும். அதாவது 350 மில்லியன் வருடங்களுக்கு முன்பே இவை தோன்றின. உலகின் துருவப் பகுதி தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் இவற்றின் தாயகம் ஜேர்மனி என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். தற்போது உலகில் 3,490 கரப்பான் பூச்சி இனங்கள் வாழ்வதாக கணக்கிடப்பட்டுள்ளன. கரப்பான் பூச்சி தலை, நெஞ்சு, வயிறு எனப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கு 3 சோடி கால்களும் ஒரு சோடி உணர்கொம்புகளும் உண்டு. இவற்றுக்கு முதுகெலும்பு கிடையாது. இரண்டு அல்லது ஒரு சோடி சிறகுகள் காணப்பட்டாலும் சிலவற்றுக்கு இறகுகள் கிடையாது. இவற்றின் இரத்தம் வெள்ளை நிறமுடையது. தலை துண்டிக்கப்பட்டாலும் இவற்றால் சுவாசிக்க முடியும். சில கரப்பான்கள் வளி இல்லாமலும் 45 நிமிடங்கள் வாழும். உலகின் மிகப் பெரிய கரப்பான் பூச்சி இனம் ஆஸ்திரேலியாவில் காணப்படும். 9 சென்ரிமீற்றர் வரை வளரும் இதன் நிறை 30 கிராமை விட அதிகமாக இருக்கும். இது நிலத்தை 1மீற்றர் ஆழத்துக்குத் தோண்டி வசிப்பதால் இதற்கு Giant barrowing cockroach எனப் பெயர் வந்தது. இதன் உணர் கொம்புகள் சூழலை உணர உதவுகின்றன. இரவின் இருட்டில் உணவு தேடும் இவை, எந்தப் பாகுபாடுமின்றி எல்லா உணவுகளையும் வெட்டியும் அரைத்தும் உண்ணுகின்றன. இவற்றுக்கு சவர்க்காரம் காகிதம் என்பவையும் உணவாகின்றன. வீடுகளில் அதிகளவில் கரப்பான் பூச்சிகள், எலிகள் இருந்தால் அவற்றை உடனடியாக அழிப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இவற்றின் மூலம் குழந்தைகளுக்கு ஆஸ்துமா, அலர்ஜி (ஒவ்வாமை) நோய்கள் ஏற்படுகின்றன.



## ஞானசார தேரர்...

நல்லிணக்கத்தைக் குழப்பும் வகையில் செயற்பட்டமை போன்ற குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், ஞானசார தேரரைக் கைது செய்வதற்குப் பொலிஸ் குழுக்கள் பல நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய, ஞானசார தேரர் நாட்டை விட்டுத் தப்பிச் செல்ல முடியாதவாறு, கொழும்பு நீதிவான் மன்றத்தின் மூலம் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஞானசார தேரருக்கு எதிராகப் பல முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், அழைப்பாணை விடுக்கப்பட்ட போதிலும் அவர் மன்றில் முன்னிலையாகவில்லை.

இந்த நிலையிலேயே தலைமறைவாக உள்ள அவரைக் கைது செய்வதற்குப் பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன - என்றார்.

(த-5)

## குளத்தில்...

பர்களுடன் இணைந்து குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிப் பரிதாபகரமாக உயிரிழந்தார் .

கனகாம்பிகைக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் விஜிதன் (வயது-22) என்னும் இளைஞரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

குறித்த இளைஞர் நேற்று நண்பர்களுடன் குளத்தில் குளித்துக்கொண்டிருந்தவேளை சேற்றில் அகப்பட்டு மூழ்கியுள்ளார். இளைஞர் மூழ்கியதையடுத்து அவரது நண்பர்கள் பதற்றத்துடன் தேடியுள்ளனர்.

இதன் பின்னர் அவர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டு உடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-101)

## விக்கியைக்...

படுகின்றன. ஞானசார தேரரைக் கைது செய்வதாயின், அதற்கு முன்னர் வடக்கு முதலமைச்சர் விக்கினேஸ்வரனைக் கைது செய்யவேண்டும்.

விக்கினேஸ்வரனை மட்டுமன்றி அரச தலைவர் மைத்திரிபால, யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொள்ளக் கூடாது என்று தெரிவித்த மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கத்தையும் கைது செய்யவேண்டும். இவர்கள் மட்டுமின்றி, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், அமைச்சர்களான ரிசாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம் அதேபோல் அசாத் சாலி ஆகியோரையும் அரசு கைது செய்யுமாக இருந்தால், ஞானசார தேரர் உடனடியாகச் சரணடைவார் - என்றார்.

(த-5)

## வடக்கு...

எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு சபை முதல்வரும் நெடுஞ்சாலைகள் மற்றும் உயர்கல்வி அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை கேள்வி நேரத்தின்போது திருகோணமலை மாவட்டத்தில் உள்ள காணிப் பிரச்சினைகள் குறித்து காணி அமைச்சரிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கு அமைச்சர் கயந்த கருணாதிலக பதில் அளித்தார். பின்னர், காணிப் பிரச்சினை குறித்து மேலும் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல மேற்கண்டவாறு கூறினார்.

திருகோணமலை மாவட்ட காணிப் பிரச்சினை தொடர்பில் விளக்கமளித்த அமைச்சர் கயந்த கருணாதிலக,

"திருகோணமலை மாவட்டத்தில் புலியங்குளம் கிராம சேவகர் பிரிவிலுள்ள செல்வநயபுறம், ஆனந்தபுரி, தேவநகர், நித்தியபுரி லிங்க நகர் ஆகிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு காணி வழங்குவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. 201 பெப்ரவரி 26ஆம் திகதி செல்வநாயக புறத்தில் காணிக்கச்சேரியொன்றை நடத்தியிருந்தோம். அதில் 46 பேர் கலந்துகொண்டதுடன், காணிகளுக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்ள மாகாண காணி ஆணையாளருக்கு ஆவணம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனந்தபுரி கிராமத்தில் 55 ஏக்கர் காணியும் நித்தியபுரி கிராமத்தில் 35 ஏக்கர் காணியும் சுவீகரிக்கப்படவுள்ளது. அதற்கான கட்டளைகளை முறையே காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 4ஆம், 2ஆம் உறுப்புரைகளுக்கு அமைய பிரதேச செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளோம்.

அதுதவிர, தேவநகர், நல்லூர் ஆகியவற்றுக்கு எதிர்காலத்தில் காணிக் கச்சேரிகளை நடத்தி அந்தப் பிரதேச மக்களுக்குக் காணி உறுதிப் பத்திரங்களை வழங்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

அதுதவிர, நாளை (இன்று) நான் காணி அமைச்சராகக் கடமை ஏற்கவுள்ளேன். பின்னர், அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோரது ஆலோசனைக்கு அமைய எமது தேர்தல் வாக்குறுதியில் குறிப்பிடப்பட்டிருந்த இலட்சக்கணக்கானவர்களுக்குக் காணி உறுதிப்பத்திரம் வழங்கும் தேசிய செயற்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பேன்" - என்றார் கஜந்த.

பின்னர் கருத்துத் தெரிவித்த சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, "அமைச்சர் சுவாமிநாதனிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களுக்கு அமைய நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் 5 ஆயிரம் ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. மேலும், 3 ஆயிரம் ஏக்கர் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எந்த நாளும் இது தொடர்பில் கேள்வி எழுப்புவது எமக்குப் பிரச்சினை இல்லை. ஆனால், மக்கள் மத்தியில் நாங்கள் காணி விடுவிப்பதில்லை என்ற தப்பபிப்ராயம் ஏற்படும்" - என்றார்.

(த-4)

## காங்கேசன்துறையில்...

பிடுங்கிச் சென்றனர். இராணுவத்தினரின் இந்தச் செயற்பாடு மக்கள் மத்தியில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸாரும் இதனைக் கண்டும் காணாததுபோல் அக்கறையற்று இருந்துள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் பலர் மோட்டார் சைக்கிள்களுடன் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் வாகனங்களுடன் கடத்தப்பட்டிருந்தனர். அவ்வாறு கடத்தப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிள்களாக அவை இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இராணுவத்தினரின் பிடியிலிருந்த இடங்களில் காங்கேசன்துறையும் உள்ளடங்கும். சில மாதங்களுக்கு முன்னர் குறித்த பகுதி விடுவிக்கப்பட்டிருந்தது. அங்கு மீள்குடியேறச் சென்றவர்கள் தமது கிணறுகளைத் துப்புரவு செய்தபோது 2 மோட்டார் சைக்கிள்களையும் மற்றொரு மோட்டார் சைக்கிளின் பாகங்களையும் மீட்டுள்ளனர். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. பொலிஸார் அங்கு செல்வதற்கு முன்னர் அங்கு விரைந்த ராணுவத்தினர் என்று கூறியவர்கள் குறித்த மோட்டார் சைக்கிள்களின் இலக்கத் தகடுகளைப் பிடுங்கிச் சென்றுள்ளனர். அதன் பின்னரே பொலிஸார் அங்கு சென்று பார்வையிட்டுச் சென்றனர் என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்ட புது வீதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றிலேயே இவை மீட்கப்பட்டன.

குறித்த பகுதியில் உள்ள கிணறுகளில் வெடிபொருள்களும், துப்பாக்கிகளும் மீட்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

(த-4-10-26-101)

## வாய்ப்பூட்டு...

அறிய முடிகின்றது. வழிநடத்தல் குழுவின் மரதன் அமர்வு நேற்று மூன்றாவது நாளாகவும், நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

வழிநடத்தல் குழுவின் ஒவ்வொரு அமர்விலும் பேசப்படும் விடயங்கள் தமிழ் சிங்கள பத்திரிகைகளில் வெளிவருவது தொடர்பில் நேற்றைய அமர்வில் பேசப்பட்டுள்ளது. தற்போதைய சூழலில் ஊடகங்களில் இந்தச் சந்திப்புக்கள் தொடர்பில் வெளிவருவது உசிதனமானது அல்ல என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் வழிநடத்தல் குழுவில் பேசப்படும் விடயங்கள் தொடர்பில் எவருமே ஊடகங்களிடம் வாய் திறக்கக் கூடாது என்றும், வழிநடத்தல் குழுவின் தொடர் அமர்வு முடிந்ததும், பத்திரிகை அறிக்கை வெளியிடவும் தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது.

(வ-5)

## பிரிகேடியர்...

புலனாய்வுப் பிரிவினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத் தில் முன்னிலையாகிய பின்னர் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்டத்தின் ரத்துபஸ்வெல பகுதியில், 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் முதலாம் திகதி, அந்தப் பிரதேச மக்கள் சுத்தமான குடிதண்ணீரைக் கோரிப் போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக இராணுவத்தினர் களமிறக்கப்பட்டனர். போராட்டக்காரர்கள் மீது தடியடி மேற்கொள்ளப்பட்டுப் பின்னர் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் மூவர் உயிரிழந்ததுடன் 30 பேர் காயமடைந்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டு வந்தன. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அரச தலைவர் ஆணைக்குழு என்பனவும் விசாரணைகளை நடத்தியிருந்தது.

பாதிக்கப்பட்ட 33 பேருக்கும், 4.6 மில்லியன் ரூபா நட்டஈடும் வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், துப்பாக்கிச் சூடு நடத்தியதாகக் கூறப்படும் இராணுவச் சிப்பாய்கள் மூவர் கடந்த மாதம் கைது செய்யப்பட்டிருந்தனர். துப்பாக்கிச் சூட்டுக்குக் கட்டளை பிறப்பித்தாகக் கூறப்படும் பிரிகேடியர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இறுதிக்கட்டப் போரில் மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தலைமையிலான 58ஆவது டிவிசனின் முதலாவது பிரிகேட்டுக்கு லெப். கேணல் தேசப்பிரிய குணவர்த்தனவே கட்டளை அதிகாரியாக பணியாற்றியிருந்தார். இந்தப் படைப்பிரிவு இறுதிக்கட்டப் போரில் போர்க்குற்றங்களை இழைத்ததாகக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

(த-5)

## கிணற்றுடன்...

அந்தப் பிரதேசத்தைச் சூழச் சுமார் 100 மீற்றர் தூரத்தினுள் மக்கள் எவரையும், வெடி வைத்து அழிக்கும் வரை பிரவேசிக்க வேண்டாம் என்று பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இராணுவத்தினரின் முழுமையான கட்டுப்பாட்டில் 27 வருடங்களாக இருந்த தையிட்டிப் பிரதேசம் கடந்த மாதம் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டது. மக்கள் தமது காணிகளைத் துப்பரவு செய்து வருகின்றனர். கிணற்றை இறைத்துத் துப்புரவு செய்ய முற்பட்டபோது, வெடிபொருள்கள் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

கடந்த 10 தினங்களுக்கு முன்னர் மேற்படி கிணற்றிலிருந்து 300 கைக்குண்டுகள் மீட்கப்பட்டிருந்தன. மறுநாள் 400 கைக்குண்டுகள் மற்றும் ஏனைய ஆயுதங்கள் அந்தக் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டிருந்தன. இந்த நிலையில் நேற்று முன்தினம் 250 கைக்குண்டுகள் மீட்கப்பட்டிருந்தன. நேற்றைய தினமும் ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தன.

கிணற்றில் இன்னமும் ஆயுதங்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ள பொலிஸார், அவற்றை மீட்க முடியாத நிலை காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். இதன் காரணமாக எஞ்சியுள்ள ஆயுதங்களை கிணற்றினுள்ளே வெடிக்க வைத்து அழிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று மதியத்திற்குள் இவை வெடிக்க வைக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(த-5-26)

## அமைச்சர்கள்...

மாகாண சபையின் 93ஆவது அமர்வு அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, அமைச்சர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கைகள் எப்போது பகிரங்கப்படுத்தப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா முதலமைச்சரிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், விசாரணை அறிக்கை தற்போது பரிசீலனையில் உள்ளது. அடுத்த அமர்வில் விசாரணை அறிக்கை பகிரங்கப்படுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்படி வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி கூடவுள்ளது. அதில் முதலமைச்சர் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட விசாரணை அறிக்கையைச் சபையில் சமர்ப்பிப்பார்.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் உட்பட மற்றும் பல குற்றச்சாட்டுக்கள் பல்வேறு தரப்புக்களால் முன்வைக்கப்பட்டமையால் அமைச்சர்களை விசாரணை செய்யுமாறு மாகாண சபை உறு...ர்கள் முதலமைச்சரிடம் கோரியிருந்தனர்.

இதனையடுத்து ஓய்வு பெற்ற நீதிபதிகள் உள்ளிட்ட மூவர் விசாரணையாளர்களாக நியமிக்கப் பட்டிருந்தனர். இந்தக் குழுவின் விசாரணைகள் தற்போது முடிவடைந்துள்ளன.

விசாரணை அறிக்கையில் முப்பதுக்கு மேற்பட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் ஆறு குற்றச்சாட்டுகள் பாரதூரமானவை என விசாரணையாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-8)

## மனைவியை...

இடம்பெற்று 8 வருடங்களுக்குப் பின்னர், தம்பதியருக்கு 3 குழந்தைகள் பிறந்த பின்னர் நேற்று இந்தத் தீர்ப்பு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்ட ஆணும் பாதிக்கப்பட்ட பெண்ணும் சம்பவம் இடம்பெற்றபோது காதலர்கள். எனினும் 16வயதுக்குட்பட்ட சிறுமியுடன் அவரது சம்மதத்துடனாக இருந் தாலும் பாலியல் உறவு வைத்துக்கொள்வது வன்புணர்வுக் குற்றமாகவே கருதப்படும் என... வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஆண் மீது மூன்று குற்றச்சாட்டுக்கள் சு... பட்டன. எனினும் சம்பவம் இடம்பெ... வருடங்களின் பின்னர், பெண்ணுக்... வயது நிறைவடைந்ததும் அவர்கள் ... ரும் சட்டபூர்வமாகத் திருமணம் ... கொண்டனர். கடந்த 8 ஆண்டுகளில் ... களுக்கு 3 பிள்ளைகளும் பிறந்துள்ள... எனினும், கணவன் மீதான சிறுமியை... புணர்வுக்கு உட்படுத்திய வழக்கு யாழ்... ணம் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்... வந்தது. நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

தனது கணவர் அந்த வயதில் தெரியா... செய்த தவறை மன்னித்து அவரை விடுதலை... செய்யுமாறு மனைவி நீதிபதியிடம் வேண்டினார். குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் கணவன் தனது குற்றத்தைத் தற்போது ஏற்றுக்கொள்கிறார் என்று அவரது சட்டத்தரணி கௌதமன் மன்றில் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண்ணையே அவர் சட்டப்படி திருமணம் செய்து கொண்டுள்ளமையால் அவருக்குக் குறைந்தபட்சத் தண்டனை வழங்குமாறு வேண்டினார். சந்தேகநபர் பாதிக்கப்பட்ட பெண்ணையே திருமணம் செய்துள்ளார் என்றாலும் அவர் புரிந்தது பாரதூரமான குற்றம் என்று மன்றுக்குச் சுட்டிக்காட்டினார் அரச சட்டவாதி.

அவர்கள் இருவரும் திருமணம் செய்து வாழ்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்தி அதனைக் கவனத்தில் எடுத்த நீதிபதி, எனினும் நிகழ்ந்தது பாரதூரமான குற்றம் என்பதால், குற்றவாளிக்கு மூன்று குற்றச்சாட்டுக்களுக்கும் தலா இரண்டு வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்து அதனை ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைத்தார். ஒவ்வொரு குற்றத்துக்கும் தண்டமாக தலா 2ஆயிரம் படி 6ஆயிரம் ரூபாவும், ஒவ்வொரு குற்றத்திற்குமான இழப்பீஈடாக 5ஆயிரம் ரூபாபடி 15ஆயிரம் ரூபாவும் விதித்து தீர்ப்பளித்தார்.

(உ-12)

## பெண் உட்பட...

ஊர்காவற்றுறை பாலைக்காட்டுச் சந்திப் பகுதியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் தனியார் பேருந்தும் துவிச்சக்கர வண்டியும் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த விபத்தில் மெலிஞ்சிமுனைப் பகுதியைச் சேர்ந்த ஜெயக்குமார் அகிலன்(வயது-18) என்ற இளைஞன் பரிதாபமாக உயிரிழந்தான்.

இந்த விபத்தையடுத்து அந்தப் பகுதியில் கூடிய 200 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் விபத்தை ஏற்படுத்திய தனியார் பேருந்தை அடித்து நொருக்கினர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட சந்தேக நபர்கள் என்ற அடிப்படையில் சிலருக்கு எதிராகப் பொலிஸார் நீதிமன்றில் கைது உத்தரவை பெற்றனர்.

அதன் அடிப்படையில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பெண் உட்பட 15 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகப் பொலிஸார் கூறினர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு பேரை நேற்றுமுன்தினம் கைது செய்த பொலிஸார், நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(த-8)

**வீடு வாடகைக்கு** சங்கத்தானை பொன்னுச்சாமி வீதியில் அமைந்துள்ள வீட்டில் வசிப்பவர்களுடன் சேர்ந்து சிறிய குடும்பம் வசிப்பதற்கான இடம்வாடகைக்கு உண்டு. தரகர் வேண்டாம். **தொடர்புகளுக்கு - 077 617 3927**

**ஜயோதா**
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1366
சீட்டிழுப்பு திகதி 2017.05.25
வெற்றி இலக்கங்கள்
07 13 26 56 E
அடுத்த சீட்டிழுப்புக்கான ஜக்பொட்
ரூ. 12,263,812/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

# கலைமதி கழகத்தின் கால்பந்தாட்ட முடிவு

யாழ்ப்பாணம், மே 26

கலைமதி விளையாட்டுக் கழகத்தின் கால்பந்துத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் ஐயனார் விளையாட்டுக் கழகம் மற்றும் பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் திருக்கும ரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் மோதியது. 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது திருக்குமரன் அணி.

இரண்டாவது ஆட்டத்தில் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து துறையூர் ஐயனார் அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது ஐயனார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் வரணி நியூபிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின.

இதில் பொம்மர்ஸ் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது.

(ம-108)

## மரண அறிவித்தல்

### சோமசுந்தரம் சங்கரலிங்கம்



யாழ்ப்பாணம், சிவப்பிரகாசம் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸ் இல் வசித்தவருமாகிய சோமசுந்தரம் சங்கரலிங்கம் 24.05.2017 புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகரெட்ணம் இரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இந்திராதேவியின் அன்புக்கணவரும் சந்திரசேகர் (சுவிஸ்), காலஞ்சென்ற யோகசேகரன் மற்றும் கஜந்தினி (பிரான்ஸ்), கஜசேகரன் (டென்மார்க்), அஜந்தசேகரன் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் கவிதா, சிறிமுருகராசா (கரன்), சிவாஜினி ஆகியோரின் அன்பு மாமனும் விருஷ்ணி, மயூரி, அனோஜி, ஆதித்யா, ஆதவா, சூரியா, கிறிஸ்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் யோகலட்சுமி (தேவி), தியாகலிங்கம் (பிரான்ஸ்), மகாலிங்கம் (விமலா களஞ்சியம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவராசா, விஜயராணி, புஸ்பலீலா, காலஞ்சென்ற தனபாலசிங்கம் மற்றும் தனலக்ஷ்மி, யசோதராதேவி, உருத்திரேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**31/1, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்:
**சகோதரர்கள்**

## மரண அறிவித்தல்கள்

### இராசதுரை ஞானலிங்கராசா (ஞானம்)



பூநகரி பரமன் கிராயை நிரந்தர வசிப்பிடமாகவும் விசுமடு குமார சாமிபுரம் 12 ஆம் கட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ஞாலிங்கராசா (ஞானம்) நேற்று (25.05.2017) காலமானார்.

அன்னார் இராசதுரை பாக்கியம் தம்பதியினரின் அன்பு மகனும் செல்வரத்தினம் காலஞ்சென்ற ஜெயலட்சுமி அவர்களின் அன்புக் கணவரும் புவனேஸ்வரி (பூநகரி), சிவலிங்கராசா (கல்மடு), விக்கிரமராசா(வவுனியா), காலஞ்சென்ற குணசிங்கம் மற்றும் சரஸ்வதி (சுது மலை), இரத்தினேஸ்வரி (கல்மடு) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற ஞானசேகரன் மற்றும் சுதாகரன் (நெதர்லாந்து), ஜங்கரன் (சுவிஸ்),காலஞ்சென்ற சுபாஸ்கரன் மற்றும்மதுரா (பிரான்ஸ்), செல்வசேகரன் (நெதர்லாந்து), செல்வ மலர், அபிரா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சோதிமலர், நந்தினி, லவணன், வின்சனா, சுலக்சனா, ஆகியோரின் அன்பு மாமனும், மயூரன், மதுசன், (விசுமடு மகாவித்தியாலயம்), லவின், சுபாஸ்வின் (பிரான்ஸ்), யுவன் (அருணோதயா பாடசாலை, வவுனியா) ஆகியோரின் அன்புபேரனும்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2017) பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 12 ஆம் கட்டை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி விஜயலட்சுமி பத்மநாதன்



புத்தூர் கிழக்கு, புத்தூரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி பத்மநாதன் நேற்று (25.05.2017), வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் லலிதாதேவி காலஞ் சென்ற பரமேஸ்வரன் மற்றும் கரிகரன் (வலி கிழக்கு பிரதேசசபை உரும்பிராய்) ஆகியோரின் அன்புத்தாயாரும் கனகராஜா (தேசிய வீடமைப்பு அதிகார சபை), தவமலர் ஆகியோரின் அன்புமாமியும் காலஞ் சென்ற அஜிபன், மற்றும் டகிதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2017) வெள்ளிக்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கிந்துசிட்டி இந்து மயானதுக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
**புத்தூர் கிழக்கு,**
**புத்தூர்.**

**குடும்பத்தினர்.**
**021 223 2149**

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணிம்



புங்குடுதீவு 12, வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை, சிவப்பிரகாசம் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சிவசுப்பிரமணியம் நேற்று (25.05.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - நல்லதங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயம்பிள்ளை - அன்னபூரணப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும் சிவசுப்பிரமணியம் (செல்லத்துரை - ஓய்வு நிலை ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் சுலோசனா (ஆசிரியர் யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரி), சுசீலா (கனடா), சிவநேசன் (பிரான்ஸ்), சசிகலா (யாழ்ப்பாணம்), சிவதாசன் (கனடா), சிவகாந்தன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் சர்வகுணசீலன் ( ஓய்வு நிலை கிராமசேகவர்), வசந்தகுமாரன் (கனடா) காலஞ்சென்ற பத்மரூபி (பிரான்ஸ்), திருலிங்கநாதன் (அபிராமி சூ சென்ரர், யாழ்ப்பாணம்), கிரிசாம்பாள் (கனடா), கற்பகரூபி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, சிந்தாமணி (சிந்து), இராசேந்திரம், தம்பாப்பிள்ளை, வைத்திலிங்கம் மற்றும் குமரையா (கொழும்பு), குணமாலை (கொழும்பு), சாந்தலிங்கம் (சுவிஸ்) காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சிவராசா (கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணியும் காலஞ்சென்றவர்களான நாகநாதி, சிவஞானம் மற்றும் அங்கயற்கன்னி (புங்குடுதீவு) காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் அன்னலட்சுமி (கனடா), நாகம்மா (கொழும்பு), ரதிதேவி (கொழும்பு), விஜயலட்சுமி (சுவிஸ்), புஸ்பராணி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகலியும் வினோகாந்தன் (ஆசிரியர் கிளி/கிளிநொச்சி ம.வி) - பிரகல்யா (ஆசிரியர் யா/ சரவணை நாகேஸ்வரி ம.வி), பிரணவன், டிருபா, அஜிதா, சரண்யா (கனடா), சிவாம்சன், சிவானுஜன், பிரனுதா (பிரான்ஸ்), திலக்ஷன், சதுர்யன், அபிராமி, அனோயா, லக்சா (கனடா), சங்கீர்த்தனி, சயானி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அஸ்விகா, அகர்ஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.05.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.7, சிவப்பிரகாசம் வீதி,**
**வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 222 5236, 077 839 2158**

## இரண்டாவது ஆட்டம் நாளை

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது ஒருநாள் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

மினி உலகக் கிண்ணத் தொடருக்கு தயார்படுத்தலாக இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வென்ற காரணத்தால் நாளை நடைபெறும் ஆட்டத்தில் வெற்றி பெறவேண்டும் என்ற கட்டாயம் தென்னாபிரிக்காவுக்கு உள்ளது.

மாறாக இந்த ஆட்டத்திலும் இங்கிலாந்து வென்றால் இறுதி ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் கிண்ணம் இங்கிலாந்திடமே செல்லும்.

முதலாவது ஆட்டத்தில் தோல்வியடைந்த பின்னரும், தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையை தென்னாபிரிக்க அணித் தலைவர் வில்லியர்ஸ் வெளிப்படுத்தியிருந்தார்.

இதுவும் இந்தத் தொடரில் எதிர்பார்ப்புகள் அதிகமாக இருக்க முக்கிய காரணமாக அமைகிறது. (ம)



ஐரோப்பிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் மன்செஸ்டர் யுனைற்ரெட் ஆம்ஸ்ரெர்டாம் அணிகள் மோதின. இந்த ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பாக, மன்செஸ்டர் நகரில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தற்கொலைத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தின் முன்பும் இரு அணி வீரர்களும் இணைந்து அஞ்சலி செலுத்தினர். (ம)

## இலங்கை – ஆஸி. இன்று பலப்பரீட்சை

மினி உலகக்கிண்ணத் தொடருக்கான பயிற்சி ஆட்டத்தில் இலங்கை – ஆஸ்திரேலியா அணிகள் இன்று மோதவுள்ளன.

முன்னதாக முடிவடைந்த ஸ்கொட்லாந்துக்கு எதிரான இரண்டு பயிற்சி ஆட்டங்களில் இலங்கை ஒன்றில் வெற்றியும், ஒன்றில் தோல்வியும் கண்டமை குறிப்பிடத்தக்கது. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டம் இலங்கையின் பலம் மற்றும் பலவீனத்தை பரிசோதித்துப் பார்க்க சிறந்த ஆட்டமாக அமையும் என்று கருதப்படுகிறது. (ம)

# தென்னாபிரிக்க அணியை வீழ்த்தியது இங்கிலாந்து

இங்கிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 6 இலக்குகளை இழந்து 339 ஓட்டங்களைக் குவித்தது. அணித்தலைவர் மோர்கன் 107 ஓட்டங்களைக் குவித்தார். மொயின் அலி ஆட்டமிழக்காமல் 77 ஓட்டங்களைச் சேர்த்தார்.

பந்துவீச்சில் மொறிஸ், பிளுக்வையோ இருவரும் தலா 2 இலக்குகளையும், ராபாடா, பார்னெல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்க அணிக்கு அம்லா, பிளாசிஸ், வில்லியர்ஸ் மூவரும் ஓரளவு சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் ஏனைய வீரர்கள் பிரகாசிக்கத் தவற 45 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 267 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. அதிகபட்சமாக அம்லா 73 ஓட்டங்களையும், பிளாசிஸ் 67 ஓட்டங்களையும், வில்லியர்ஸ் 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் வோக்ஸ் 4 இலக்குகளையும், ரசிட், மொயின் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும், வூட், பிளங்கட் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்பட்ட மொயின் அலி ஆட்டநாயகனாகத் தெரிவானார். (ம)




## கனவு மெய்ப்படுமா?

ஓர் உலகக்கிண்ணத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற நியூசிலாந்து அணியின் கனவு இன்றுவரை மெய்ப்படாமல் நீண்டுகொண்டே செல்கிறது. அந்த அணி மினி உலகக்கிண்ணத்தையாவது கைப்பற்றுமா என்பது கிரிக்கெட் ரசிகர்கள் பலரினதும் பொதுவான எதிர்பார்ப்பாக உள்ளது.

2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெற்றிருந்தது நியூசிலாந்து. நியூசிலாந்தை வீழ்த்தி, ஆஸ்திரேலியா கிண்ணம் வென்றது. உலகக்கிண்ணத் தொடரில் இறுதிக்குத் தகுதிபெற்றமையே நியூசிலாந்தின் ஆகச் சிறந்த அடைவாக உள்ள நிலையில் நடப்பு வருடத்தில் அந்த அணி கிண்ணம் வெல்லுமா என்பது தொடர்பில் பெரிய அளவில் எதிர்பார்ப்பு உள்ளது.



வேகப்பந்து வீச்சுடன் சகல துறைகளிலும் சிறப்பாகச் செயற்படக்கூடிய அண்டர்சன், கிராண்ட்ஹோம் நியூசிலாந்தின் பெரும் பலம். சவுத்தி, போல்ட் கூட்டணியும் மிரட்ட வல்லது.

நியூசிலாந்து அணி - வில்லியம்சன் (தலைவர்), போல்ட், கிராண்ட்ஹோம், லாதம், மில்னி, பட்டேல், சான்நெர், ரெய்லர், அன்டர்சன், புறூம், கப்ரில், மக்கெலி நகன், நீஸ்கம், ரோஞ்சி, சவுத்தி.

## இறுதியில் பண்டத்தரிப்பு பெண்கள்

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத்தில், வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணியை வீழ்த்தி பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்ற அரையிறுதியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பண்டத்தரிப்பு பெண்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்களில் 56 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புதுக்குளம் மகா வித்தியாலய அணி 45 ஓட்டங்களை மட்டும்பெற்று 11 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. (ம-23)

# விக்ரோறியாக் கல்லூரி அணி இறுதியாட்டத்துக்குச் சென்றது

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப்பாட்டத் தொடரில் 20 வயது பெண்கள் பிரிவில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி இறுதிக்குத் தகுதிபெற்றது.

ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியாக் கல்லூரி அணி நிர்ணயிக்கப்பட்ட 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 93 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக தேனுசா ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், நிந்துசா 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

94 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய நெல்லியடி மத்திய கல்லூரி அணி 6 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 43 ஓட்டங்களை மட்டுமே பெற்று 50 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பிரியவதனா பெற்ற 14 ஓட்டங்களே அதிகபட்சம். பந்துவீச்சில் தேனுசா, கலைமதி, சர்மினி மூவரும் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம-23)





# ஊரெழு றோயல் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்க ளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழுறோயல் அணி அபார வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் அணியை எதிர்த்து ஊரேழு றோயல் அணி மோதியது.

ஆட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் றோயலின் முதல் கோலைப் பதிவுசெய்தார் நிதர்சன். 21 ஆவது நிமிடத்தில் பிரசன்னா மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடி வில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது றோயல் அணி.

இரண்டாம் பாதியின் 27 ஆவது நிமிடத்தில் நிதர்சன் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முடி வில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற் றது ஊரெழு றோயல் அணி. (ம-23)

# இன்றைய மோதல்கள்

கரணவாய், மே 26

நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங் கள் சில இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதா னத்தில் இன்று இடம்பெறவுள்ளன. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட் டுக் கழகத்தை எதிர்த்து அல்வாய் நக்கீரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை இருதயராஜா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தீவகம் நசரேத் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ம-108)



யாழ். மாவட்ட பிர தேச செயலக அணி களுக்கு இடையி லானவிளையாட்டுக் கள் அடுத்த வருடம் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் நடத்தப்படவுள்ளது. இதற்கான அறிவிப்பு யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகனால் விடுக்கப்பட்டதுடன் கொடியும் முறைப் படி கையளிக்கப்பட் டது. (ம-422-108)

# மென்பந்துத் துடுப்பாட்டத்தின் அரையிறுதியாட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம், மே 26

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மென்பந்துத் துடுப் பாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவு அரையிறுதி ஆட்டங்கள் இன்று இடம்பெறவுள்ளன.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள முதலாவது அரையிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி மோதவுள் ளது. இரண்டாவது அரையிறுதி யாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து வவு னியா தமிழ் மத்திய மகா வித்தியா லய அணி மோதவுள்ளது. (ம-23)

**அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாணமண்டபம்**

**சலுகைக் கட்டணத்தில் சேவை**

✹ மேளம், குருக்கள், தரமான மரக்கறிச் சாப்பாடு ஒன்று ரூபா 300 மட்டும் மண்டபம் இலவசம் (கட்டணம் இல்லை)

அல்லது

✹ தரமான மரக்கறிச்சாப்பாடு ஒன்று ரூபா 200. மேளம், குருக்கள், வசதியுடன் மண்டபத் திற்கு 40 ஆயிரம் ரூபா மட்டும் விருப்பமானதை தெரிவு செய்து பயன் படுத்திக் கொள்ளலாம்.



✹ குளிரூட்டி (A.C) வசதி தேவையாயின் மேலதிக கட்டணம் தொடர்பாக கலந்துரையாடலாம்.

✹ வீடியோ, போட்டோ போன்ற வசதிகளும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

மக்களுக்கான மனம் நிறைந்த சேவையை வழங்குவதற்கு விசேட சலுகைகளுடன் மிகக்குறைந்த சலுகைக்கட்டணத்தில் எமது சேவையை வழங்குகின்றோம்.

உங்கள் விருப்பமே எங்கள் சேவை.
வீடியோ கலாமினி
இராஜமாணிக்கம் கல்யாணமண்டபம்
அச்சுவேலி -0773053080

# லயனல் மெஸ்ஸியின் குற்றம் உறுதியானது

வரி ஏய்ப்பு விவகாரத்தில் மெஸ்ஸிக்கு விதிக்கப்பட்ட சிறைத் தண்டனையை உறுதிசெய்தது ஸ்பெய்ன் உயர்நீதிமன்றம்.

உலகப் புகழ்பெற்ற கால்பந்து நட்சத்திரமான ஆர்ஜென் ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி, கழகத்தைப் பொறுத்தமட்டில் ஸ்பெய்னின் பார்சிலோனாவுக்காக விளையாடி வருகிறார். இவர் வரி ஏய்ப்பில் ஈடுபட்டார் என்று அண்மையில் குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. கடந்த 2007ஆம் ஆண்டு முதல் 2009ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 4.1 மில்லியன் யூரோ அளவுக்கு வரி ஏய்ப்புச் செய்தார் என்பது நிரூபிக்கப் பட்டதை அடுத்து அவருக்கும் அதற்கு உடந்தையாக இருந்த லயனல் மெஸ்ஸியின் தந்தை ஜோர்ஸ் மெஸ் ஸிக்கும் 21 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது. இதை எதிர்த்து மெஸ்ஸி மேன்முறையீடு செய் தார். இந்த வழங்கு ஸ்பெய்ன் உயர்நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. நேற்றுமுன்தினம் தண்டனை உறுதிசெய்யப்பட்டது.

ஸ்பெய்ன் சட்டத்தின்படி 24 மாதங்கள் அல்லது அதற் கும் குறைவான காலங்கள் சிறைத்தண்டனை பெற்ற ஒருவர் நன்நடத்தையின் அடிப்படையில் தனது தண் டனைக் காலத்தை சிறைக்கு வெளியிலேயே செலவி டலாம் என்பதால் லயனல் மெஸ்ஸி சிறைக்குச் செல்ல வேண்டிய தேவையில்லை. (ம)

## மரண அறிவித்தல்

### திருமதி அனுராதா சுரபாஸ்கரன்



படித்தமகளிர்திட்டம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி அனுராதா சுரபாஸ்க ரன் நேற்று (25.05.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவத்திரு சின்னத்தம்பி நவரத்தினம் ஐயா (தர்மகர்த்தா ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தா னம்) நவரத்தினம் மனோன்மணி தம் பதியரின் அன்பு மகளும் சுரபாஸ்கரன் (துர்க்கா ஸ்ரோர்ஸ் ப.ம. திட்டம்) அவர் களின் அன்பு மனைவியும் முகுந்தன் குருக்கள் (ஸ்ரீ ஞானதுர்க்கை அம்மன் தேவஸ்தானம்), பிரதீபன் (ஆஸ்திரே லியா), டினேஸ் (ஆஸ்திரேலியா), ஜெயதுர்க்கா, ஸ்ரீநந்தன் (ஆஸ்திரே லியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பிரணவன் (தரம் 4 மாணவன் யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்), மிதுஷன் ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்ப டும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

**"துர்க்காபுரம்"**
**படித்த மகளிர் திட்டம்,**
**மிருசுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# நியூசியை வென்றது பங்களாதேஷ் அணி

முத்தரப்புத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தைத் தோற்கடித் தது பங்களாதேஷ் அணி.

நியூசிலாந்து, பங்களாதேஷ், அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் அயர்லாந்தில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தை எதிர்த்து பங்களாதேஷ் மோதி யது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களா தேஷ் முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய் தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8 இலக்குகள் இழப்புக்கு 270 ஓட்டங்களைக் குவித்தது. அணியின் பொறுப்புத் தலைவராகச் செயற்பட்ட லாதம் 84 ஓட்டங்களையும், புறாம் 63 ஓட்டங்களை யும், ரெய்லர் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்க ளையும் சேர்த்தனர்.

பந்துவீச்சில் மோர்சா, ஹொசைன், சகிப் அல் ஹசன் மூவரும் தலா இரு இலக்குகளை யும், ரகுமான், ரூபல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.



பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 10 பந்துகள் மீதமிருக்க 5 இலக்குகளை மாத் திரம் இழந்து வெற்றிபெற்றது. தமீம் இக்பால் 65 ஓட்டங்களையும், சபிர் ரகுமான் 65 ஓட் டங்களையும், ரகிம் ஆட்டமிழக்காமல் 45 ஓட்டங்களையும் பெற்று வெற்றிக்கு வித்திட்டனர்.

இந்த ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற் றாலும் லீக் சுற்றில் பெற்ற புள்ளி களின் அடிப் படையில் நியூசிலாந்து முத்தரப்புத் தொடரின் சம்பியனானது. லாதம் தொடராட்ட நாயகனா கத் தெரிவானார். (ம)

வகுப்புக்கள்
A/L - இந்து நாகரிகம், இந்து சமயம்
A தர சித்திக்குக் கற்பிக்கப்படும்.
ஆசிரியர் :- சாந்தன்
076 634 5136, 077 903 7303

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.